
வி. வ. சஸோனவ்

# கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் “கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை

முன்னேற்றப் பதிப்பகம்



வி. வ. சஸோனவ்

# கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் "கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை"

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
சென்னை

C 243
54
E510
NEW CENTURY BOOK HOUSE PVT. LTD.
Rs 5·00
MADRAS-98
15/4/83

மொழிபெயர்ப்பாளர்: டாக்டர்
இரா. பாஸ்கரன்

**В.В. Сазонов**

О "МАНИФЕСТЕ КОММУНИСТИЧЕСКОЙ ПАРТИИ"
К.МАРКСА И Ф. ЭНГЕЛЬСА
*на тамильском языке*

**Sazonov V.**

ON THE "MANIFESTO OF THE COMMUNIST PARTY"
OF MARX AND ENGELS

*in Tamil*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1987

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$C \frac{0102020000-320}{014(01)-87} 318-87$

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . 4

அத்தியாயம் ஒன்று
கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானத்தை நோக்கி . . . . . . . 7

அத்தியாயம் இரண்டு
பாட்டாளி வர்க்க கட்சியின் பிறப்பு 41

அத்தியாயம் மூன்று
''இந்தச் சிறு பிரசுரம் மிகப் பெரிய நூல் தொகுதிகளுக்கு சமமானது'' 93

அத்தியாயம் நான்கு
கோடானுகோடி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேலைத்திட்டம் 149

# முன்னுரை

கா. மார்க்சும் பி. எங்கெல்சும் உயிர்வாழ்ந்த போதே **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** பல்வேறு நாடுகளில், பல்வேறு மொழிகளில் ஏராளமான பதிப்புகளில் வெளிவந்தது. தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய இதன் வாசகர் வட்டம் மேன்மேலும் பெருகியது. 1888ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கிலப் பதிப்பின் முன்னுரையில் பி. எங்கெல்ஸ், ''**அறிக்கையின்** வரலாறு நவீன தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றைக் கணிசமாக பிரதிபலிக்கிறது'' என்று குறிப்பிட்டு மேற்கொண்டு பின்வருமாறு கூறியது தற்செயல் அல்ல: ''தற்போது சோஷலிச இலக்கியங்கள் யாவற்றிலும் இது மிகவும் பல்கிப் பரவி அதிக அளவுக்கு அகிலம் தழுவிய வெளியீடாய் இருக்கிறது என்பதிலும் சைபீரியாவிலிருந்து கலிபோர்னியா வரையில் கோடானுகோடி தொழிலாளி மக்களால் பொது வேலைத்திட்டமாய் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதிலும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை'' *.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 19.

நம் நாட்களிலும் இந்த மகத்தான மார்க்சிய படைப்பின் பாலான ஆர்வம் மிகவும் அதிகம். இன்று **அறிக்கை** கிட்டத்தட்ட உலக மொழிகள் எல்லாவற்றிலும் வெளியிடப் பட்டுள்ளது; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களும் மற்ற மக்களும் இதை ஆழ்ந்து படிக்கின்றனர். **அறிக்கையின்** பாலான ஆர்வம் வெறுமனே வரலாற்று ரீதியானது மட்டுமல்ல. பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்காக ஏங்கித் தவிக்கும் முற்போக்கு சிந்தனையாளர்கள் இப்படைப்பின் கருத்துகளை நாடும் போது தம் போராட்டத்தின் மிகக் கடுமையான, உடனடிக் கேள்விகளுக்கான பதில்களைப் பெறுகின்றனர், பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையின் சிக்கலான புலப்பாடுகளை ஆராயும் முறையியலை அறிகின்றனர், வரலாற்று ரீதியாக மிகப்பெரும் நன்னம்பிக்கையைப் பெறுகின்றனர்.

எந்த ஒரு வரலாற்று ஆவணத்தையும் போன்றே **அறிக்கையும்** தன் காலத்தின் முத்திரையைப் பெற்றுள்ளது. எனவே இது தோன்றிய வரலாற்று சகாப்தத்துடனான தொடர்பில் மட்டுமே இதை சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும். இந்தச் சிறு நூலில், முதல் சர்வதேச கம்யூனிஸ்டு ஸ்தாபனத்தின் செயல்திட்டம் என்ற வகையில் **அறிக்கை** தோன்ற வழிகோலிய சமூக-புரட்சி இயக்கத்தின் வரலாறு சுருக்கமாகத் தரப்படுகிறது; **அறிக்கையின்** முக்கியக் கருத்துகள் யாவும் எப்படித்

தோன்றின என்று ஆராயப்படுகிறது, இதன் உட்சாரம் தெளிவுபடுத்தப்படுகிறது, மார்க்சும் எங்கெல்சும் அவர்களுடைய முன்னோடிகளுடன் ஒப்பிடுகையில் **புதிதாக** என்ன செய்தார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது, வரலாற்றின் விமரிசனங்களை **அறிக்கை** எப்படி எதிர்த்து நின்றது காட்டப்படுகிறது.

அத்தியாயம் ஒன்று

# கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானத்தை நோக்கி

''தொழிலாளி வர்க்கத்துக்கு மார்க்சும் எங்கெல்சும் ஆற்றிய பணியைப் பற்றி ஒரு சில சொற்களிலே பின்வருமாறு சொல்லி விடலாம்: தொழிலாளி வர்க்கம் தன்னைத் தானே அறிந்து கொள்ளுமாறு, தன்னைப் பற்றிய உணர்வு கொள்ளுமாறு அவர்கள் போதித்தார்கள்; மேலும், கனவுகள் இருந்த இடத்தில் விஞ்ஞானத்தை நிலை நாட்டினார்கள்.'' *

வி. இ. லெனின்.

பொருளாதார மற்றும் சமூக ரீதியான சமமின்மை, சுரண்டல் மற்றும் மனிதனை மனிதன் ஒடுக்குவது ஆகியவை இல்லாத சமுதாயத்தைப் பற்றி மக்கள் பல யுகங்களாக கனவு கண்டனர். நூற்றாண்டுகள் உருண்டோடின, மனிதகுல வரலாறு தன் போக்கில் நடை போட்டது, ஆனால் முழு சமத்துவம், உண்மையான நீதி எனும் ''பொற் காலம்'' மனிதர்களின் கனவாக

* வி. இ. லெனின், மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1985, பக்கம் 86.

மட்டுமே இருந்தது.

உலகில் தனிச்சொத்துடைமை உறவுகள் தோன்றி மனிதர்களுக்கு இடையிலான உறவு களின் தன்மையை வரையறுக்கத் துவங்கியதி லிருந்து, செல்வமானது மக்களை இதைத் தோற்றுவிப்பவர்கள் என்றும் இதைப் பயன் படுத்துபவர்கள் என்றும் பிரித்து உலகில் ஆளத் துவங்கியதிலிருந்து புதிய ''பொற் காலம்'' பற்றிய கனவும் தோன்றியது.

ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினரின் இத் தகைய கனவுகள் நியதியாக சோஷலிச தன்மையை, அதாவது சுரண்டல் எதிர்ப்பு, சொத்துடைமை எதிர்ப்பு தன்மையைப் பெற்றன என்று கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் போதனையையும் லட்சியங்களையும் மிகச் சிறப்பாக பின்தொடர்ந்த வி. இ. லெனின் குறிப்பிட்டார். ''மனிதகுலம் பல நூற்றாண்டு களாக, ஆயிரக்கணக்கான வருடங்களாகக் கூட எல்லாச் சுரண்டலையும் அதன் ஒவ் வொரு வகையையும் 'உடனே' ஒழித்து விட வேண்டுமென்று கனவு கண்டு வந்திருக்கிறது''* என்று அவர் எழுதினார். ''பணக்காரன், ஏழை எனும் பாகுபாட்டை ஒழிக்க'' உள்ள நாட்டத்தை ''சோஷலிச குறிக்கோள்''**

* வி. இ. லெனின், குட்டி முதலாளித்துவ சோஷலிசமும் பாட்டாளி வர்க்க சோஷலிசமும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 11.

** வி. இ. லெனின், நிலப் பிரச்சினையும் சுதந்திரப் போராட்டமும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1974, பக்கங்கள் 7—8.

என்று வி. இ. லெனின் வரையறுத்தார்.

வரலாற்றுப் போக்கை இந்த நோக்கிலிருந்து பார்த்தால், பண்டைய காலத்தில் நடைபெற்ற ஏராளமான அடிமை எழுச்சிகள், மத்திய காலத்தில் கட்டுண்டு கிடந்த விவசாயிகள் நடத்திய போராட்டங்கள், சகலவிதமான சமூக-மத போதனைகள், கிராமியப் பாட்டுகள் போன்றவை சமூக சமத்துவம் பற்றிய கனவுகளைப் பிரதிபலித்தன என்று கூறலாம். ஆனால் இக்கனவுகள் மிகவும் தெளிவற்றவையாக இருந்தன. வர்க்கங்களையும் வர்க்க வேறுபாடுகளையும் ஒழித்துக் கட்டினால்தான் சமூக மற்றும் பொருளாதார சமத்துவத்தை அடைய முடியும் என்று உணர மனிதகுலம் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி வர வேண்டியிருந்தது. வர்க்கங்களை ஒழித்துக் கட்டுவது என்றால் அது எல்லாவற்றிற்கும் மேலாக இவை நிலவுவதன் பொருளாதார அடிப்படையை, அதாவது தனியுடைமை உறவுகளை ஒழித்துக் கட்டுவது என்பதைக் குறிக்கிறது. ஆனால் இதற்கான சூழ்நிலைகள், முதலாளித்துவ சமூக-பொருளாதார அமைப்பின் வளர்ச்சியோடு சேர்ந்துதான் தோன்றுகின்றன.

ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ சகாப்தத்திலேயே (15–16ஆம் நூற்றாண்டுகள்) முதலாளித்துவ உற்பத்தி வளரத் துவங்கியது; இத்தருணத்தில் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, இடையறாது மேம்படுத்தப்பட்டன; இவை கைத்தொழில் உற்

பத்தியை அகற்றின, பல்வேறு பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கின; புதிய நிலப்பரப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை காலனிகளாக மாற்றப்பட்டன, ஸ்தல மக்கள் வெட்கமின்றி கொள்ளையடிக்கப்பட்டனர், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கண்டங்களின் இயற்கைச் செல்வங்கள் சுரண்டப்பட்டன. அதே சமயம் மிக வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் விவசாயிகளும் கைத்தொழிலாளிகளும் பெருமளவில் திவாலடைவது நடைபெற்றது, ஒரு புறம் வர்த்தக மற்றும் தொழில்துறை முதலாளி வர்க்கமும் மறு புறம் பாட்டாளி வர்க்கமும் உருவாயின. முதலில் இப்பாட்டாளி வர்க்கம் மிகவும் எளிதில் நொறுங்கக் கூடியதாய், பன்முகம் கொண்டதாய், தன் பலத்தையும் சொந்த லட்சியங்களையும் உணராததாய் இருந்தது. எனவே அதிகரித்து வந்த சுரண்டலுக்கும் வறுமையடைதலுக்கும் எதிரான இதன் போராட்டம் தன்னிச்சையான கலகங்கள், இயந்திரங்களை உடைத்தல், ஆலைக் கட்டிடங்களை நொறுக்குதல் போன்றவற்றிலும் வெளிப்பட்டது. இயந்திரங்கள் தம் ஏழ்மை நிலைக்கு காரணமல்ல என்பது தொழிலாளர்களுக்கு இன்னமும் புரியவில்லை. எனவே இக்கட்டத்தில் தோன்றிய சோஷலிச மற்றும் கம்யூனிசப் போதனைகள் கற்பனாவாதத் தன்மையைக் கொண்டிருந்தது தற்செயல் அல்ல. "முதிர்ச்சியற்ற முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிலைமைகளுக்கும்

முதிர்ச்சியற்ற வர்க்க நிலைமைகளுக்கும் இணைவாய் முதிர்ச்சியற்ற தத்துவங்கள் முன்வைக்கப்பட்டன. சமுதாயப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு, வளர்ச்சியுறாத பொருளாதார நிலைமைகளில் புதையுண்டு இன்னமும் மறைந்தே கிடந்தது, இந்தத் தீர்வினைக் கற்பனாவாதிகள் மனித மூளையிலிருந்து உருவாக்க முயன்றார்கள்''* என்று பி. எங்கெல்ஸ் எழுதினார்.

இந்த ''முதிர்ச்சியற்ற தத்துவங்கள்'' மற்றும் சகலவித கற்பனாவாதங்களின் ஆசிரியர்கள் 16ஆம் நூற்றாண்டில் இருந்தே முதலாளித்துவத்தின் குறைகளைக் கடுமையாகச் சாடத் தொடங்கினார்கள். உழைப்பாளிகளின், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பயங்கர வறுமை, கடுமையான சுரண்டலைப் பற்றியும் ஏழ்மைக்கும் செல்வத்திற்கும் இடையே மேன்மேலும் அதிகரித்து வந்த இடைவெளியைக் குறித்தும் அவர்கள் கோபத்தோடு எழுதினார்கள். உற்பத்திக் கருவிகள் மற்றும் சாதனங்களின் மீதான தனியுடைமைதான் சொத்து மற்றும் சமூக ரீதியான சமமின்மைக்கான அடிப்படை என்பதை இவர்களில் பலர் சரியாகப் புரிந்து கொண்டனர். ''எங்கே வெறும் தனியுடைமை மட்டும் உள்ளதோ, எங்கே எல்லாவற்றையும் பணத்தால் அளக்கின்றனரோ அங்கே எப்போ

* பி. எங்கெல்ஸ், கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 66.

தாவது அரசுக் காரியங்கள் நியாயமாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுமா என்ன''* என்று 1516ல் தாமஸ் மோர் தன் கற்பனை யுலகத்தில் எழுதினார். எனவேதான் ஆங் கிலேயர் தா. மோர், இத்தாலியர் தொ. கம்ப னேல்லா, பிரெஞ்சுக்காரர்கள் ஜா. மெல்யே, கா. மாப்லீ, கி. பபேஃப் மற்றும் இவ ரது சீடர்கள் (16—18ஆம் நூற்றாண்டு கள்), பின்னால் மாபெரும் கற்பனாவாத சோஷலிஸ்டுகளாகிய ரா. ஓவன், அ. சான்-சிமோன், ஷ்ா. ஃபூரியே போன்றோர் எதிர் கால அரசு அமைப்பு பற்றிய தம் திட்ட நகல்களில் பொதுச் சொத்துடைமையின் அடிப் படையில் சமுதாய வாழ்க்கையை ஒழுங் கமைப்பது குறித்து எழுதினார்கள். பின்னால் விஞ்ஞான கம்யூனிசத்தின் ஆசான்கள் இவர் களுடைய கருத்துகளை வளர்த்து பயன் படுத்தினார்கள்.

ஆனால் விஞ்ஞான கம்யூனிசத்திற்கு முன் னோடிகளாக இருந்தவர்களின் தனிப்பட்ட சில முடிவுகளும் ஊகங்களும் மேதாவிலாசம் மிக்கவையாக இருந்தபோதிலும் மொத்தத்தில் இவர்களுடைய கருத்துகள் பெரிதும் கற் பனாவாதத் தன்மையைக் கொண்டிருந்தன. சொத்து ரீதியான, சமூக ரீதியான சமமின் மையை அகற்றுவதன் அவசியத்தை மட்டுமே இவர்கள் வெளிப்படுத்தினார்கள். இதற்கான

* Thomas More, *Complete Works,* Vol. 4, ed. by Edward Sturtz, New Haven and London, 1974, p. 103.

பாதைகளோ சாதனங்களோ அவர்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. சான்-சிமோன், ஃபூரியே மற்றும் ஓவன் பாட்டாளி வர்க்கத்தின் எதிர்காலம் மீது பெரும் ஆர்வத்தைக் காட்டியபோதிலும் இவர்கள் அதன் வரலாற்றுப் பங்கைப் புரிந்து கொள்ளவில்லை. ''இம்மூவருக்கும் பொதுவானது ஒன்று உண்டு: இவர்களில் எவரும், இதற்குள் வரலாற்று வளர்ச்சியால் தோற்றுவிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் நலன்களது பிரதிநிதியாய் முன்வரவில்லை. பிரெஞ்சுத் தத்துவவியலாளர்களைப் போலவே இவர்களும், குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தை விடுவிக்கப் போவதாய்ச் சொல்லாமல் உடனடியாக மனிதகுலம் அனைத்தையுமே விடுவிக்கப் போவதாய்க் கூறிக் கொள்கின்றனர்''* என்று இவர்களைப் பற்றி பி. எங்கெல்ஸ் எழுதினார். எனவே மாபெரும் கற்பனாவாதிகள் சமுதாயம் முழுவதையும், எல்லாவற்றிற்கும் மேலாக இதன் ஆட்சியாளர்களிடம் நிரந்தரமாக கெஞ்சினர், சோஷலிச அடிப்படைகளில் சமுதாயத்தை மாற்றியமைக்க இவர்கள் தாமாகவே முன் வருவார்களென எதிர்பார்த்தனர்.

வினியோகம் மற்றும் நுகர்வில் கறாரான சமத்துவத்தைப் பாதுகாத்ததிலும் துறவு வாழ்க்கையைப் பிரச்சாரம் செய்ததிலும் இன்ன பிறவற்றிலும் 16—18ஆம் நூற்றாண்டுகளின் கற்பனாவாதக் கருத்துகளின் வரலாற்று

---

* பி. எங்கெல்ஸ், **கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்**, பக்கம் 61.

ரீதியாக குறுகியத் தன்மை வெளிப்பட்டது. விஞ்ஞான கம்யூனிசம், மார்க்சியம், முந்தைய கண்ணோட்டங்களின் பலவீனமான அம்சங்களை அகற்றியது. ஆனாலும் இன்று வரை அறிவிலிகளின் எண்ணத்தில் கம்யூனிசம் என்பது எல்லாம் (மனைவிகள் கூட) பொதுவுடைமையாக்கப்பட்ட ஒரு சமுதாயமாக, கொச்சையான சர்வபொது சமன்நிலை நிலவும் சமுதாயமாக இருக்கிறது. இப்படி அற்பவாதிகளால் திரிக்கப்பட்ட, இழிவுபடுத்தப்பட்ட கொச்சையான சமன்நிலை கம்யூனிசத்துக்கும் பாட்டாளி வர்க்க சித்தாந்தத்திற்கும் பொதுவானது எதுவுமேயில்லை.

கற்பனாவாதப் போதனைகள் தொழிலாளி வர்க்கம், தொழிலாளர் இயக்கம், போராட்டத்துடன் இயல்பாக இணையாமல் இருந்ததுதான் இவை முழுமையற்றவையாக விளங்கியதற்கு முக்கியக் காரணமாகும். தொழிலாளி வர்க்கம் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே சக்திமிக்க சுயமான சக்தியாகியது. ஐரோப்பிய நாடுகளில் தொழில்துறை உற்பத்தியின் பெரும் வளர்ச்சி இதற்கு உதவியது. இது முன்னணியில் இருந்த நாடுகளின் மக்கள்தொகையின் கட்டமைப்பைக் கணிசமாக மாற்றியது. 19ஆம் நூற்றாண்டின் 20ஆம் ஆண்டுகளிலேயே பிரிட்டனில் சமுதாயம், மொத்தத்தில் பாட்டாளிகள், முதலாளிகள், நிலவுடைமையாளர்கள் (லேண்ட் லார்டுகள்) எனும் மூன்று முக்கிய வர்க்கங்களால் ஆனதாயிருந்தது.

பிரான்சிலும் ஜெர்மனியிலும் இந்த நிகழ்ச்சிப் போக்கு கணிசமாகக் கடினமானதாயும், மெதுவாகவும் நடந்தது; ஆனால் இங்கும் கைத்தொழிலாளர்கள், சிறு தொழில் வினைஞர் கள் மற்றும் விவசாயிகள் பெருமளவில் திவாலடைவதும் பாட்டாளி வர்க்கம் உருவா வதும் நடைபெற்றன.

1841ஆம் ஆண்டு வாக்கில் பிரிட்டனில் ஏற்கெனவே கிட்டத்தட்ட 40 லட்சம் தொழிலாளர்கள் இருந்தனர், அடுத்த 10 ஆண்டுகளில் இவர்களின் எண்ணிக்கை இன் னமும் 10 லட்சம் கூடியது. இவர்களுடைய உழைப்புச் சூழ்நிலைகள் பல சமயங்களில் சிறை சூழலை விடக் கடுமையானவையாக இருந்தன, ஊதியமோ மிகக் குறைவானதாக இருந்தது. தொழிலாளர்களின் ஊதியங் களையும் அக்காலத்தில் நிலவிய உணவுப் பொருட்களின் விலைகளையும் ஒப்பிட்டால் பின்வரும் விவரம் தெரிகிறது: வாரத்திற்கு நபர் ஒருவருக்கு 1 ஷில்லிங் 8 பென்சுகளைக் கொண்ட குடும்பம் இறைச்சி, வெண்ணெய், பாலடைக்கட்டி, காப்பி, தேநீர் முதலிய வற்றை வாங்கவில்லை, நோய்வாய்பட்டால் சிகிச்சை பெறும் வாய்ப்பு இக்குடும்பத்திற்கு இருக்கவில்லை. ஓட்சும் உருளைக் கிழங்கும் தான் இவர்களுடைய உணவில் பெரும் பகுதியாக இருந்தன.

எனவே, மானுடத் தன்மையற்ற வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகள் பற்றிய தொழிலாளர்களின் அதிருப்தி, ஆத்திரம்

மேன்மேலும் வளர்ந்து வந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. படிப்படியாக இவர்களுடைய போராட்டங்கள் உணர்வு பூர்வமான, ஒழுங் கமைக்கப்பட்ட தன்மையைப் பெற்றன. 1842 ஆகஸ்டில் பிரிட்டனில் லட்சக்கணக் கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து, மக்கள் சாசனத்தை, அதாவது சர்வபொது வாக்குரிமையை நிலைநாட்டும் சட்டத்தை ஏற்குமாறு நாடாளுமன்றத்திடம் கோரினார்கள். 1842 மேயில் நாடாளுமன்றத் திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் 33 லட்சத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துகள் இருந்தன. தொழிலாளர் இயக்கம் இவ்வளவு பரவலானதாக இதற்கு முன் இருந்ததே யில்லை. பிரான்சில் 1831லும் 1834லும் நடை பெற்ற லியோன் நூற்பாலைத் தொழிலாளர் களின் எழுச்சிகளும் 1844ல் ஜெர்மனியில் நடைபெற்ற சிலேஸிய நூற்பாலைத் தொழி லாளர்களின் எழுச்சியும் தொழிலாளர்கள் தம் சொந்த வர்க்க, அரசியல் நலன்களை உணரும் பாதையில் முக்கியப் பங்காற்றின. பாட்டாளி வர்க்கத்தின் இப்போராட்டங்கள் "வரலாறு பற்றிய கருத்தோட்டத்தில் தீர் மானகரமான மாறுதல்"* ஏற்பட வழிகோ லின என்று பி. எங்கெல்ஸ் எழுதினார்.

ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர் இயக்கம் அடக்க முடியாதவாறு வளர்ந்த போது, பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா

---

* அதே நூல், பக்கம் 92.

வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் (இது வெளிப்படையான, மூர்க்க மான மோதல்களாக மாறியது) முன்னணிக்கு வந்த போது, நடக்க கூடியவற்றை விஞ்ஞான ரீதியாக விளக்க வேண்டியதன் சமுதாயத் தேவை அதிகரித்தது. ஏனெனில் அத்தருணத்தி லேயே பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள், உழைப்பு மற்றும் மூலதன நலன்களின் ஒற்றுமை, முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் சர்வ பொது சீரிசைவு, இதன் நிரந்தர தன்மை, அசைக்க இயலா தன்மை பற்றிய கட்டுக் கதைகளை உருவாக்க ஆரம்பித்தனர்; இக் கட்டுக்கதைகள் இன்றும் கூட நிலவுகின்றன. ஆனால் இந்தக் கட்டுக்கதைகளுக்கு எல்லாம் மாறாக, எஜமானனையும் வேலையாளையும் நெஞ்சுருகும்படி இணைக்க வேண்டும் என்ற பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளின் அறைகூவல் களுக்கு மாறாக (இதன் அடிப்படையில்தான் சர்வபொது மலர்ச்சியைக் கட்ட வேண்டு மாம்) தொழிலாளர்களின் போராட்டங்கள் மேன்மேலும் அடிக்கடி நடக்கலாயின. பாட் டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற் கும் இடையிலான போராட்டம் கூர்மை யடைந்து வந்ததற்கான காரணங்களை மட்டும் விளக்க வேண்டியிருக்கவில்லை; முந் தைய வரலாறு முழுவதையும் மீண்டும் ஆராய்ந்து, சமுதாயத்தின் எல்லாப் பிரிவி னரின் முன்னும் நின்ற பின்வரும் கேள்வி களுக்குத் தெளிவான பதிலைத் தர வேண்டியிருந்தது: மனிதகுலத்தின் விதி எப்படிப்

பட்டது? ஒளிமயமான மனித எதிர்காலத் திற்கான போராட்டத்தில் எந்த சமுதாய சக்திகள் தீர்மானகரமான பங்காற்றும்? தன் போராட்டங்களின் மூலம் முதலாளித்துவ உலகையே ஆட்டிக் குலுக்கிய பாட்டாளி வர்க்கம் இப்போராட்டத்தில் என்ன பங் காற்றும்?

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை எழுதப்பட்ட தருணத்திற்குள் (1848) மார்க்சும் எங்கெல்சும் சிக்கலான வளர்ச்சிப் பாதையைக் கடந்து வந்திருந்தனர். ஒடுக்கப்பட்ட மக்கள் அனை வரின் ஆண்டாண்டு கால கனவை நிறை வேற்றி சமமின்மை, அநீதி, மனிதனை மனிதன் சுரண்டுவது ஆகியவற்றிற்கு முடிவு கட்டப் பாட்டாளி வர்க்கத்தால் முடியும் என்பதை மார்க்சும் எங்கெல்சும் தனித்தனியே புரிந்து கொண்டிருந்தார்கள்.

மனிதன் எதற்காக வாழ்கிறான், இவனு டைய வாழ்க்கையின் உட்பொருள் என்ன என்ற கேள்விகள் மீது தன் இளம் பருவத்தி லிருந்தே மார்க்ஸ் அக்கறை காட்டினார். உயர்நிலைப் பள்ளியிலும் பல்கலைக்கழகத் திலும் அவர் ஏராளமானவற்றைப் பேரார்வத் துடன் படித்தார், சிந்தித்தார். மனிதனுடைய சுதந்திரமான வளர்ச்சி, நல்ல லட்சியங்களுக்கு சேவை புரிதல் ஆகிய பிரச்சினைகளைத் தம் நூல்களில் முன்வைத்த ஜெர்மானிய மற்றும் பிரெஞ்சு அறிவொளியாளர்கள் மார்க்சிற்குப் பிடித்தமான ஆசிரியர்களாயினர்.

தன் கல்லூரி நாட்களில் மார்க்ஸ்

தத்துவஞான வரலாற்றைப் பயிலுவதன் மீது பெரும் கவனம் செலுத்தினார். மார்க்சிற்கு முந்தைய தத்துவஞானம் ஹெகலிடம் தன் சிகரத்தை அடைந்திருந்தது என்பது தெரிந்ததே. இயற்கை மற்றும் சமுதாய வரலாறு முழுவதிலும் நிரந்தரமான, முடிவற்ற, இயக்கவியல் ரீதியான வளர்ச்சிக் கருத்து ஊடுருவியுள்ளது என்று இந்த மேதாவிலாசம் மிக்க சிந்தனையாளர் மெய்ப்பித்தார். என்றென்றும் மாறாத, இறுதியாக நிலைநாட்டப்பட்டது எதுவும் கிடையாதென ஹெகல் கூறினார். இயற்கையிலும் சரி, சமுதாயத்திலும் சரி எல்லாமே இடையறாது பிறக்கின்றன, முதிர்ச்சியடைகின்றன, பின் புதியதற்கு இடமளித்து மறைகின்றன. ஆனால் ஹெகலே மனித சமுதாயத்திற்கு வரும் போது வளர்ச்சிக் கருத்தைப் பின்பற்றுவதில் தொடர்ச்சியாக இருக்கவில்லை. தன் காலத்தில் இருந்த பிரஷ்ய முடியரசை (இது அன்று இருந்த மிகப் பிற்போக்கான ஆட்சிகளில் ஒன்றாயிருந்தது) அரசு முறையின் முன்மாதிரி என்று அவர் அறிவித்தார். ஆனால் இவருடைய இடதுசாரி சீடர்கள், இளம் ஹெகலியவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் இதை ஒப்புக் கொள்ளவில்லை; இளம் மார்க்சும் இவர்களில் ஒருவராயிருந்தார். உலகில் நிரந்தரமான, நிலையான, தேக்கமுற்ற எதுவும் இல்லை என்றால் எந்த ஒரு சமுதாய அமைப்பும் மாறியாக வேண்டும் என்றனர் அவர்கள்.

அதுவும் எந்த ஒரு ஜனநாயக சீர்திருத்தத்தையும் மூர்க்கமாக எதிர்க்கும் பிரஷ்ய முடியரசைப் போன்றதொரு அமைப்பு மாறியாக வேண்டும்.

மார்க்சைப் போல் பல்கலைக்கழகக் கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமலிருந்த இளம் எங்கெல்சும் இதே முடிவிற்கு வந்தார். நூற்பாலைக்கு சொந்தக்காரராக இருந்த இவருடைய தந்தை இவரை வியாபாரத் துறையில் ஈடுபடுத்த விரும்பினார். எனவே எங்கெல்ஸ் பெரும் பொழுதை தந்தையின் அலுவலகத்தில் கழிக்க வேண்டியிருந்தது, வியாபாரத் தொடர்புகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அறிவுத் தாகமும் தீவிர இலக்கிய, அரசியல் நடவடிக்கையின் பாலான ஆர்வமும் இந்த இளைஞர் சுயக்கல்வி பெற உதவின, இதனால் தன் காலத்தின் தலைசிறந்த சிந்தனையாளர்கள், கட்டுரையாளர்களில் ஒருவராக இவர் திகழ்ந்தார், விரைவிலேயே இவர்களை விஞ்சி நின்றார்.

19ஆம் நூற்றாண்டின் 40ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலிருந்து மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மனியில் புரட்சிகர-ஜனநாயக இயக்கத்தில் இறங்கினர். வரலாற்று வளர்ச்சியின் நியதிகளைத் தெளிவுபடுத்துவது, இதன் எதிர்கால வாய்ப்பை நிர்ணயிப்பது, இறுதியாக, சுதந்திரம், சமூக நீதி, சர்வபொது நலம் ஆகியவற்றின் பாலான மனிதகுலத்தின் ஆண்டாண்டு கால நாட்டத்தை நிறை

வேற்ற இருக்கும் சமுதாய சக்தியைக் கண்டுபிடிப்பது எனும் லட்சியம்தான் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவர் முன்னுமே நின்றது.

*1842*இல் Rheinische Zeitungஇல் (''ரைன் பத்திரிகை'') சேர்ந்த மார்க்ஸ் (பின்னால் இவர் இதன் பதிப்பாசிரியரானார்) தன் கட்டுரைகளில் ''ஏழையான, அரசியல் மற்றும் சமூக ரீதியாக பங்கை இழந்த மக்கள் திரளினருக்கு''* ஆதரவாக தீவிரமாக எழுத ஆரம்பித்தார். ஆனால் தணிக்கை அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் அன்றாடத் தொல்லைகள், இதற்கான வாய்ப்பு பத்திரிகையில் மிகவும் குறைவே என்று அவருக்குக் காட்டின. பத்திரிகையை விட்டுவிட்டு பிரஷ்யாவிலிருந்து வெளியேறுவதென மார்க்ஸ் முடிவு செய்தார். ''சுதந்திரத்தின் பொருட்டு கூட என்றாலும் நுகத்தடியின் கீழ் இருப்பது வெறுப்பேற்படுத்துகிறது, தடியேந்தி சண்டை போடுவதற்குப் பதில் குண்டூசிகளால் குத்திக் கொண்டிருப்பது வெறுப்புண்டாக்குகிறது''** என்று அவர் எழுதினார். அக்காலத்திய பிரஷ்ய அரசை மார்க்ஸ் கண்டிப்பான அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் முட்டாள்களின் கப்பலுடன் ஒப்பிட்டார். நெருங்கி வந்து கொண்டிருந்த புரட்சிதான் இந்த அழிவைக் கொண்டு வந்தது. புரட்சியின் தன்மை, இதன் காரணங்கள் மற்றும்

---

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 1, Progress Publishers, Moscow, p. 230.

** *Ibid.,* p. 397.

இயக்குச் சக்திகளைப் பற்றிய பிரச்சினை மார்க்சிற்கு முக்கியமானது. உலகைப் புரட்சி கரமாக மாற்றியமைக்கும் வழிகள், இதற் கான முறைகள், நிலவும் அமைப்பை மாற்ற வல்ல சக்தி ஆகியவற்றைத் தேடுவதன் மீது இவருடைய சிந்தனை செல்கிறது. இப்படிப்பட்ட சக்தியை மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்திடம் கண்டார்.

தத்துவஞானத்தையும் உலக வரலாற்றை யும், குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியின் வரலாற்றையும் படித்தது, டிட்ரோ, ரூஸ்ஸோ போன்ற அறிவொளி யாளர்களின் படைப்புகளைப் படித்தது, நவீன சமூக மோதல்களைக் கவனித்தது ஆகியவை, வர்க்கங்களின் போராட்டம்தான் வரலாற்றை இயக்கும் சக்தி, இப்போராட் டத்தில் ஒவ்வொரு வர்க்கமும் தன் நலன் களைக் காத்து நிற்கிறது என்று புரிந்து கொள்ள மார்க்சிற்கு உதவின. எனவேதான் பூர்ஷ்வா வர்க்கம் ஆட்சிக்கு வந்ததும் தன் முற்போக்கான, புரட்சிகரப் பாத்திரத்தை இழக்கிறது. தனியுடைமையைப் பேணிக் காப்பதில்தான் இதன் அக்கறை உள்ளது. பாட்டாளி வர்க்கமோ மாறாக இதை அழிப்பதில் அக்கறை கொண்டுள்ளது, ஏனெ னில் இதற்கு எவ்வித உடைமையும் இல்லை, இது தன் உழைப்பால் பூர்ஷ்வா வர்க்கத்தின் உடைமையைப் பெருக்கி அதன் ஆட்சியை வலுப்படுத்த மட்டுமே செய்கிறது. பாட்டாளி

வர்க்கத்தின் இந்த அக்கறை மனிதகுல வரலாற்றிலேயே முதன்முதலாக எல்லா உழைப்பாளிகள் மற்றும் சுரண்டப்படும் மக்கள் திரளினரின் நலன்களுடன் ஒத்துப் போகிறது: ஏனெனில் தனியுடைமையின் ஆதிக்கம் இவர்களையும் உரிமையின்மை, ஏழ்மை, இழிவு ஆகியவற்றை நோக்கித் தள்ளுகிறது. எனவே தனது விடுதலைக்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் சமுதாயம் முழுவதையும் எல்லா உழைப்பாளிகளையும் விடுவிப்பதற்கான போராட்டமாக வேண்டும். இப்போராட்டத்தை சோஷலிசப் புரட்சி முடித்து வைக்கும்; இது தனியுடைமை அமைப்பைத் தூக்கியெறிந்து, முழுமையான, உண்மையான சமத்துவம் நிலவும் புதிய சமுதாயத்திற்கான அடிப்படையைத் தோற்றுவிக்கும்.

1843இல் படிப்பறையினுள் ஒதுங்கி இருந்த மார்க்ஸ் (அவரே இப்படித்தான் கூறினார்) இப்படிப்பட்ட முடிவுகளுக்கு வந்தார்.

அத்தருணத்தில் எங்கெல்ஸ் பிரிட்டனில் வசித்து வந்தார், 1842 நவம்பரில் அவருடைய தந்தை அவரை இங்கு அனுப்பியிருந்தார். மாஞ்செஸ்டரில் இருந்த ''எர்மன் அன்ட் எங்கெல்ஸ்'' நூற்பாலையில் பணி புரிந்த எங்கெல்சிற்கு, தொழிலாளர்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் நேரடியாகப் பார்க்கவும் முன்னணி பிரிட்டனின் அரசியல் அமைப்பை ஊன்றிப் பயிலவும் இதில் நடைபெறும் தொழிற் புரட்சி மற்றும் இதனால் ஏற்பட்ட சமூக மாற்றங்களின்

சாராம்சத்தைப் புரிந்து கொள்ளவும் அற்புதமான வாய்ப்பு கிடைத்தது. ‘‘சாராம்சத்தில் பார்த்தால் பிரிட்டனை ஆளுவது யார்?’’ என்ற கேள்வியைத் தன் கட்டுரைகள் ஒன்றில் எழுப்பிய எங்கெல்ஸ், ‘‘தனியுடைமைதான் ஆளுகிறது’’ என்று பதில் அளித்தார். ‘‘பூர்ஷ்வா வர்க்கமும் உடைமையும் ஆதிக்கம் செலுத்துகின்றன; ஏழை உரிமையற்று வாடுகிறான், இவனை ஒடுக்குகின்றனர், இழிவுபடுத்துகின்றனர், அரசியல் அமைப்புச் சட்டம் இவனை அங்கீகரிக்கவில்லை, சட்டம் இவனை அடக்குகிறது...’’ *

ஆங்கிலேய தொழிலாளி வர்க்கம் இப்படிப்பட்ட நிலையுடன் சமரசமாக விரும்பாமல் தன் உரிமைகளுக்காக மேன்மேலும் உறுதியாகப் போராடுவதையும் எங்கெல்ஸ் கண்டார். மாஞ்செஸ்டரில் இவர் முதன்முதலாக ஆலையதிபர்களுக்கு எதிரான தொழிலாளர்களின் ஆயுதப் போராட்டத்தைக் கண்டார்; இது இவருக்கு உவகையை ஏற்படுத்தியது. பிரிட்டனின் முதல் வெகுஜன தொழிலாளர் இயக்கமாகிய சார்ட்டிசம், லியோன் மற்றும் சிலேஸிய நூற்பாலைத் தொழிலாளர்களின் எழுச்சிகள் ஆகியவற்றின் அனுபவத்தின் அடிப்படையில், பாட்டாளிகளின் எண்ணிக்கை பலத்தோடு ஸ்தாபனத் திறமையும் ஞானமும் சேர்ந்தால் இவர்களின் சக்தி வெல்லற்கரியதாகும் என்ற முடிவிற்கு எங்கெல்ஸ்

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 3, pp. 497, 513.

வந்தார். இவ்வாறாக மார்க்சைப் போன்றே எங்கெல்சும் பாட்டாளி வர்க்கத்திடம் நவீன காலத்தின் மிகப் புரட்சிகரமான சக்தியை, சமுதாய மாற்றத்தை நிறைவேற்ற வல்ல சக்தியைக் கண்டார்.

19ஆம் நூற்றாண்டின் 40ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் இயக்கம் இன்னமும் பெரும் பாலும் தன்னிச்சையாகத்தான் வளர்ந்து வந்தது. சோஷலிச மற்றும் கம்யூனிசப் பதாகையின் கீழ் தெளிவற்ற, குழப்பமான கண்ணோட்டங்களைக் கொண்ட மக்கள் அடிக்கடி திரண்டார்கள். எனவே புரட்சிகர கம்யூனிசக் கருத்தோட்டங்களைப் பன்முக ரீதியாக உருவாக்குவதை துரிதப்படுத்தி இவற்றைப் பிரசுரித்து பிரச்சாரம் செய்வது பெரிதும் அவசியமாயிருந்தது. ''முந்தைய உலகக் கண்ணோட்டம் மற்றும் முந்தைய வரலாற்றின் தர்க்க ரீதியான, வரலாற்று ரீதியான, அவசியமான தொடர்ச்சி என்ற வகையில் நமது கோட்பாடுகளை வளர்த்து ஒரு சில படைப்புகளில் வடிக்காத வரை உண்மையான தெளிவு மக்களுக்கு இருக்காது, பெரும்பான்மையினர் இருளில் குழம்பித் திரிவார்கள்'' * என்று எங்கெல்ஸ் மார்க்சிற்கு 1844 அக்டோபரில் எழுதினார்.

1844 ஆகஸ்டில் பாரிசில் சந்தித்த போதே மார்க்சும் எங்கெல்சும் சாராம்சத்தில் இப்பணியைத் துவக்கினார்கள். இவர்கள் ஒன்றாகக் கழித்த பத்து நாட்கள் இவர்களுடைய

---

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 38, p. 3.

முதல் கூட்டு நூலாகிய **புனிதக் குடும்பம்** எனும் நூலை எழுதப் பெரும்பாலும் செலவிடப் பட்டன. எங்கெல்ஸ் ஜெர்மனிக்குப் புறப் பட்டு சென்றதும் மார்க்ஸ் தானே இந்நூலை எழுதி முடித்தார். 1845 பிப்ரவரியில் இந்நூல் வெளிவந்தது. வரலாற்றைப் பற்றிய புதிய விதமான கருத்தின் ஒரு சில அடிப்படை அம்சங்கள் இந்நூலின் மையத்தில் இருந்தன. வரலாறு என்பது "மனித நடவடிக்கை"* எனும் கருத்தை மார்க்சும் எங்கெல்சும் இதில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டனர். பொருளாயத, தொழில்துறை உற்பத்தியில் இவர்கள் மனிதகுல வரலாறு முழுவதன் அடிப்படையைக் கண்டனர். பொருளாதார அமைப்பிற்கும் அரசிற்கும் இடையில் ஆழ்ந்த தொடர்பு உள்ளது, பொருளாதார அமைப்பு தான் அரசின் தன்மையை நிர்ணயிக்கிறது என்று இந்நூலில் மெய்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அரசும் இந்த அமைப்பின் மீது தாக்கம் செலுத்துகிறது. உதாரணமாக பூர்ஷ்வா அரசு, முதலாளித்துவ வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் நிலப்பிரபுத்துவ உரிமை களையும் சலுகைகளையும் ஒழித்துக் கட்டி அகற்றுகிறது, இதன் மூலம் இவ்வளர்ச்சிக்கான பாதையைத் திறந்து விடுகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான பகைமுரண்பாட்டைப் பற்றிய

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 4, p. 93.

இயக்கவியல் ரீதியான பகுப்பாய்வும் புனிதக் குடும்பம் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. பாட்டாளி வர்க்கமும் பூர்ஷ்வா வர்க்கமும் ஏதோ ஓர் ஒற்றுமையைப் போன்றவை, ஏனெனில் இரண்டுமே முதலாளித்துவ அமைப் பால் தோற்றுவிக்கப்பட்டவை. இந்த முரண் பாடான ஒற்றுமையில் பூர்ஷ்வா வர்க்கம் பழமைவாத அம்சத்தைப் பிரதிபலிக்கிறது, ஏனெனில் நிலவும் அமைப்பைப் பேணிக் காப்பதில் இது அக்கறை கொண்டுள்ளது. தனியுடைமையும், யாருடைய உழைப்பு முதலாளி களின் சொத்தைப் பெருக்குகிறதோ அந்தப் பாட்டாளி வர்க்கமும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு அவசியமானவையாகும். பாட்டாளி வர்க் கமோ மாறாக தனியுடைமையையும், இதனுடன் சேர்த்து எந்தச் சூழ்நிலைகளில் தன் உழைப்பு முதலாளிகள் செல்வம் சேர்க்க உதவு கின்றதோ அந்தச் சூழ்நிலைகளையும் ஒழித்துக் கட்ட விரும்புகிறது. எனவே பாட்டாளி வர்க்கம், பூர்ஷ்வா சமுதாயத்தில் இரண்டு முக்கிய வர்க்கங்களுக்கு இடையிலான பகை முரண்பாட்டில் புரட்சிகர அம்சத்தைப் பிரதி பலிக்கிறது. பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான இந்தப் பகை முரண்பாடு பாட்டாளி வர்க்கப் புரட்சியால் தீர்க்கப்படுகிறது, இது தனியுடைமையையும் இதனால் தோன்றும் வர்க்கங்களையும் ஒழித் துக் கட்ட வேண்டும். ‘‘அன்னிய செல்வத் தையும் சொந்த வறுமையையும் உற்பத்தி செய்யும் கூலியுழைப்பு தனக்குத் தானே

வழங்கும் தீர்ப்பை பாட்டாளி வர்க்கம் நிறைவேற்றுவதைப் போன்றே பாட்டாளி வர்க்கத்தைத் தோற்றுவித்த தனியுடைமை தனக்குத் தானே வழங்கும் தீர்ப்பையும் அது நிறைவேற்றுகிறது''* என்று மார்க்ஸ் எழுதினார்.

நிச்சயமாக, ஒவ்வொரு பாட்டாளியாலும் இதைப் புரிந்து கொள்ள முடியாது, தன் நலன்களுக்காகவும் மொத்தமாகத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்காகவும் போராட ஒவ்வொரு பாட்டாளியும் தயாராயிருக்க வில்லை. பலருக்குப் போராட்டமே பிடிப் பதில்லை, இவர்கள் உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான வர்க்க சச்சரவுகளை, மோதல்களை ''அன்பாக'', சமரசங்கள் மூலம் தீர்க்கும் வாய்ப்புகளைத் தேடுகின்றனர். தனிப்பட்ட தொழிலாளர் களோ, இவர்களுடைய தலைவர்களோ விரும்புவதால் மட்டும் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ சமுதாயத்தை உடைக்க வேண்டியதில்லை என்று புனிதக் குடும்பத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது தற்செயல் அல்ல. ஒடுக்கப்படும் வர்க்கத்தின் நிலையே (இவ்வர்க்கம் பெரும் செல்வத்தைத் தோற்று வித்தாலும் அதையெல்லாம் பூர்ஷ்வா வர்க்கமே உறிஞ்சுகிறதே தவிர இதற்கு எதுவுமே கிட்டுவதில்லை) தன் உரிமை களுக்கான போராட்டத்திற்கு இதைத் தள்ளு

* *Ibid.*, p. 36.

கிறது. இப்போராட்டம் இல்லாமல் தொழிலாளர்களால் தம் நிலையில் எவ்வித அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. அவ்வப்போது உழைப்பாளிகளின் நிர்ப்பந்தத்தால் பூர்ஷ்வா வர்க்கம் தரும் சில சலுகைகள் கூட நெருக்கடிகளின் நேரத்தில், தொழிலாளர் இயக்கம் வீழ்ச்சியடையும் போது பிடுங்கப்படுகின்றன. எனவேதான் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''குறிப்பிட்ட நேரத்தில் அந்தந்தப் பாட்டாளியோ, முழு பாட்டாளி வர்க்கமோ தன் லட்சியத்தை எதில் பார்க்கிறது என்பது அல்ல விஷயம். உண்மையில் பாட்டாளி வர்க்கம் என்றால் என்ன, இது தன் வாழ்நிலையின் பயனாய் வரலாற்று ரீதியாக என்ன செய்தாக வேண்டும் என்பதில்தான் விஷயம் உள்ளது.''*

எங்கெல்ஸ் எழுதிய **இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** எனும் நூலும் பாட்டாளி வர்க்கத்தின் சுய உணர்வை வளர்ப்பதில் முக்கியப் பங்காற்றியது. மார்க்ஸ் பாரிசில் **புனிதக் குடும்பத்தை** எழுதி முடித்துக் கொண்டிருந்த போது தாயகம் திரும்பிய எங்கெல்ஸ் இந்நூலை எழுதுவதில் உடனடியாக இறங்கினார். இந்நூலை எழுதிக் கொண்டிருந்த எங்கெல்ஸ் அதே சமயம் தாயகத்தில் தீவிர கம்யூனிசப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டிருந்தார். கம்யூனிசக் கருத்துகள் (குறிப்பாக கற்பனாவாத கம்யூனிசக் கருத்து

---

* *Ibid.*, p. 37.

கள்) அக்காலத்தில் ஜெர்மனியில் பரவலான எதிரொலிப்பை ஏற்படுத்தின. நிலவும் முறைக்கு எதிராக அதிருப்தியைத் தெரிவிக்கும் வடிவங்களில் ஒன்றாக, கடும் சமூக, அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணும் வடிவங்களில் ஒன்றாக இது இருந்தது. இதைப் பயன்படுத்திக் கொண்ட எங்கெல்ஸ் எல்பெர்ஃபெல்டில் பல கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து கனல் பொங்கும் உரைகளை ஆற்றினார்.

அக்கூட்டங்களில் இளம் எங்கெல்ஸ் (அப்போது அவருக்கு 24 வயதுதான் ஆகியிருந்தது) முதலாளித்துவ அமைப்பை அரித்து தின்று தவிர்க்க இயலா அழிவிற்கு இட்டுச் செல்லும் முக்கியக் குறைகளையும் முரண்பாடுகளையும் மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார். முறைகேடான நிர்வாகம், ஒழுங்கின்மை, சர்வபொது சுரண்டல், பரஸ்பரப் பகைமை, தனிப்பட்ட ஆதாயத்திற்காக பொது நலன்களை அலட்சியம் செய்தல்— இவைதான் முதலாளித்துவம். இதன் விளைவாய் ஒரு சில செல்வந்தர்களுக்கும் உழைப்பாளிகளின் திரளினருக்கும் இடையிலான இடைவெளி மேன்மேலும் அதிகரிக்கிறது, உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையிலான பொருத்தமின்மை பெருகுகிறது, தொழில் துறை உற்பத்தியின் வீழ்ச்சியை ஏற்படுத்தி, பொருளாயத மூலாதாரங்கள் மற்றும் மனித உழைப்பு விரயமாவதற்கு இட்டுச் செல்லும் வர்த்தக நெருக்கடிகள் அடிக்கடி தோன்று

கின்றன.

கம்யூனிச சமுதாயத்தில் இவ்வாறு ''தனிநபர் களுடைய நலன்கள் ஒன்றுக்கொன்று எதிராக இருப்பதில்லை, அதற்கு மாறாக அவை இணைந்திருக்கும்'' * என்று எங்கெல்ஸ் கூறினார். உற்பத்தி செய்யப்படும் ஜீவாதார நலன்கள் தனிப்பட்ட முறையில் சுவீகாரம் செய்யப்பட இடமிருக்காது, ''தேவைகளுக்கு தகுந்தாற்போல'' ** உற்பத்தி ஒழுங்குபடுத் தப்படும், எனவே அமித உற்பத்தி நெருக் கடிகள் மறையும்.

கம்யூனிசத்தில் சமுதாயம் தனிப்பட்ட மனிதனுக்கு எதிராகப் பகைமை பாராட்டாது, சமுதாய நலன்கள் ஒவ்வொரு மனிதனின் நலன்களாக மாறும், முதலாளித்துவத்தில் ஈவிரக்கமின்றி செலவழிக்கப்பட்ட மானுடச் சக்திகளை விவேகமாயும் திட்டமிட்ட வகை யிலும் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படும். தனிப்பட்ட உழைப்புச் சக்திகளை சமுதாயத் தின் கூட்டுச் சக்தியாக இணைப்பதன் *** பயனாய் உழைப்புச் சக்தி சிக்கனப்படுத்தப் படுவதும் புதிய அமைப்பின் மேம்பாடாக இருக்கும்.

இவையெல்லாம் அதிகற்பனையோ, மாயை யோ, யதார்த்தத்திலிருந்து பிரிக்கப்பட்ட

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், கம்யூனிஸ்ட் சமூகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 11.

** அதே நூல், அதே பக்கம்.

*** அதே நூல், பக்கம் 23.

வெற்றுத் தத்துவமோ அல்ல என்று எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டினார். கம்யூனிசம் என்பது வரலாற்று மற்றும் பொருளாதார வளர்ச்சியின் தவிர்க்க இயலா விளைவாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சிகள், தம் காலத்திய யதார்த்தத்தையும் தொழிலாளர் இயக்கத்தின் நடைமுறை அனுபவத்தையும் ஊன்றிப் பயின்றது ஆகியவற்றின் பயனாய் தானும் மார்க்சும் செய்த முடிவுகளை, ஏற்றுக் கொண்ட கருத்துகளை இளம் கம்யூனிஸ்டு பெரும் உற்சாகத்துடன் இக்கூட்டங்களில் எடுத்துரைத்தார். **இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** என்ற எங்கெல்சின் நூல் 1845இல் வெளிவந்தது. இந்நூல் ஒளிவு மறைவற்ற கம்யூனிசக் கருத்து நிலைகளிலிருந்து எழுதப்பட்டிருந்தது; நிலவக் கூடிய சமூக அமைப்பைத் தூக்கியெறிய வேண்டிய புரட்சி தவிர்க்க இயலாதது எனும் கருத்திற்கு இது வாசகர்களை இட்டுச் சென்றது.

பொருளாதார நெருக்கடிகள் முறையாகத் திரும்பத் திரும்ப நடைபெறுதல், தொழில் துறை சேமப் படையை (வேலையில்லாதோர்) ஏற்படுத்துதல், தொழிலாளி வர்க்கத்தின் சுரண்டல் அதிகமாதல் போன்ற முதலாளித் துவ உற்பத்தியின் நியதிகளை எங்கெல்ஸ் முதன்முதலாகத் தன் நூலில் வெளிப் படுத்தினார். ஆலை முறை வளர்ந்து முதலாளித்துவம் விரிவடையும் போது, தனி யுடைமை சுவீகரிப்பு முறையின் அடிப் படையிலான உறவுகளின் வரம்புகள் உற்பத்திச்

சக்திகளுக்குப் போதாதவையாக மாறுகின்றன என்று எங்கெல்ஸ் நன்கு காட்டினார். பெரும் மக்கள் திரளினரால் கூட்டாக உற்பத்தி செய்யப்படும் விளைபொருள் ஒரு அல்லது ஒரு சில முதலாளிகளின் சொத்தாகிறது. இந்த முரண்பாடு நிரந்தரமாக நிலவ முடியாது. உழைப்பு மற்றும் உற்பத்தியின் சமூக தன்மைக்கும் தனிமுதலாளித்துவ அபகரிப்பு வடிவத்திற்கும் இடையிலான முரண்பாடு கம்யூனிசப் புரட்சியின் மூலம் தீர்க்கப்பட வேண்டும். தொழில்துறைப் புரட்சியின் பயனாகத் தோன்றிய பாட்டாளி வர்க்கம்தான் இப்புரட்சியை நிறைவேற்ற வேண்டும்.

எங்கெல்ஸ் சுரங்கத் தொழிலாளர்கள், உலோகத் துறை தொழிலாளர்கள், நூற்பாலை மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் கடுமையான வாழ்க்கை பற்றிய அதிர்ச்சிகரமான உதாரணங்களைத் திரட்டியும் பிரிட்டனின் மிகப்பெரும் தொழில்துறை மையங்களின் வாழ்க்கையை மனதில் பதியும்படி விவரித்தும் பாட்டாளி வர்க்கத்தை அல்லல்படும் வர்க்கமாக தன் நூலில் காட்டியது மட்டும் அவருடைய மாபெரும் சேவையல்ல. ஆங்கிலேய தொழிலாளர்களின் போராட்டத்தைப் பற்றியும் ஸ்தாபன மற்றும் நடவடிக்கை ஒற்றுமையின் மீதான இவர்களின் நாட்டத்தைப் பற்றியும் இவர் எழுதியுள்ள இடங்கள் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவையாகும். தொழிலாளர் இயக்கத்

தின் வளர்ச்சியில் பெரும் தொழில்துறை மையங்கள் விசேஷப் பங்காற்றுகின்றன, இங்கு தொழிலாளி வர்க்கம் ஒன்றுதிரண்டு அணிதிரளுகிறது, ஸ்தாபன ஒற்றுமையுள்ள போராட்டத்தைத் துவக்குகிறது, தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்துகிறது என்று எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.

வர்க்கப் போராட்டத்தின் போது பாட்டாளி வர்க்கம், மேலும் உயர்வான ஸ்தாபன வடிவங்களும் ஒற்றுமையும் தேவைப்படுவதையும் சுயமான அரசியல் கட்சியை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் படிப்படியாக உணருகிறது. தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜன புரட்சி இயக்கத்தை சோஷலிசத் தத்துவத்துடன் இணைப்பது இப்படிப்பட்ட கட்சியை ஏற்படுத்துவதற்கான தீர்மானகரமான நிபந்தனைகளில் ஒன்று என்று எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டுகிறார். இத்தத்துவம் பாட்டாளி வர்க்கத்திற்கு அதனுடைய போராட்டத்தின் உட்பொருள், லட்சியங்கள், வாய்ப்புகளை விளக்க வேண்டும், இதன் இறுதி வெற்றி மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

எங்கெல்சின் நூல் அவருடைய சமகாலத்தவர் மீது பெரும் மனப்பதிவை ஏற்படுத்தியது. இதனுடைய செல்வாக்கால் ஏராளமான முன்னணித் தொழிலாளர்கள் புரட்சிப் போராட்டத்தில் இறங்கினர். இந்நூல் வெளிவந்து 20 ஆண்டுகள் கழித்து மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: ‘‘விஞ்ஞான

சந்தேகங்களின்றி எவ்வளவு துணிவான தூரப்பார்வையோடு'' * இது எழுதப்பட்டுள்ளது, இதில்தான் எவ்வளவு துல்லியமான கணிப்புகள் உள்ளன.

**இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** என்ற நூலை முடித்த எங்கெல்ஸ், ஜெர்மனியில் தன் மீது பிரஷ்யப் போலீஸ் மிகவும் அதிகமான அக்கறை காட்டியதால் ஜெர்மனியை விட்டு வெளியேறி 1845 ஏப்ரலில் பெல்ஜியத்திற்கு வந்தார். மே மாதம் இவர் பிரஸ்ஸல்சில் அல்யன்ஸ் தெருவில், 7 என்ற இலக்கமுள்ள வீட்டில், ஏற்கெனவே பிரஷ்ய அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தால் பாரிசிலிருந்து வெளியேற்றப்பட்டு அங்கு வந்து வசித்த மார்க்சின் வீட்டிற்கு அருகே குடியேறினார். இத்தருணத்தில்தான், அதாவது 1845 வசந்த காலத்தில்தான், பிரஸ்ஸல்சில் மார்க்ஸ், வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தின் முக்கிய அம்சங்களைத் தனக்கு எடுத்துரைத்ததாக பின்னால் எங்கெல்ஸ் பன்முறை கூறினார். எங்கெல்சின் சிந்தனையும் இதே திசையில் வளர்ந்து வந்ததை **இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** என்ற இவருடைய நூல் காட்டியது. 1845 இலையுதிர் காலத்தில் பிரஸ்ஸல்சில் நண்பர்கள் இருவரும் புதிய, பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தை உருவாக்குவதில் இறங்கினர். ஹெகலுக்குப்

* K. Marx, F. Engels, *Selected Correspondence,* Progress Publishers, Moscow, 1975, p. 131.

பிந்தைய ஜெர்மன் தத்துவஞானத்தின் விமரிசன வடிவில் இதன் முக்கிய அம்சங்களை எடுத்துரைப்பது என்று இவர்கள் முடிவு செய்தனர். **ஜெர்மன் சித்தாந்தம்** என்ற நூலைப் பற்றிய கருத்து இப்படித்தான் பிறந்தது; இந்நூல் **1846** ஏப்ரலில் எழுதி முடிக்கப்பட்டது.

புதிய உலகக் கண்ணோட்டத்தை உருவாக்கும் போது தாம் அடிப்படையாகக் கொண்ட முன்தேவைகளை முதன்முதலாக **ஜெர்மன் சித்தாந்தத்தில்** மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டினார்கள். **மனிதர்கள், அவர்களின் நடவடிக்கை, இதற்கான பொருளாயத நிபந்தனைகள்** ஆகியவைதான் இந்த முன்தேவைகளாகும். மனிதர்களின் நடவடிக்கைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்று இவர்கள் எழுதினர்: ஒரு பக்கம் உற்பத்தி, அதாவது இயற்கையின் பாலான இவர்களுடைய உறவு, மறு பக்கம் கலந்து பழகுவது, அதாவது ஒருவர் பால் ஒருவரான உறவுமுறை. முதலாவது தீர்மானகரமான பங்காற்றுகிறது, மனிதர்களின் வாழ்க்கை முறை, இவர்களுக்கிடையிலான சமூக மற்றும் அரசியல் உறவுகள் முதலியன இதைத்தான் சார்ந்தவையாகும். மனிதர்களுடைய விடுதலையின் அளவும் உற்பத்தி, இதன் வளர்ச்சி, மனிதர்களுடைய வாழ்க்கையின் பொருளாயதச் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்தது. ''...போதுமான தரத்திலும் அளவிலும் உணவும் பானமும், வீடுகளும் உடைகளும் பெற இயலாத

வரை பொதுப்பட மக்களை விடுதலை செய்ய முடியாது''* என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டினார்கள்.

சமுதாயத்தைக் கம்யூனிச ரீதியாக மாற்றி யமைப்பதற்கான முன்தேவைகளையும் இதன் தொடர்பிலேயே இவர்கள் ஆராய்ந்தனர். முதலாவதாக, உற்பத்தியின் உயர்வான வளர்ச்சியை இப்படிப்பட்ட முன்தேவையாக இவர்கள் கண்டனர்; தனியுடைமையுடன் கோட்பாட்டு ரீதியாகப் பொருந்தாத இது அதே சமயம் சமுதாயத்தைக் கம்யூனிச அடிப்படைகளில் ஒழுங்கமைக்க அவசியமாகும். இரண்டாவதாக, மக்கள் பரவலான அளவில் பாட்டாளிமயப்படுத்தப்பட்ட இத்தகைய முன் தேவையை இவர்கள் கண்டனர்; இது புரட்சி கர வர்க்கம் உருவாக இட்டுச் செல்லும். பூர்ஷ்வா சமுதாயத்தில், ''சமுதாயத்தின் நலன்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அதன் எல்லா சுமைகளையும் சுமக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட வர்க்கம் தோன்று கிறது... அடிப்படை புரட்சியின் அவசியம் பற்றிய உணர்வு, கம்யூனிச உணர்வு இந்த வர்க்கத்திடமிருந்து வருகிறது''** என்று **ஜெர்மன் சித்தாந்தம்** நூலின் ஆசிரியர்கள் எழுதினார்கள்.

புதிய, கம்யூனிச சமுதாயத்தைக் கட்ட

---

* *கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்,* **தேர்வு நூல்கள்,** *பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 34.*

** K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 5, p. 52.

இந்த வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்று, தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும்; ''பாட்டாளி வர்க்கம் செய்வது போல், இப்படி ஆதிக்கம் நிலைநாட்டப் படுவதால் பழைய சமுதாய அமைப்பு முழுவதும், பொதுவாக ஆதிக்கமும் அழிக்கப் பட்டாலும் கூட...''* இது இப்படி நடை பெற வேண்டும். ஆனால் சுரண்டல் மற்றும் வேறொருவர் உழைப்பின் விளைபயன்களை அபகரிப்பதன் அடிப்படையிலான பழைய சமுதாய அமைப்பைத் தூக்கியெறிவதற்காக மட்டும் கம்யூனிசப் புரட்சி அவசியமில்லை என்று மார்க்சும் எங்கெல்சும் கூறினார்கள். மக்களை மாற்றவும் மனிதனின் பன்முக வளர்ச்சிக்கான சூழ்நிலைகளைத் தோற்று விக்கவும் இது அவசியம். ''தூக்கியெறியும் வர்க்கத்தால் புரட்சியின் போது மட்டுமே தன்னிடமிருந்து பழைய ஆபாசம் முழு வதையும் விட்டொழித்து சமுதாயத்தின் புதிய அடிப்படையைத் தோற்றுவிக்க வல்லதாக மாற முடியும்.''**

ஜெர்மன் சித்தாந்தத்தில் விவரிக்கப்பட் டிருந்த வரலாற்றைப் பற்றிய பொருள்முதல் வாதக் கருத்து தொழிலாளர் இயக்கத்திற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங் கியது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி ஒரு சமுதாய அமைப்பிலிருந்து வேறொரு,

---

* *Ibid.*, p. 47.

** *Ibid.*, p. 53.

உயர்வான சமுதாய அமைப்பின் வளர்ச்சிக்கு எப்படி பாதை சமைக்கிறது என்றும், பெரும் தொழில்துறையும் பாட்டாளி வர்க்கமும் தோன்றியதும் சமுதாயத்தை கம்யூனிச ரீதியாக மாற்றியமைப்பதற்கான முன்தேவைகள் தோன்றுகின்றன என்றும் இது ஆணித்தரமாயும் தொடர்ச்சிகரமாகவும் காட்டுகிறது. ''பிரெஞ்சு நாட்டவரிடமும் ஜெர்மானியர்களிடமும் நிலவிய கம்யூனிசமும் ஆங்கிலேயர்களிடம் நிலவிய சார்ட்டிசமும் ஏதோ தற்செயலானவையாக இருக்கவில்லை; இப்போது இந்த இயக்கங்கள் தற்கால ஒடுக்கப்படும் வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தின் இயக்கங்களாக இருந்தன; ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகிய பூர்ஷ்வா வர்க்கத்திற்கு எதிரான வரலாற்று ரீதியாகத் தவிர்க்க இயலாத போராட்ட வடிவங்களாக (இவை ஓரளவு வளர்ச்சியடைந்திருந்தன) வர்க்கப் போராட்ட வடிவங்களாக இருந்தன; ஆனால் இந்த வர்க்கப் போராட்டம் முந்திய வர்க்கப் போராட்டம் முழுவதிலிருந்தும் மாறுபட்டது, அதாவது சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதிலிருந்து, எனவே வர்க்கப் போராட்டத்திலிருந்து சமுதாயம் முழுவதையும் விடுவிக்காமல் தற்கால ஒடுக்கப்படும் வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. இப்போது கம்யூனிசம் என்பது, சாத்தியமான அளவிற்கு அதிக மேம்பாடான சமுதாய லட்சியத்தைப் பற்றிய

கற்பனையாக இருக்கவில்லை; இது பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தின் தன்மை, சூழ்நிலைகள், இவற்றிலிருந்து வரும் இப் போராட்டத்தின் பொது லட்சியங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதாக இருந்தது''* என்று பி. எங்கெல்ஸ் பின்னால் எழுதினார்.

ஜெர்மன் சித்தாந்தத்தை வெளியிட மார்க்சாலும் எங்கெல்சாலும் இயலவில்லை. ஆனால் இதன் ஆசிரியர்கள், அவர்களே ஒப்புக் கொண்டபடி, இந்நூலை எழுதி முடித்த பின் ''சுய விளக்கம்''** எனும் முக்கிய லட்சியத்தை அடைந்தனர். விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் அடிப்படைகள் முன் வைக்கப்பட்டன. தொழிலாளர் இயக்கத்திற்கான மகத்தான தத்துவார்த்த ஆயுதம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த ஆயுதத்தைத் தொழிலாளர்களின் கரங்களில் தர வேண்டியிருந்தது, விஞ்ஞான சோஷலிசம் பாட்டாளி வர்க்கத்தின் நடைமுறை போராட்டத்துடன் இணைந்து கலக்குமாறு செய்ய வேண்டியிருந்தது. மார்க்சும் எங்கெல்சும் இப்பணியில், இக்கடமையின் நிறைவேற்றத்தில் இறங்கினர்.

---

* K. Marx and F. Engels, *Selected Works* in three volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1977, p. 179.

** கா. மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 12.

## அத்தியாயம் இரண்டு

# பாட்டாளி வர்க்க கட்சியின் பிறப்பு

*''அறிக்கை எப்படித் தோற்றுவிக்கப் பட்டது என்பதைக் கூறாமல் எந்த ஒரு மொழியிலும் இதை வெளி யிடுவது முழுக்க முழுக்க இயலாது என்று நான் கருதுகிறேன்.'' **

**பி. எங்கெல்ஸ்**

*1831ஆம் ஆண்டு நவம்பர் மாதம். பிரான் சின் மிகப்பெரும் தொழில்துறை மையமாகிய லியோன் மீது கருப்பு பதாகை எழுந்தது; அதில் ''உழைத்து வாழ வேண்டும் அல்லது போரிட்டு மடிய வேண்டும்!'' என்று உணர்ச்சி ததும்பிய அளவு கடந்த மனச் சோர்வுள்ள வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்தன. மிகவும் கடுமையான ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்ட நகர பட்டு நெசவாலைத் தொழிலாளர்கள் ஆயுதங்களை ஏந்தினர். லியோன் நகர உழைப்பாளிகள் அனைவரும் இவர்களை ஆதரித்தனர்; மூன்று நாட்களுக்குப் பின் உள்ளூர் படையினர் நகரத்தை எழுச்சி யாளர்களுக்கு விட்டுக் கொடுக்கும் கட்டாயத் திற்கு உள்ளானார்கள். 10 நாட்களுக்குப்பின்,*

* K. Marx, F. Engels, *Werke,* Bd. 36, Berlin, S. 380.

டிசம்பர் 3ந் தேதி பாரிசிலிருந்து அனுப்பப் பட்ட துருப்புகள்தான் எழுச்சியாளர்களை முறியடித்து கிளர்ச்சியைக் குருதி வெள்ளத்தில் மூழ்கடித்தன. தொழிலாளர்களின் முதல் சுயமான போராட்டம், தம் நிலையை ஆயுதமேந்தி மேம்படுத்திக் கொள்ள இவர்கள் செய்த முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆனால் பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான இந்த முதல் வர்க்க மோதலின் எதிரொலி ஐரோப்பா முழுவதும் பரவி, சொத்துடைமையாளர்களை அஞ்சி நடுங்கச் செய்தது.

''இந்த நவீன அடிமைகள் தெட்டத் தெளிவாகக் காட்டிய இயக்கப் பலத்தைக் கொண்டு... இந்த இயக்கம் தன்னுள் 19ஆம் நூற்றாண்டின் எப்படிப்பட்ட கொந் தளிப்புகளை அடக்கியுள்ளது என்று எளிதாக ஊகிக்கலாம்''* என்று பின்னால் பிரெஞ்சு சோஷலிஸ்டு லுயீ பிளாங் எழுதினார். இந்தக் கொந்தளிப்புகளைப் பற்றிய உள் ளுணர்வில் பிரான்ஸ், பிரிட்டன், ஜெர் மனியின் பூர்ஷ்வா மற்றும் உயர்குடி வட்டங் கள் அஞ்சி நடுங்கின. பத்திரிகைகளில் தொழிலாளர்களை ''விரோதிகள்'', ''காட்டு மிராண்டிகள்'' என்று அழைத்தனர், இவர் களிடமிருந்து சமுதாயம் முழுவதையும் நவீன நாகரிகம் முழுவதையும் காப்பாற்ற வேண்டும்

* Louis Blanc, *Histoire de Dix Ans, 1830—1840,* Vol. III, Brussels, 1846, p. 60.

என்றனர். ஆனால் ''தொழிலாளர் பிரச்சினை'' சம்பந்தமாக வெளிவந்த ஏராளமான கட்டுரைகள், நூல்களில் அவ்வப்போது, நிமிர்ந்து கொண்டிருந்த மாபெரும் வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரம் மற்றும் வாய்ப்புகள் பற்றி கருத்தாழமுள்ள ஊகங்கள் வெளிவரலாயின. லுயீ பிளாங் போன்ற சோஷலிஸ்டுகள் மட்டுமின்றி ஆளும் வர்க்கங்களின் சித்தாந்தவாதிகளும் இத்தகைய தொலைபோக்குப் பார்வையை வெளிப்படுத்தினர்.

இவர்களில் ஒருவராகிய ஐ. பி. மோன்ஃபல்கோன் 1831லும் 1834லும் நடைபெற்ற லியோன் எழுச்சிகளை நேரில் கண்டு ''தொழிலாளர்கள் அரசியல் வர்க்கமாக மாறுவது நவம்பர் சம்பவங்களின் உடனடியான பயங்கர விளைவுகளில் ஒன்றாக இருக்கும்'' என்று கணித்துக் கூறினார். '''செல்வந்தர்களின் ஆதாயத்திற்காக மட்டுமே நீங்கள் வியர்வையை சிந்துகிறீர்கள்; ஆலை முதலாளிகள் உங்களுடைய இயற்கையான எதிரிகள். நீங்கள் வருத்தப்படுகிறீர்கள், நீங்கள் துரதிர்ஷ்டசாலிகள்; ஆனால் நீங்கள்தான் எண்ணிக்கையில் மிகவும் பெரியவர்கள், மிக வலிமையானவர்கள். ஒன்றுசேருங்கள்!' என்று தொழிலாளர்களை நோக்கிச் சொல்லுபவர்கள் தோன்றுவார்கள்''* என அவர் எழுதினார்.

---

* J. -B. Monfalcon, *Histoire des insurrections de Lyon, en 1831 et en 1834,* Lyon—Paris, 1834, p. 99.

ஆம், தொழிலாளர்களின் பலம் அவர்களின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் என்று கிளர்ச்சி தொழிலாளர்களுக்கு காட்டியது. சகலவிதமான சங்கங்கள், தேவைப்படுபவர்களுக்கு உதவி புரிவதற்கான நிதி சங்கங்கள், தொழிலாளர் ஸ்தாபனங்கள், கூட்டுகள் முதலியன தோற்று விக்கப்படலாயின. இவற்றில் சில சட்ட பூர்வமாக, வெளிப்படையாக இயங்கின, மற்றவை போலீஸ் அடக்குமுறைகளிலிருந்து ஒளிந்து மறைய வேண்டியதன் காரணமாக ரகசியமாக செயல்பட்டன.

பரஸ்பர உதவி, சக்திகளை ஒன்றிணைப்பது ஆகியவற்றின் பாலான நாட்டத்தின் பயனாய் 1832ல் பாரிசில் **ஜெர்மன் மக்கள் சங்கம்** தோற்றுவிக்கப்பட்டது. ஜெர்மனியிலிருந்து வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்பட்ட கைத் தொழிலாளர்களும் அரசியல் காரணங்களுக்காக குடிபெயர்ந்தவர்களும்தான் இதில் பெரும் பாலும் உறுப்பினர்களாயிருந்தனர். அப்போது பல சிறு அரசுகளாக சிதறுண்டு கிடந்த ஜெர்மனியை ஒன்றிணைப்பதற்காகவும் இதில் குடியரசு ஆட்சிமுறையை நிலைநாட்டவும் மற்றும் மனித உரிமைகள், சிவில் உரிமை களுக்கு வகை செய்யவும் போராடுவது என்பதுதான் இச்சங்கத்தின் லட்சியமாக இருந்தது.

1833 ஜூலை முதல், விவசாயிகள், கைவினை ஞர்கள், தொழிலாளர்களுக்காக எழுதப் பட்ட துண்டுப் பிரசுரங்களை இச்சங்கம் பிரசுரித்து வினியோகிப்பதில் இறங்கியது.

நேரடியாகத் தொழிலாளர்களுக்காக எழுதப் பட்ட இத்தகைய பிரசுரம் ஒன்றில், கைத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளிகள், விவசாயிகள் ஆகியோர் மிகக் கடினமான வேலைகளைச் செய்தபோதிலும் மிகவும் துரதிர்ஷ்டவசமானவர்கள், ஏழையானவர்கள் என்று இதன் ஆசிரியர்கள் கூறினர்; ஆனால் ஆலை முதலாளிகள், நிலச்சுவாந்தார்கள், வங்கியதிபர்கள், முதலாளிகள், சிற்றரசர்கள், மந்திரிகள் ஆகியோர், அதாவது ஆடம்பரத் தால் சூழப்பட்டுள்ளவர்கள் முழுக்க முழுக்க கேளிக்கைகளில் மூழ்கி திளைந்து வாழுகின்ற னர். செல்வம் கொழிக்கும் சோம்பேறிகள் ஆடம்பரத்தில் மூழ்கித் திளைப்பதற்காக ஏன் லட்சக்கணக்கான மக்கள் வேலை செய்ய வேண்டும்? ''இது இவ்வாறு நடை பெறக் காரணம் அந்த சோம்பேறிகள் ஒரு ரகசியத்தைக் கண்டுபிடித்துள்ளதாகும். நீங்களே அறியாமல் அவர்களுக்காக வேலை செய்யும்படி உங்களை எப்படிக் கட்டாயப் படுத்துவது, இன்னும் முக்கியமாக, அவர் களுடைய மகிழ்ச்சிக்காக நீங்கள் வியர்வை சிந்த அனுமதிப்பதன் மூலம் ஏதோ அவர்கள் உங்கள் மீது இரக்கம் காட்டுவதாயும் உங்களுக்கு நல்லது செய்வதாயும் நீங்கள் எண்ணுமாறு செய்வது எப்படி என்னும் ரகசியம்தான் அது. அது என்ன ரகசியம் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்களால் கண்டுபிடிக்க முடியாவிடில் எமது அடுத்த பிரசுரத்திற்காக காத்

திருங்கள்...''* என்று இப்பிரசுரத்தில் எழுதப் பட்டிருந்தது.

விரைவில் வெளிவந்த அடுத்த பிரசுரம், செல்வத்தை, அதாவது பெரும் தனி யுடைமையை ஒழித்துக் கட்டக் கோரும் அறைகூவலுடன் முடிவடைந்தது.

1834 ஏப்ரல் 10ல் பிரெஞ்சு அரசாங்கம் கூட்டணிகளைப் பற்றிய சட்டத்தைக் கொண்டு வந்தது. இது குடியரசு லட்சியங் களைப் பின்பற்றும் ஸ்தாபனங்களுக்கு எதிரான சட்டமாக இருந்தது. எனவே ஜெர்மன் மக்கள் சங்க உறுப்பினர்களில் ஒரு சிலர் சேர்ந்து **பகிஷ்கரிக்கப்பட்டவர்கள் சங்கம்** எனும் ரகசிய ஸ்தாபனத்தை ஏற்படுத்த முடிவு செய்தனர். இதன் சதி வேலைக் கோட்பாடு களும் இதன் ரகசியத் தன்மையும் ஓரளவு ஜனநாயகத் தன்மையுடன் இணைந்திருந்தன, ஏனெனில் இதில் இருந்த கைவினைஞர்களும் தொழிலாளர்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்களாயிருந்தனர், ஒருவரையொருவர் நம்பவும் பரஸ்பரம் உதவவும் பழகியிருந்தனர். இதன் கூட்டங்களில் விரி வுரைகள் ஆற்றப்பட்டன, அரசியல் பிரச் சினைகள் விவாதிக்கப்பட்டன. ஜெர்மனியின் எதிர்கால அரசியல் சட்ட ரீதியான அமைப்பு பற்றிய பிரச்சினை இவற்றில் முக்கியமானதாய் இருந்தது. ஆனால் இச்சங்கம் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. 1836இல் இது பிளவு

* Kowalski Werner, *Vorgeschichte und Entstehung des Bundes der Gerechten,* Berlin, 1962, S. 177.

படத் துவங்கியது. இப்பிளவினால் நேர்மை யாளர் சங்கம் எனும் புதிய ஸ்தாபனம் தோன்றியது.

புதிய ஸ்தாபனத்தின் பிறப்பு, இளம் தொழிலாளர் இயக்கத்திற்கு மிகவும் முக்கிய மானதாய் இருந்த நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலித்தது. முந்தைய சங்கங்களில், நிலவும் முறைகள் மீது அதிருப்தி தெரிவித்த அனே கமாய் எல்லோரும் உறுப்பினர்களாயிருந் தார்கள், இவர்களிடையே குட்டி முதலாளி சக்திகளின் செல்வாக்கு பலமானதாக இருந்தது என்றால், இப்போது ''மக்கள்'' திரளினரிட மிருந்து பாட்டாளி வர்க்கம் தனித்து வெளிப்பட ஆரம்பித்தது. ஜெர்மனியிலிருந்து வெளியேறி பாரிசிலிருந்த மிகப் புரட்சிகரமானவர்கள்தான் நேர்மையாளர் சங்கத்தில் உறுப்பினர்களா யிருந்தனர். சாதாரணமாக இவர்கள் சிறு தொழில் புரியும் பாட்டாளிகளாக, அதாவது கொல்லர்கள், தச்சர்கள், தையற்காரர்கள், செருப்பு தைப்பவர்களாக இருந்தனர். ''ஜெர் மனியை இழிகேடான ஒடுக்க நிலையிலிருந்து விடுவிப்பது, மனிதனின் அடிமை விலங்குகளை உடைத்தெறிய உதவுவது, மனித உரிமை களுக்கும் பிரஜா உரிமைகளுக்கும் வகை செய்வது''* என்பதுதான் இச்சங்கத்தின் நோக்கமென பிரகடனம் செய்யப்பட்டது. சொத்துக்களைப் பொதுவுடைமையாக்குவது சர்வபொது சமத்துவத்தின் அவசியமான

* *Der Bund der Kommunisten,* Bd. 1, S. 93.

பின்விளைவாக இருக்கும் என்று கருதி இத்தகைய பொதுவுடைமையைக் கோரும் கோரிக்கையை சங்கம் தன் பதாகையில் பொறித்தது.

இந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகள் பாரிசை மையமாகக் கொண்டிருந்தன. ஆனால் ஜெர்மனியிலும் இதன் கிளைகளைத் திறக்க இதன் உறுப்பினர்கள் முயற்சிகள் செய்தனர். ரகசிய பிளாங்கிஸ்டு ஸ்தாபனமாகிய பருவங்களின் சங்கம் என்னும் பிரெஞ்சு சங்கத்துடன் நேர்மையாளர் சங்கம் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தது. 1839 மே 12ந் தேதி பாரிசில் பிளாங்கிஸ்டுகள் கிளர்ந்தெழுந்த போது நேர்மையாளர் சங்க உறுப்பினர்கள் எழுச்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டனர். தயார்படுத்தப்படாத, பரவலான உழைப்பாளர் திரளினரின் ஆதரவு இல்லாத எழுச்சி விரைவிலேயே ஒடுக்கப்பட்டது, நேர்மையாளர் சங்க உறுப்பினர்களில் பெரும்பாலோர் பிரான்சை விட்டு வெளியேறும்படி நேர்ந்தது. சிலர் ஸ்விட்சர்லாந்திற்கும் மற்ற சிலர் இங்கிலாந்திற்கும் சென்றனர். சங்கத்தை எதிர்காலத்தில் புனரமைப்பதில் இது தீர்மானகரமான பங்காற்றியது.

1839 மே மாதத்திற்குப் பின் நேர்மையாளர் சங்கத்தின் தலைமை உறுப்பாகிய மக்கள் சபை இன்னமும் பாரிசிலேயே இருந்தபோதிலும் லண்டன் இதன் உண்மையான நடவடிக்கை மையமாகியது; இந்நகரம் இதன் நடவடிக்கைகளுக்கு முற்றிலும் வேறுவிதமான

வாய்ப்புகளைத் திறந்து விட்டது. சென்ற நூற்றாண்டின் 40ஆம் ஆண்டுகளில் பிரிட்டனில் தொழில்துறை புரட்சியின் தீவிர வளர்ச்சி, பொருளாதாரம், அரசியல் மற்றும் மக்கள் தொகையின் கட்டமைவில் ஏற்பட்ட பெரும் மாற்றங்கள், வர்க்கப் போராட்டம் வலுத்தது (இது 1842 வாக்கில் முன் பின் காணாத அளவையும் கூர்மையையும் அடைந்தது) ஆகியன சங்க உறுப்பினர்களின் சித்தாந்த மட்டமும் வர்க்க உணர்வும் கணிசமாக அதிகரிக்க உதவின. இன்னமும் பாரிசைப் புரட்சி இயக்கத்தின் தாயகமாயும் மையமாயும் பார்த்தாலும் ரகசிய பிரெஞ்சு சதி ஸ்தாபனங்களின் செல்வாக்கு மேன்மேலும் குறைந்து வந்து விரைவில் முற்றிலுமாக மறைந்தது.

சதி வேலைகளின் மூலம், வெறும் சதியாளர்களின் பலத்தை மட்டும் வைத்து புரட்சியை நடத்த முடியாது என்பதை நேர்மையாளர் சங்கத்தின் உறுப்பினர்களும் தலைவர்களும் புரிந்து கொள்ளலாயினர். சதி முறைகளில் இவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டாலும் இவர்களுக்கு வேறு போராட்ட முறைகள் தெரியவில்லை. அக்கால கைவினைஞர்கள், தொழிலாளர்களின் கருத்துகள் பெரிதும் உறுதியற்றவையாக, குழப்பமானவையாக இருந்தன: ஒரு சமயத்தில் அவர்களை வில்ஹெல்ம் வைத்லிங்கின் கொச்சையாக சமப்படுத்தும் தொழிலாளர் கம்யூனிசம் கவர்ந்தது, மறு சமயம் அவர்கள் எத்தியேன் காபேயின் கற்பனாவாத ''சமாதான கம்யூனிசத்தால்''

ஈர்க்கப்பட்டனர். 1839 மேயில் பிளாங்கிஸ்டு கள் தோல்வியுற்ற பின் காபேயின் செல்வாக்கு அதிகரித்தது; ஏனெனில் காபே, கம்யூனிச லட்சியங்களை சமாதானமாக பிரச்சாரம் செய்யுமாறும், தம் உதாரணத்தின் மூலம் சமத்துவம் மற்றும் மகிழ்ச்சிக்கான பாதையை மக்களுக்குத் திறந்து விடவல்ல கம்யூனிச காலனிகளைத் தோற்றுவிக்குமாறும் அறை கூவல் விடுத்தார். முதலாளித்துவ சூழ்நிலை களில் இப்படிப்பட்ட ''மகிழ்ச்சி, விடுதலைத் தீவுகள்'' தவிர்க்க இயலாமல் அழியும் என்பதை காபேயும் அவருடைய சீடர்களும் புரிந்து கொள்ளவில்லை. நேர்மையாளர் சங்கத் தலைவர்களில் பலர் கம்யூனிச காலனிகள் சம்பந்தமான காபேயின் மாயைகளை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சோஷலிச லட்சியங் களை சமாதான ரீதியாகப் பிரச்சாரம் செய்வதைத் தமது முக்கியக் கடமையாகக் கருதினர். இதை பிரிட்டனில் சட்டபூர் வமாக, வெளிப்படையாகச் செய்ய முடியுமா தலால் 1840 பிப்ரவரி 7ந் தேதி இவர்கள் ஜெர்மன் தொழிலாளர்களின் அறிவொளி சங்கத்தை ஏற்படுத்தினார்கள்.

வெகு விரைவிலேயே இச்சங்கம் நடைமுறை யில் நேர்மையாளர் சங்கத்தின் கிளையாக மாறியது. இதன் நடவடிக்கை மிகவும் சுறுசுறுப்பானதாய் இருந்ததால் சங்கத்தின் லண்டன் பிரிவு அதன் மையமாகியது. இங்கிருந்து பாரிசுடனும், ஸ்விட்சர்லாந்தில் இருந்த பிரிவுகளுடனும் தொடர்புகள்

வைத்துக் கொள்ளப்பட்டன, ஜெர்மனியுடன் உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. பிரச்சாரப் பணி சாராம்சத்தில் ஐரோப்பா முழுவதும் நடந்தது.

புரட்சிப் போராட்டத்தைக் கைவிட்டதானது தொழிலாளர் கிளர்ச்சிகள் தோல்வியுற்றதன் இயல்பான விளைவாக இருந்தது. பாட்டாளி களின் உணர்வும் இவர்களுடைய ஸ்தாபனமும் தாழ்வான மட்டத்தில் இருந்ததும் போராட்ட லட்சியங்கள் மற்றும் கடமைகள் பற்றிய திட்டவட்டமான கருத்து இல்லாததும்தான் தோல்விக்கான காரணங்கள் என்பதை நேர் மையாளர் சங்கத் தலைவர்களோ மற்ற தொழிலாளர் தலைவர்களோ இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் தொழிலாளர் இயக்கம் முன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும், உடைமை வர்க்கங்களுடனான வெளிப்படையான மோதலில் இது அடைந்த ஒவ்வொரு தோல்வியும், நடைபெறுவதைப் புரிந்து கொள்ளும் அவசியத்தை அதிகப் படுத்தின; அதிக செயல்முனைப்பான ஸ்தாபன வடிவங்களின் தேவையைப் பெருக்கின; தொழி லாளர்கள் எப்படி, எதற்காகப் போராட வேண்டும், அவர்களுடைய போராட்டத்தின் உடனடி லட்சியங்களும் எதிர்கால வாய்ப்பு களும் எப்படிப்பட்டவை என்பதைச் தொழிலா ளர்களுக்குத் தெளிவாகக் காட்ட வல்ல போதனையின் தேவையை முக்கியமாக்கின. எனவேதான் அப்பொழுது விவாதங்கள் பாட்டாளி வர்க்க சங்கங்கள், கழகங்கள்,

கூட்டுகளின் வேலையில் மிகப் பிரபலமான வடிவமாக இருந்தன. இந்த விவாதங்களின் போது ஃபூரியே, ஓவன், காபே, புரூதோன், வைத்லிங் போன்றோரின் கருத்துகளும் கண்ணோட்டங்களும் விவாதிக்கப்பட்டன.

வில்ஹெல்ம் வைத்லிங் இக்கட்டத்தில் ஆரம்பக் கால தொழிலாளர் இயக்கத்தின் மிகப் பிரபலமான தலைவர்கள், சித்தாந்த வாதிகளில் ஒருவராக விளங்கினார். 1842ல் வெளிவந்த சீரிசைவு மற்றும் விடுதலைக்கான உத்திரவாதங்கள் எனும் நூல் இவருக்குப் புகழையும் அங்கீகரிப்பையும் தேடித் தந்தது. ஜனநாயக வட்டங்களில் இந்நூலுக்குப் பெரும் உற்சாகமான வரவேற்பு இருந்தது, தொழிலாளர்களோ இது கிழிந்து போகும்படி போட்டிபோட்டுக் கொண்டு இதைப் படித்தார்கள். வைத்லிங்கின் நூலை மார்க்ஸ் ''ஜெர்மன் தொழிலாளர்களின் ஈடு இணையற்ற, அற்புதமான இலக்கிய அரங்கேற்றம்'' என்றார். ''ஜெர்மன் சிந்தரேல்லாவிற்கு எதிர்கால பலசாலியின் உருவத்தை முன்னறிவிக்க, பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் பிரம்மாண்டமான குழந்தை செருப்புகளை ஜெர்மன் பூர்ஷ்வா வர்க்கத்தின் தேய்ந்து போன சின்னஞ்சிறு அரசியல் செருப்புகளுடன் ஒப்பிடுவது போதுமானது''* என்று மார்க்ஸ் எழுதினார்.

வைத்லிங்கின் நூல்களிலும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இவர் மேற்கொண்ட பிரச்சார

---

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 3, pp. 201—202.

நடவடிக்கைகளிலும் இவருடைய போதனையின் வலுவான அம்சங்கள், பலவீனம் இரண்டுமே பிரதிபலித்தன. கம்யூனிசம்தான் மனித சமுதாயத்தின் தலைசிறந்த அமைப்பு என்பது தர்க்க ரீதியாக நிரூபிக்கப்பட்டு விட்டதால் இது வருவது தவிர்க்க இயலாதது என்று இவர் கருதினார். எனவே கம்யூனிச லட்சியங்களை உடனடியாக நிறைவேற்றத் தேவையான வழிகளையும் சாதனங்களையும் தேட வேண்டும். இதில் வைத்லிங் கிட்டத்தட்ட மற்ற கற்பனாவாத சோஷலிஸ்டுகளிடமிருந்து வேறுபடவில்லை. வித்தியாசம் வேறொன்றில் இருந்தது. சான்-சிமோன், ஃபூரியே, ஓவன் ஆகியோர் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் ஆதரவை நம்பினார்கள். வைத்லிங்கோ (இவருடைய கருத்துகளில் மார்க்சியத்தின் முன்னோடிகளாகிய மாபெரும் கற்பனாவாதிகளின் கருத்துகள் பெரிதும் பிரதிபலித்தன) எல்லாவற்றிற்கும் மேலாக ஜெர்மன் தொழிலாளர்களின் வர்க்க உணர்வைத் தட்டியெழுப்ப பாடுபட்டார். ஒடுக்கப்படுபவர்களுக்கும் ஒடுக்குபவர்களுக்கும் இடையில் சமரசப்படுத்த இயலா முரண்பாடுகள் நிலவுகின்றன என்று இவர் அயர்வின்றி சுட்டிக் காட்டினார். பாட்டாளியின் வர்க்க உள்ளுணர்வு, ''நிலவும் எல்லாமே புரட்சிக்கான விதையையும் உணவையும் தன்னுள் கொண்டுள்ளது''* என்று புரிந்து கொள்ள வைத்

---

* W. Weitling, *Garantien der Harmonie und Freiheit*, Berlin, 1955, S. 274.

தது. ஆனால் இவர் இப்புரட்சியை ஏதோ தன்னிச்சையான வெடிப்பாகப் பார்த்தாரே தவிர வரலாற்று வளர்ச்சியின் முடிவாகவோ, பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் உயர் வடிவமாகவோ பார்க்கவில்லை.

முதலாளித்துவ அமைப்பை அயராது அம்பலப்படுத்தி கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மத்தியில் கம்யூனிசப் போதனையைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்த வைத்லிங் ஒடுக்கப்படுபவர்கள், சுரண்டப்படுபவர்களின் திரளிலிருந்து தொழிலாளி வர்க்கத்தைத் தனித்துப் பிரிக்கவில்லை. லும்பன் பாட்டாளிகளைத்தான் இவர் சமுதாயத்தில் மிகப் புரட்சிகரமான சக்தியாகக் கருதினார், இவர்களுடைய உதவியோடுதான் உலகை மாற்றியமைக்க முடியும் என்று முன்மொழிந்தார். கம்யூனிசத்தின் பெயரால் சமூகப் புரட்சியை நிறைவேற்றும் திட்டத்தை வைத்லிங் நேர்மையாளர் சங்கத்தின் தலைவர்களுக்கு முன் வைத்தார். மிகவும் கோபம் கொண்ட, வர்க்கத் தன்மை இழந்த 20,000—40,000 நபர்களைக் கொண்டு ஒரு படையை அமைத்து, சொத்துடைமையாளர்களுக்கு எதிரான கொரில்லா யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் இதன் சாராம்சமாகும். நிச்சயமாக இத்திட்டம் நிராகரிக்கப் பட்டது. ஆனால் சங்கத்தின் எதிர்காலப் பணி, இதன் திசையமைவுகள், பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வாய்ப்புகள் ஆகியவை

சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்தலாம் என்ற வைத்லிங்கின் முன் மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விவாதம் 1845 பிப்ரவரியில் ஆரம்பமாகி, ஓராண்டு காலம் ஜெர்மன் தொழிலாளர் களின் லண்டன் அறிவொளி சங்க கூட்டங் களில் நடந்தது. இவ்விவாதத்தில் செய்யப் பட்ட முதல் முடிவுகளில் ஒன்று பின் வருமாறு: ‘‘சொத்துடைமையும் உண்மையைத் திரிக்கும் மதமும் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் தேசியவெறி ஆகியவை மனிதகுலத் திற்கு எல்லா துன்பங்களையும் கொண்டு வந்தன, அறிவொளியூட்டுவதன் மூலம்தான் பூமியை பூந்தோட்டமாக மாற்ற முடியும், மனிதகுலத்தை ஒரே குடும்பமாக்க முடி யும்’’ *.

சமுதாய அமைப்பைப் பற்றிய இந்த லட்சியமும் இதை அடையும் வழிகளும் விவாதத்தின் மையத்தில் இறுதி வரை இருந்தன. ஏன் கம்யூனிசம் முன்னரே நிறைவேற்றப்படவில்லை? இதற்கு மனிதகுலம் முதிர்ச்சி பெற்று விட்டது என்றால், ஏன் உழைப்பாளிகளின் மத்தியில் ஏழ்மை, வறுமை, ஒடுக்குமுறை ஆகியவை மேன்மேலும் பரவி வருகின்றன? அதே சமயம் ஏன் ஒருசிலரின் கரங்களில் செல்வமும் ஆடம்பரமும் குவி கின்றன? இந்நிலையை எப்படி மாற்றுவது? கம்யூனிச லட்சியங்களை நடைமுறைப்படுத்த

* *Der Bund der Kommunisten,* Bd. 1, S. 214.

என்ன செய்ய வேண்டும்? சமத்துவம், சுதந்திரம், நீதி ஆகியவற்றை சமாதான பிரச்சாரத்தாலா, ஆயுதப் போராட்டத்தாலா எப்படி அடைவது? இக்கேள்விகள் எல்லோர் முன்னும் நின்றன.

இங்கே ஒரு வியத்தகு வரலாற்றுப் பொருத் தத்தைச் சுட்டிக்காட்டலாம். கம்யூனிசத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதைப் பற்றி தொழிலாளர்கள் விவாதித்துக் கொண்டிருந்த போது மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் சித்தாந்தம் என்ற நூலை எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். இதுவரை நிலவிய கம் யூனிசப் போதனைகள், கருத்துகள் யாவும் சாராம்சத்தில் கற்பனாவாதத் தன்மையை உடையவை, இவை மனிதர்களின் கனவு களையும் நம்பிக்கைகளையும் மட்டுமே பிரதிபலித்தன, ஆனால் பாட்டாளி வர்க்க கம்யூனிசம், தொழிலாளர் வர்க்கப் போராட் டம் மற்றும் அதன் விடுதலை பற்றிய போதனை என்ற வகையில் கம்யூனிசம் பெரும் தொழில்துறையின் வளர்ச்சியோடு, தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் தோன் றிய பின்தான் பிறக்கிறது என்று இந்நூலில் தெட்டத்தெளிவாக, திட்டவட்டமாக மார்க் சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டினார்கள். கம்யூனிச லட்சியங்களை நடைமுறையில் நிறைவேற்றக் கனவுகளும் நல்லெண்ணங்களும் மட்டும் போதாது. ''தனியுடைமைக் கருத்தை ஒழிக்க கம்யூனிசக் கருத்து முற்றிலும் போதுமானது. ஆனால் யதார்த்தத்தில் தனி

யுடைமையை ஒழிக்க உண்மையான கம்யூனிச செயல்பாடு அவசியம்''* என்று 1844ல் மார்க்ஸ் எழுதினார்.

சமாதானமான, அறிவொளியூட்டும் பணிதான் சோஷலிச மாற்றங்களுக்கு இட்டுச் செல்லும் ஒரே வழி என்று சில பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் கருதினர். மனிதகுலம் ''இன்னமும் கம்யூனிசக் கருத்தைக் கிரகிக்காவிடில்'' அதைச் செயல்படுமாறு கட்டாயப்படுத்த முடியாது என்று கா. ஷாப்பர் கூறினார். ''முதலில் எல்லோரும் சகோதரர்களாக வேண்டும், பின் கம்யூனிசம் நடைமுறைக்கு வரும்''** என்று அவர் கூறிய போது அது மிகவும் வெகுளித்தனமான கருத்தாயிருந்தது.

இதற்கு மாறாக வைத்லிங், கம்யூனிசத்திற்கான புரட்சிகரப் பாதையை உறுதியாக ஆதரித்தார். ''பல்வேறு மக்களினங்கள் எந்த விடுதலையைப் பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனவோ அது புரட்சியின் மூலமாக மட்டுமே கிடைத்தது... புரட்சிதான் ஒற்றுமைக்கும் அறிவொளியூட்டவும் அற்புதமான சாதனமாகும்''*** என்று அவர் கூறினார்.

ஹெ.பௌவர் இவரை ஆதரித்தார். வெறும் சமாதான ரீதியாக அறிவொளியூட்டுவதால் மட்டும் கம்யூனிசத்தை அடைய முடியாதென இவர் ஆணித்தரமாக மெய்ப்பித்தார். ஏனெனில்

---

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 3, p. 313.

** *Der Bund der Kommunisten,* Bd. 1, S. 218.

*** *Ibid.*, S. 223.

இதற்கு எதிராக ''சொத்துள்ளவர்களின் நலன்கள் ஒரு பெரும் தடையாக உள்ளன'', ''தீவிரமான தாக்குதலால் இவர்களைக் கட்டாயத்திற்கு உட்படுத்தாவிடில் இவர்கள் எப்போதுமே இணங்கி வர மாட்டார்கள்''*.

கம்யூனிசத்தை அடையும் பாதைகள், முறைகள் பற்றிய வேறுபாடுகளை இந்த விவாதம் வெளிப்படுத்தியபோதிலும், சமுதாய மாற்றங்களும் புரட்சிகர நடவடிக்கையும் விஞ்ஞான தத்துவத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பது குறித்து இவ்விவாதத்தில் பங்கேற்றவர்களில் ஒருவர் கூட வாய் தவறியும் ஒன்றும் கூறவில்லை. அப்போது பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் உணர்ச்சிகள், மதம், கற்பனாவாதம் எல்லாம் இருந்தனவே தவிர விஞ்ஞான அடிப்படை மட்டும் இருக்கவில்லை. ''நாம் எல்லாவற்றையும் பயன்படுத்த வேண்டும். பகுத்தறிவின் மீது தாக்கம் செலுத்தி அடைய முடியாததை பலரிடம் அவர்களின் உணர்ச்சிகள் மீது தாக்கம் செலுத்தி அடையலாம்''** என்றார் வைத்லிங்.

அக்கால தொழிலாளர் இயக்கம், கம்யூனிசத்தைப் பற்றிய இந்த பல்வேறு விதமான வெளிப்பாடுகளை சகித்துக் கொண்டது, கம்யூனிசத்தின் பொருளாதார, பொருளாயத முன்தேவைகள்தான் உண்மையான விஞ்ஞான,

* *Ibid.*, S. 225.

** *Ibid.*, S. 216.

புரட்சிகர உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படை என்பது இதற்குப் புரியாததாக இருந்தது. ஆனால் இன்றைய உலகில் தன் நிலையை விளக்கி, சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான போராட்டத்தில் உறுதியான திசையமைவுகளை அளிக்க வல்ல ஒரு தத்துவத்தின் அவசியத்தைப் பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே உணரத் துவங்கியிருந்தது. *1846* ஜனவரியில் ஜெர்மன் தொழிலாளர்களின் அறிவொளி சங்கத்தில் விவாதத்தை முடித்து வைக்கும் போது கா. ஷாப்பர் பின்வருமாறு கூறியது தற்செயல் அல்ல: ''உண்மையான கம்யூனிச அமைப்பு நமது புதிய ஜெர்மானிய தத்துவ ஞானிகளால் தோற்றுவிக்கப்படுமென நான் கருதுகிறேன்''*. அவர் இங்கு குறிப்பிட்டது மார்க்சையும் எங்கெல்சையும்தான்.

எங்கெல்ஸ் தான் முதலில் பிரிட்டனில் இருந்த போதே *(1842–1844)* சார்ட்டிஸ்டுகளுடனும் ஓவனின் சீடர்களாகிய சோஷலிஸ்டுகளுடனும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். *1843* வசந்த காலத்தில் இவர் நேர்மையாளர் சங்கத் தலைவர்களாகிய ஷாப்பர், மோள் மற்றும் பௌவருடன் அறிமுகம் செய்து கொண்டார். எங்கெல்சே பின்னால் ஒப்புக் கொண்டபடி இவர்கள்தான் இவர் சந்தித்த ''முதல் புரட்சிகரப் பாட்டாளிகளாவார்கள்''. ''...நானே

---

* *Ibid.*, S. 236.

இன்னமும் மனிதனாக விரும்பிய தருணத்தில் இந்த மூன்று உண்மையான மனிதர்களும் என் மீது ஏற்படுத்திய கவர்ச்சிகரமான மனப்பதிவை நான் என்றென்றும் மறக்க மாட்டேன்''* என்று 1885இல் எங்கெல்ஸ் எழுதினார்.

சங்கத் தலைவர்கள் தம் சங்கத்தில் சேருமாறு அப்போதே எங்கெல்சிடம் முன் மொழிந்தனர். ஆனால் கருத்து வேறுபாடுகள் அப்போது இன்னமும் நிறைய இருந்தன, இவற்றை அகற்ற ஒரு சில ஆண்டுகள் தேவைப்பட்டன.

ஆங்கிலேய பொருளாதார இலக்கியங்களை ஆராயவும் இந்நாட்டின் தொழிலாளர் இயக்கத் தோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வும் எங்கெல்சுடன் சேர்ந்து மார்க்ஸ் 1845 கோடையில் இங்கிலாந்துக்கு வந்தார். அப்போதுதான் சங்கத் தலைவர்கள் அவருடன் அறிமுகமாயினர். மார்க்ஸ் இவர்களுக்கு வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தின் முக்கிய அம்சங்களை எடுத்துரைத்து கம்யூனிசம் என்பது விஞ்ஞான அடிப் படையிலான கோட்பாடுகளின் முறை என்று அனேகமாக விளக்கியிருக்க வேண்டும்.

ஷாப்பர், மோள் மற்றும் பௌவர் அப்போது மார்க்ஸ் மீது இரட்டை மனப் பதிவை ஏற்படுத்தினார்கள். ஒரு புறம் இவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தைப்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 175.

பிரதிநிதித்துவப்படுத்தினார்கள், மறு புறம் இவர்கள் குட்டி பூர்ஷ்வா, உணர்ச்சிகரமான, ''உண்மை சோஷலிசம்'' என்றழைக்கப்பட்ட தன் பலமான செல்வாக்கின் கீழிருந்தனர், புரட்சிகரப் போராட்ட முறைகளை நிராகரித்தனர், ஆங்கிலேய சார்ட்டிஸ்டுகளுடன் நெருங்கியத் தொடர்பை வைத்திருக்கவில்லை. அந்த நேரத்தில் மார்க்ஸ் தொழிலாளர்கள் மீது எத்தகைய செல்வாக்கைச் செலுத்தினார் என்பதை ஜெர்மன் தொழிலாளி பிரெடெரிக் லெஸ்னரின் நினைவுக் குறிப்புகளின் மூலம் ஓரளவு அறிய முடிகிறது. 1848ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சங்கத்தில் சேர்ந்த இவர் அங்கு 30 வயதுடைய மார்க்சுடன் அறிமுகமானார். மார்க்சைப் பற்றி இவர் ஒளிவுமறைவற்ற உற்சாகத்துடன் பின்வருமாறு எழுதினார்: ''நடுத்தர உயரம், விரிந்த தோள்கள், நல்ல பலமான உடற்கட்டு, அன்பு ததும்பும் பரந்த நெற்றி, கன்னங்கரிய முடி, கூரிய பார்வை. அவருடைய எதிரிகள் அஞ்சிய நையாண்டிப் பாணி அவர் வாயில் அப்போதே குடி கொண்டிருந்தது. மார்க்ஸ் மக்களின் பிறவித் தலைவர். அவருடைய பேச்சு சுருக்கமானதாக, தொடர்புடையதாக, தயவு தாட்சண்யமற்ற தர்க்கத்தை உடையதாக இருந்தது; வெற்றுச் சொற்களை அவர் என்றுமே பயன்படுத்தியதில்லை; ஒவ்வொரு வாக்கியமும் ஒரு சிந்தனை, ஒவ்வொரு சிந்தனையும் வாதம் எனும் அவருடைய சங்கிலித் தொடரில் அவசியமான அங்கம்.

மார்க்சிடம் பகற்கனவு அம்சம் எதுவுமே இருக்கவில்லை. வைத்லிங் காலத்தின் கம்யூனிசத்திற்கும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** காலத்தின் கம்யூனிசத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நான் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உணர்ந்தேனோ, அவ்வளவுக் கவ்வளவு மார்க்ஸ் சோஷலிச சிந்தனையின் முதிர்ச்சியைப் பிரதிபலித்தார் என்பது எனக்குத் தெளிவாயிற்று.'' *

மார்க்சும் எங்கெல்சும் கூட்டாக இங்கிலாந்தில் இருந்த போது, இடதுசாரி சார்ட்டிஸ்டுகளுக்கும் நேர்மையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி, வலுப்படுத்த உதவினர். 1845 ஆகஸ்டு நடுவில் லண்டனில் ''ஏன்ஜல்'' எனும் விடுதியில் பல்வேறு நாடுகளிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்களுடன் சார்ட்டிஸ்டுகள் நடத்திய கூட்டத்தில் அவர்கள் இருவரும் பங்கேற்றனர். லண்டனில் சர்வதேச புரட்சிகர ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் கருத்து இக்கூட்டத்தில்தான் பிறந்தது. கூட்டத்தில் பேசிய எங்கெல்ஸ் இக்கருத்தைப் பெரிதும் ஆதரித்தார். மார்க்சும் எங்கெல்சும் இங்கிலாந்திலிருந்து கிளம்பிச் சென்ற பின், 1845 செப்டெம்பர் 22ல் இத்தகைய ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. சோதர ஜனநாயகவாதிகள் என்று பெயரிடப்பட்ட இக்கழகத்தில் பாட்டாளி வர்க்கச் சக்திகளாகிய இடதுசாரி

* Friedrich Lessner, *Ich brachte das «Kommunist Manifest» zum Drucker,* Berlin, 1975, S. 67.

சார்ட்டிஸ்டுகளும் (ஜா. கார்னி, பின்னால் எ. ஜோன்ஸ்), நேர்மையாளர் சங்கத் தலைவர் களாகிய ஷாப்பர், மோளும் பெரும் பங்காற்றி னார்கள்.

இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதானது முன்னணித் தொழிலாளர்களிடம் சர்வதேச ஒருமைப்பாட்டு உணர்வு விழித்தெழுந்ததற்கு சான்று பகர்ந்தது. தொழிலாளர்களின் சர்வதேச ஒற்றுமைக்கு வழிகோலிய 1845 செப்டெம்பர் 22ந் தேதிய கூட்டம், பாட் டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட் பாடுகளைப் பற்றி பத்திரிகைகளில் எழுத எங்கெல்சிற்கு வாய்ப்பளித்தது. ‘‘எல்லா நாடுகளிலும் உள்ள பாட்டாளிகளுக்கு ஒரே மாதிரியான நலன்கள்தான் உள்ளன, இவர் களின் எதிரி ஒன்றேதான், ஒரே போராட் டம்தான் இவர்களை எதிர்நோக்கியுள்ளது; பெருந்திரளான பாட்டாளிகள் இயல்பாகவே தேசிய மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபட்ட வர்கள், இவர்களுடைய ஆன்மீக வளர்ச்சியும் இயக்கமும் சாராம்சத்தில் மனிதாபிமானத் தன்மையை உடையவை, தேசியவெறியற் றவை. பாட்டாளிகளால்தான் தேசிய பிரிவு களை ஒழித்துக் கட்ட முடியும், விழித்தெழும் பாட்டாளி வர்க்கத்தால்தான் பல்வேறு தேசிய இனங்களுக்கு இடையில் சகோதரத் துவத்தை ஏற்படுத்த முடியும்’’ * என்று எங்கெல்ஸ் எழுதினார்.

---

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 6, p. 6.

சோதர ஜனநாயகவாதிகள் அமைப்பில் பங்கேற்றதானது நேர்மையாளர் சங்கத்தின் சித்தாந்த பரிணாம வளர்ச்சி மீது சந்தேகத் திற்கிடமின்றி பெரும் தாக்கம் செலுத்தியது. 1846 நவம்பரில் இதன் மத்திய உறுப்பாகிய மக்கள் சபை (இதில் ஷாப்பரும் மோளும் இடம் பெற்றிருந்தனர்) தன் கிளைகள் எல்லாவற்றிற்கும் சுற்றறிக்கையை அனுப்பி யது; 1847 மே 1ந் தேதி காங்கிரசை நடத்துமாறு இதில் முன்மொழியப்பட்டிருந் தது. சொந்தமான கம்யூனிச வேலைத்திட்டத் தைத் தீட்டுவதுதான் இதில் கூறப்பட்டிருந்த வற்றில் முக்கியக் கடமையாக இருந்தது. ஷாப்பராலோ, மோளாலோ, சங்கத்தின் மற்ற தலைவர்களாலோ தொழிலாளி வர்க்கத் தின் செயல்பாட்டு திட்டத்தைத் தீட்டி அதன் கோட்பாட்டு நிலைகளை ஆதாரப்படுத்த இயலாது என்பது இத்தருணத்தில் தெளி வாயிற்று. தம் சித்தாந்தத் தலைவர்களைத் தேடும் முயற்சிகள் இவர்களை இறுதியாக மார்க்சிடமும் எங்கெல்சிடமும், எந்த ''புதிய ஜெர்மானிய தத்துவஞானிகள்'' 1846ஆம் ஆண்டின் இறுதியில் யதார்த்தத்தில் ''உண்மை யான கம்யூனிச அமைப்பைத்'' தோற்று வித்து இதைப் பிரச்சாரம் செய்வதிலும் இதன் அடிப்படைக் கருத்துநிலைகளைத் தொழிலாளர்களுக்கு விளக்குவதிலும் இறங்கி யிருந்தார்களோ அந்த நபர்களிடம் இட்டு வந்தன.

ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும்

தன்னைச் சுற்றி அணிதிரட்டி மூலதனத்தின் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு இவர்களை இட்டுச் செல்ல வல்ல பூர்ஷ்வா சமுதாயத்தின் முன்னணி வர்க்கம் என்ற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை விஞ்ஞான ரீதியாக ஆதாரப் படுத்திய மார்க்சும் எங்கெல்சும் கோட் பாட்டு ரீதியாகப் புதிய, வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த ஒரு முடிவிற்கு வந்தனர். தனியுடைமையின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட, பாட்டாளி வர்க்கப் புரட்சியை நிறைவேற்ற, ஆட்சியைத் தன் கரங்களில் எடுத்துக் கொண்டு புதிய கம்யூனிச சமுதாயத் தைக் கட்ட தொழிலாளி வர்க்கத்திற்கு சொந்த அரசியல் கட்சி வேண்டும். இம்முடிவு கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்தான் திட்டவட் டமாக குறிப்பிடப்பட்டது என்றாலும் மார்க் சிற்கும் எங்கெல்சிற்கும் இது ஜெர்மன் சித்தாந் தம் என்ற நூலை எழுதும் போதே தெளிவா யிற்று. அப்போது தொழிலாளர் இயக்கம் பெரும்பாலும் பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா சித்தாந்தத் தாக்கத்தின் கீழிருந்தது. எனவே தொழிலாளி வர்க்கத்தின் வீரம் மிகு முன்னணிப்படையின் சித்தாந்த அடிப் படையாக விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தை இதற்கு எதிராக வைக்க வேண்டியிருந்தது. இந்த முன்னணிப்படை மிக வளர்ச்சியடைந்த, சுய உணர்வுள்ள தொழிலாளர்களைத் தன்னுள் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அன்று இத்தகைய தொழிலாளர்கள் மிகவும் குறை

வாக இருந்ததால், எங்கெல்ஸ் கூறியபடி இவர்களை ‘‘ஒவ்வொருவராகத் தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது’’ *. எனவே கட்சி யால் வெகுஜனக் கட்சியாக இருக்க முடியவில்லை. ஆனால் அதே சமயம் ஆழமான, உறுதியான வேர்களால் இது பொதுமக்களுடன் இணைய வேண்டியிருந்தது. கட்சி சொந்த வரம்புகளுக்குள் சுருங்கி விடுவதை, இது ஒரு விதமான குறுங்குழுவாக மாறுவதை எந்தக் காரணங் கொண்டும் அனுமதிக்கக் கூடாது என்ற நிலை நிலவியது. இந்நிலை இல்லாம லேயே அன்று நிலவிய கைவினைஞர்கள், தொழிலாளர்களின் குறுங்குழு ஸ்தாபனங் களும், பாட்டாளி வர்க்க இயக்கங்களின் தத்துவ முதிர்ச்சியின்மையும் ஸ்தாபன ஒற்றுமையின்மையும் தொழிலாளர் வர்க்கச் சக்திகளைப் பிளவுபடுத்தின, இதன் போ ராட்டப் பலத்தைக் குறைத்தன, போர்க்குணத் தைக் குலைத்தன, எனவே தன் போராட்ட வெற்றியில் உள்ள நம்பிக்கையையும் குலைத் தன.

முன்னணித் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததும் ஐரோப்பிய நாடுகளில் வெகுஜன பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்கள் இல்லாதிருந்ததும் கட்சியை உருவாக்கும் சர்வ தேசியக் கோட்பாட்டிற்கு வழிகோலின. கம்யூனிஸ்டுகளின் சர்வதேசியப் படையாக கட்சியைப் பற்றி சிந்தித்த போது மார்க்சும்

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 189.

எங்கெல்சும் இதை மட்டும் ஆதாரமாகக் கொள்ளவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் தேசியக் கடமைகளின் நிறைவேற்றத்திற்காகவும் அதே சமயம் பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான சர்வதேசியக் கடமைகளுக்காகவும் கட்சி போராட வேண்டியிருந்தது. ஐரோப்பிய புரட்சியின் நெருக்கமும் தொழிலாளி வர்க்கத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளை சர்வதேசிய ரீதியாக ஒன்றிணைக்கும் அவசியத்திற்குக் கட்டளையிட்டது.

சர்வதேச அளவில் புரட்சிகர சக்திகளை அணிதிரட்ட மிகவும் வசதியான வடிவமாக மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்டு தகவல் தொடர்புக் கமிட்டிகளைத் தேர்ந்தெடுத்தனர். இவற்றில் முதல் கமிட்டியாகிய பிரஸ்ஸல்ஸ் கமிட்டி 1846 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்டது. தத்துவப் பிரச்சினைகளை விவாதிக்கவும் கற்பனாவாத முறைகளை விமரிசிக்கவும் ஒரே கருத்துகளை உருவாக்கவும் ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேய சோஷலிஸ்டுகளிடையே நிரந்தரத் தொடர்புகளை ஏற்படுத்துவதுதான் இதன் லட்சியமாக இருந்தது. தகவல் தொடர்புக் கமிட்டிகள் ஸ்தாபனப் பிரச்சினைகளையும் தீர்த்தன — சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்சியின் உட்கருவாக விளங்கத் தக்க சக்திகளை இவை இனங்கண்டு அணிதிரட்ட வேண்டியிருந்தன.

முதலில் பிரஸ்ஸல்ஸ் கமிட்டி ஜெர்மனியின்

பல்வேறு பகுதிகளில் வசித்து வந்த சோஷலிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் கடிதங்களை அனுப்பியது; ஆங்காங்கே இது போன்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்துமாறு இவற்றில் முன்மொழியப்பட்டிருந்தது. இதன் பயனாய் கொலோன், எல்பெர்ஃபெல்ட், வெஸ்ட்ஃபேலியா, சிலேஸியா ஆகிய இடங்களில் இருந்த சோஷலிஸ்டுகள் பிரஸ்ஸல்சுடன் முறையான தொடர்புகளை நிலைநாட்டினார்கள். விரைவிலேயே பாரிசிலும் லண்டனிலும் தகவல் தொடர்பு கமிட்டிகள் தோற்றுவிக்கப்பட்டன. லண்டன் கமிட்டியில் நேர்மையாளர் சங்கத் தலைவர்களாகிய ஷாப்பர், மோள், பௌவர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். பிரஸ்ஸல்ஸ் கமிட்டியுடன் இருந்த தொடர்பு விரைவிலேயே கற்பனாவாதக் கண்ணோட்டங்களை விடுத்து விஞ்ஞான கம்யூனிச நிலைகளுக்கு மாறிச் செல்ல உதவியது.

தகவல் தொடர்புக் கமிட்டிகளின் உள்ளடக்கம் மட்டுமின்றி இவற்றின் பணியின் சாரமும் சர்வதேசியத் தன்மையைக் கொண்டிருந்தது. உதாரணமாக, பிரஸ்ஸல்ஸ் கமிட்டியினர் தம் கூட்டங்களில் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளின் சோஷலிச இயக்கத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை விவாதித்தனர். தொழிலாளர் இயக்கம் நிலவிய பல்வேறு நாடுகளுக்கு மார்க்சும் எங்கெல்சும் அனுப்பிய கடிதங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் தம் உரைகளில், இவ்வியக்கத்தினர் தம் அரசியல்

நடவடிக்கைகளில் இழைக்கும் பிழைகளுக்குத் தவறான தத்துவங்களும் கண்ணோட்டங் களும்தான் காரணம் என்று காட்ட முயன்றனர்.

40 ஆண்டுகள் கழித்து எங்கெல்ஸ் அமெரிக்க கம்யூனிஸ்டுகளுக்கு இதே மாதிரி செயல் படும்படி ஆலோசனை கூறினார் —“தொழி லாளர் வர்க்கத்தின் உண்மையான சர்வ பொது இயக்கம் எல்லாவற்றிலும் பங்கேற்க வேண்டும்; இவ்வியக்கத்தின் உண்மையான துவக்கப் புள்ளியை உள்ளது உள்ளபடியே ஏற்றுக் கொள்ள வேண்டும். செய்த ஒவ்வொரு தவறும், அடைந்த ஒவ்வொரு தோல்வியும் ஆரம்ப வேலைத்திட்டத்தின் தவறான தத்துவார்த்த கருத்துநிலைகளின் தவிர்க்க இயலா விளைவு என்று சுட்டிக் காட்டி இந்த இயக்கத்தைப் படிப்படியாக தத்துவார்த்த நிலைக்கு உயர்த்த வேண் டும்.” *

பிரஸ்ஸல்ஸ் கமிட்டி தான் தோன்றியதி லிருந்தே வைத்லிங்கின் கற்பனாவாதக் கண்ணோட்டங்களுக்கு (இவை ஜெர்மனியில் தொழிலாளர் இயக்க வளர்ச்சியைத் தடை செய்யத் துவங்கின) எதிராகத் தீவிரமாகப் போராட ஆரம்பித்தது. வைத்லிங்கை அவ ருடைய கற்பனாவாதத்திலிருந்து, கம்யூனிசத் தைப் பற்றிய மத-குறுங்குழுவாதக் கண் ணோட்டத்திலிருந்து விடுவிக்க முடியுமென

* K. Marx, F. Engels, *Selected Correspondence,* p. 377.

முதலில் மார்க்சும் எங்கெல்சும் நம்பினார்கள். இவர்கள் வைத்லிங்கை பிரஸ்ஸல்சிற்கு வரவழைத்து அவரைத் தகவல் தொடர்புக் கமிட்டியில் சேர்த்தனர். ஆனால் அரசியல் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை மறுத்த வைத்லிங் தொடர்ந்து கலகங்களின் ஆதரவாளராகத் திகழ்ந்தார், புரட்சிகர அறிவுஜீவிகளுக்கு எதிராகப் போராடினார்; எங்கெல்சின் வார்த்தைகளில் சொன்னால், கம்யூனிசத்தை இவர் புரட்சிகர விஞ்ஞானமாகப் பார்க்காமல் ''வானுலகை பூமியில் நிலைநாட்டுவதற்குத் தயாரான சிபாரிசாக''* பார்த்தார். இதன் விளைவாய் 1846 மார்ச் 30ல் நடந்த பிரஸ்ஸல்ஸ் கமிட்டிக் கூட்டத்தில் நேரடியான மோதல், நடைமுறை பிளவு வரை விஷயம் சென்றது.

வைத்லிங்கின் கண்ணோட்டங்களைக் கடுமையாக விமரிசித்த மார்க்சும் எங்கெல்சும், நிலவும் சமுதாய உறவுகளை மாற்றியமைப்பதற்காகப் போராடும் வீரர்களை அணிதிரட்ட வல்ல பொதுத் தத்துவத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்கள். கறாரான விஞ்ஞானக் கருத்துகளோ ஆக்கபூர்வமான போதனையோ இல்லாமல் தொழிலாளர்களிடம் செல்வது என்பது ''ஒரு புறம் உத்வேகம் மிகுந்த தீர்க்கதரிசியையும் மறு புறம் வாயைப்

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 180.

பிளந்து கேட்டுக் கொண்டிருக்கும் கழுதை களையும் கொண்ட கூட்டத்தில் வீணாக, நேர்மையற்ற முறையில் சமயப் பிரசாரம் செய்வதற்கு ஒப்பாகும்''* என்று மார்க்ஸ் கோடிட்டுக் காட்டினார்.

வைத்லிங்கிடமிருந்து பிரிந்ததைப் பற்றிய செய்தி பிரஸ்ஸல்ஸ் கமிட்டியுடன் தொடர் புடைய சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகளின் எல்லா குழுக்களுக்கும் அனுப்பப்பட்டது. இவர்களில் பெரும்பாலோர் மார்க்சையும் எங்கெல்சையும் ஆதரித்தனர்.

அக்காலகட்டத்தில் முற்போக்கு அறிவுஜீவி கள், பல தொழிலாளர்கள் மீது கணிசமான செல்வாக்கு செலுத்திய ''உண்மை சோஷ லிசம்'' என்றழைக்கப்பட்டதற்கு எதிராக பிரஸ்ஸல்ஸ் கமிட்டியும் இதன் தலைவர்களும் நடத்திய போராட்டமும் சற்றும் குறையா முக்கியத்தும் உடையதாய் இருந்தது. இப் போக்கின் பிரதிநிதிகளில் ஒருவராகிய ஜெர் மன் பத்திரிகையாளர் கேர்மன் கிரீகெவின் நடவடிக்கை இதற்கு எதிரான வெளிப் படையான போராட்டத்திற்கு சாக்காக அமைந்தது. இவர் அமெரிக்காவிற்குச் சென்று அங்கு The People's Tribune (''மக்கள் மேடை'') எனும் பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தார். இதில் கம்யூனிசப் போர்வை யின் கீழ் இவர் நடத்திய பிரச்சாரத்தை

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்பு கள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1973, பக்கம் 398.

மார்க்சும் எங்கெல்சும் கடுமையாகச் சாடினார்கள். 1846 மே 11ல் நடைபெற்ற பிரஸ்ஸல்ஸ் கமிட்டியின் கூட்டத்தில் இவர்கள் தம் விமரிசனத்தின் முக்கிய அம்சங்களை எடுத்துரைத்தனர்.

கிரீகெ நடத்தும் பிரச்சாரம் ''ஐரோப்பாவிலும் சரி அமெரிக்காவிலும் சரி, கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இழுக்கை ஏற்படுத்துகிறது'' என்று கூட்டத்தில் ஏற்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. '''கம்யூனிசம்' எனும் பெயரில் நியூயார்க்கில் கிரீகெ பிரச்சாரம் செய்யும் உணர்ச்சிகரமான அதிகற்பனை பிதற்றல்களை மட்டும் தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டால் அவை தொழிலாளர்கள் மீது அதிகபட்ச உளச் சோர்வை ஏற்படுத்தியிருக்கும்.'' இத்தீர்மானத்தின் முக்கியமான அம்சம் என்னவென்றால், கிரீகெவின் ''அரசியல்-பொருளாதார வெகுளித்தனம்'' பற்றிய விமரிசனமாகும்; தேவைப்படும் ஒவ்வொருவருக்கும் துண்டு நிலம் வழங்கி, எல்லோரையும் சிறு சொத்துடைமையாளர்களாக மாற்றினால் எல்லா சமூக முரண்பாடுகளும் தீர்ந்துவிடுமென இவர் கருதினார். ''எல்லோரையும் தனியுடைமையாளர்களாக மாற்றும்'' கனவு முழுக்க முழுக்க யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது, ஏன் பிற்போக்கானது கூட என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதினார்கள். ''எல்லோரையும் பேரரசர்களாகவும் மன்னர்களாகவும் போப்பாண்டவர்களாகவும் மாற்று

வது எப்படி நிறைவேற்ற இயலாததோ, கம்யூனிசத் தன்மையை உடையதோ அதே போன்றதுதான் இந்தக் கனவும்.''*

Deutsche-Brusseler Zeitung இலும் (''ஜெர்மன்-பிரஸ்ஸல்ஸ் பத்திரிகை'') மார்க்சும் எங்கெல்சும் ''உண்மை சோஷலிசத்தையும்'' இதன் சித்தாந்தவாதிகளையும் விமரிசித்தார்கள். குட்டி பூர்ஷ்வா சோஷலிஸ்டுகளின் நடைமுறை நடவடிக்கை அவர்களுடைய கருத்துமுதல்வாதத் தத்துவங்களுக்கும் சமுதாய வளர்ச்சியின் உண்மையான விதிகளை அவர்கள் புரிந்து கொள்ளாமல் இருந்ததற்கும் பொருத்தமானதாக இருந்தது என்று மார்க்ஸ், எங்கெல்ஸ் தமது கட்டுரைகளில் சுட்டிக் காட்டினார்கள். எல்லா சமூக பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்து பூமியில் உண்மையான சொர்க்கத்தை நிலைநாட்ட உதவும் ஒரு அதி அற்புத சாதனத்தை தேடிக் கண்டுபிடிக்க அவர்கள் பாடுபட்டார்கள். கிரீகெவைப் பொறுத்தமட்டில் உழைப்பாளிகளுக்குத் துண்டு நிலங்களை வழங்குவது இத்தகைய சாதனமாக இருந்தது, புரூதோனிஸ்டுகளைப் பொறுத்தமட்டில் (நேர்மையாளர் சங்கத்தின் பாரிஸ் கிளைகளில் இவர்களுடைய செல்வாக்கு குறிப்பாக அதிகமானதாக இருந்தது) பணமற்ற புழக்கமும் பரிசுக் கடன்களும் இத்தகைய சாதனமாக இருந்தன. 1847

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 6, pp. 35, 43, 44.

ஜூலையில் வெளிவந்த மெய்யறிவின் வறுமை எனும் நூலில் மார்க்ஸ் புரூதோன்வாதத்தை தத்துவ ரீதியாக கடுமையாகச் சாடியது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந் தது. நடைமுறை அரங்கில் *1846–1847*இல், பாரிஸ் தொழிலாளர்களின் மத்தியில் புரூதோ னின் கருத்துகளுடைய குட்டி முதலாளித்துவ தன்மையை அம்பலப்படுத்திய பெருமை எங் கெல்சை சாரும். விஞ்ஞான ரீதியான, பாட்டாளி வர்க்க கம்யூனிசக் கருத்துகளின் அடிப்படையில்தான் சமுதாய முறையை மாற்றுவதற்கான போராட்டத்தை வெற்றி கரமாக நடத்த முடியும் என்று தொழி லாளர்களுடன் நடந்த நீண்ட, காரசாரமான விவாதங்களில் எங்கெல்ஸ் இவர்களுக்குப் படிப்படியாக நிரூபித்தார். ''மனிதகுலத்தை சமாதான வழியில் சந்தோஷப்படுத்தும்'' புரூதோன்வாதத் திட்டங்களுக்கு மாற்றாக இவர் கம்யூனிஸ்டுகளின் செயல்திட்டத்தை முன்வைத்தார். இதை இவர் சுருக்கமாகப் பின்வருமாறு கூறினார்: ''1) முதலாளிகளின் நலன்களுக்கு மாறாக பாட்டாளிகளின் நலன் களைக் காத்து நிற்பது; 2) தனியுடைமையை ஒழித்துக் கட்டி, பொதுவுடைமையை நிலை நாட்டுவதன் மூலம் இதைச் செய்வது; 3) இந்த லட்சியங்களை அடைய வலுக்கட்டாயமான ஜனநாயகப் புரட்சியைத் தவிர வேறெந்த வழியையும் ஒப்புக்கொள்ளாமலிருப்பது'' *.

* K. Marx, F. Engels, *Selected Correspondence,* p. 27.

சங்கத்தின் மற்ற கிளைகளிலும் வைத்லிங் வாதம், புரூதோன்வாதம் மற்றும் ''உண்மை சோஷலிசக்'' கருத்துகளின் செல்வாக்கிலிருந்து விடுபடுவது மெதுவாக, ஆனால் சரியான வழியில் நடந்தது. குறிப்பாக இது லண்டனில் நன்கு தெரிந்தது; 1846 நவம்பர் முதல் சங்கத்தின் தலைமை உறுப்பாகிய மக்கள் சபை இங்கு மாற்றப்பட்டது. சங்கத்தின் முன்னணி உறுப்பினர்கள், மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துகள் சரியானவை என்பதை மேன்மேலும் உணர்ந்தார்கள்.

1847 ஜனவரியில் மக்கள் சபை மோளை பிரஸ்ஸல்சிற்கு அனுப்பியது. பிரஸ்ஸல்ஸ் கம்யூனிஸ்டு தகவல் தொடர்புக் கமிட்டியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, நேர்மையாளர் சங்கத்தில் சேருமாறு மார்க்ஸ், எங்கெல்சிற்கு முன்மொழிய இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. விஞ்ஞான கம்யூனிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்கத்தை மாற்றியமைக்க அதன் லண்டன் தலைவர்கள் தயார் என்பது பேச்சுவார்த்தைகளின் போது தெளிவாயிற்று. புதிய தத்துவம் சரியானது என்று சங்கத் தலைமை உறுதியாக நம்புவதாக மோள் மார்க்சிற்கும் எங்கெல்சிற்கும் தெரிவித்தார். தமது கருத்துகளை நடைபெறவிருக்கும் காங்கிரசில் வெளியிடுமாறும் இவற்றை ஒரு அறிக்கையின் வடிவில் வடித்துத் தருமாறும் இத்தலைமை மார்க்ஸ், எங்கெல்சிற்கு முன்மொழிந்தது.

சாராம்சத்தில் பார்த்தால், ஏற்கெனவே

நிலவிய ஒரு சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தை, உருவாகிக் கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் உட்கருவாகப் பயன்படுத்தும் வாய்ப்பு மார்க்ஸ், எங்கெல் சிற்கு அளிக்கப்பட்டது. இதை தம் தத்து வார்த்தக் கோட்பாடுகளுக்கு ஏற்ப மாற்றி யமைக்கும் கடமை மட்டுமே முன் நின்றது. எனவே இவர்கள் இருவரும் சங்கத்தில் சேர ஒப்புதல் தெரிவித்தனர்.

காங்கிரசை நன்கு தயார்படுத்திக் கொள் வதற்காக இதன் ஆரம்பம் மேயிலிருந்து ஜூனுக்கு தள்ளிப் போடப்பட்டது. இதில் சங்கத்தை முழுமையாக மாற்றியமைக்கவும் புதிய விதிமுறைகளை உருவாக்கவும் வேலைத் திட்டம் மற்றும் பத்திரிகை பற்றிய பிரச் சினைகளை ஆலோசிக்கவும் திட்டமிடப் பட்டது.

பேச்சுவார்த்தைகளின் முடிவுகளைப் பற்றி மார்க்ஸ் ஜெர்மனியிலும் மற்ற நாடு களிலும் இருந்த சகதோழர்களுக்கு உடனடி யாக அறிவித்தார், சங்கத்தில் சேர்ந்து அதை மாற்றியமைப்பதில் தீவிரப் பங்கேற் குமாறு அவர்களுக்கு முன்மொழிந்தார்.

**1847 ஜூன் 2ந் தேதி** லண்டனில் நேர்மை யாளர் சங்கத்தின் காங்கிரஸ் ஆரம்பமாகியது. நடைமுறையில் இது **கம்யூனிஸ்டு சங்கத்தின் நிறுவன காங்கிரசாகத்** திகழ்ந்தது. பொருளா தார இடர்ப்பாடுகளின் காரணமாய் மார்க் சால் லண்டனுக்கு வர இயலவில்லை. வில்ஹெல்ம் வோல்ஃப் அதில் பிரஸ்ஸல்ஸ்

கம்யூனிஸ்டுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். எங்கெல்ஸ் சங்கத்தின் பாரிஸ் கிளைகளின் பிரதிநிதியாக இருந்தார்.

சுறுசுறுப்பு, ஆழ்ந்த ஞானம், தெட்டத் தெளிவான சிந்தனை, உறுதியான நிலை முதலியன காங்கிரசில் எங்கெல்சிற்குத் தலைமைப் பங்கை அளித்தன. எல்லா முக்கிய முடிவுகளும் இவருடைய நேரடியான பங்கேற்பின் மூலம் ஏற்கப்பட்டன; புதிய விதிமுறைகளோ, சங்க கட்டமைப்பு பற்றி இவரும் மார்க்சும் வலியுறுத்திய கோட்பாடுகளைப் பிரதிபலித்தன. சங்கத்தின் கட்டமைப்பு எளிமையாக்கப்பட்டது, இதில் உறுப்பினராவதற்கான நிபந்தனைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன, தலைமையைத் தேர்ந்தெடுப்பது, மாற்றுவது சம்பந்தமான கோட்பாடு கொண்டு வரப்பட்டது. தலைவர்களின் தனிநபர் வழிபாட்டையும் ''செல்வாக்குள்ள நபர்கள் முன் கண்மூடித்தனமாக தலை வணங்குவதையும்''* சகித்துக் கொள்ள இயலாது என்று உறுதியோடு அறிவிக்கப்பட்டது.

ஜனநாயக மற்றும் மத்தியத்துவக் கோட்பாடுகள்தான் புதிய விதிமுறைகளின் அடிப்படையாகத் திகழ்ந்தன. காங்கிரஸ் சங்கத்தின் உயர் உறுப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டு காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட

---

* *Ibid.*, p. 291.

காலத்தில் நிர்வாகம் பூராவையும் சங்கத்தின் மத்தியக் கமிட்டி கவனித்துக் கொள்ள வேண்டும். இதுவரை எந்த ஒரு ரகசிய கம்யூனிஸ்டு ஸ்தாபனமும் இப்படிப்பட்ட ஜனநாயக அடிப்படைகளில் அமைக்கப்பட வில்லை.

ஆனால் மார்க்சும் எங்கெல்சும் விரும்பிய எல்லாவற்றையும் இந்தக் காங்கிரசில் செய்ய முடியவில்லை. சங்கத்தின் பழைய காலத்தை நினைவுபடுத்தும் அம்சங்கள் விதிமுறைகளில் இன்னமும் இருந்தன, லட்சியங்கள் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. அடுத்த காங்கிரசில் விதிமுறைகளின் இறுதிப் பதிப்பை ஏற்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதுவரை இதன் நகல் கிளைகளில் விவாதத்திற்காக அனுப்பப்பட்டது.

மார்க்ஸ், எங்கெல்சின் முன்மொழிவிற்கேற்ப நேர்மையாளர் சங்கத்திற்கு கம்யூனிஸ்டு சங்கம் என்று புதிய பெயர் கொடுக்கப்பட்டது. பழைய பெயர் அதன் லட்சியங்களுக்குப் பொருத்தமானதாய் இருக்கவில்லை. சங்க உறுப்பினர்களுக்குக் காங்கிரசால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ‘‘பொதுவாக நீதியை நாம் விரும்புகின்றோம் என்பதால்... நாம் வேறுபட்டு நிற்கவில்லை... நிலவும் சமுதாய அமைப்பிற்கும் தனியுடைமைக்கும் எதிராக நாம் போராடுகின்றோம் என்பதாலும் பொதுச் சொத்துடைமையை நாம் விரும்பு கின்றோம் என்பதாலும் நாம் கம்யூனிஸ்டு

கள் என்பதாலும்தான் நாம் வேறுபட்டு நிற்கின்றோம்.''*

''எல்லோரும் சகோதரர்கள்'' என்ற நேர்மையாளர் சங்கத்தின் கோஷத்திற்குப் பதில் (இது இதன் உறுப்பினர்களுடைய கற்பனாவாதக் கண்ணோட்டங்களைப் பிரதிபலித்தது) ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!'' என்ற கோஷத்தை முன்வைப்பது என காங்கிரஸ் செய்த முடிவு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. மார்க்ஸ் எங்கெல்சால் பிரகடனப்படுத்தப் பட்டு, முதன்முதலாக சங்கத்தின் புதிய விதிமுறைகளின் நகலில் தோன்றிய இந்தப் புரட்சிகர அறைகூவல், அரசியல் மற்றும் சமூக ஒடுக்குமுறைக்கு எதிராயும் புதிய, வர்க்கங்களற்ற சமுதாயத்திற்காகவும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் அதன் வீரக் கோஷமாயிற்று.

வேலைத்திட்ட ஆவணமாக விளங்க வேண்டிய சுருக்கமான ''நம்பிக்கை அடையாளத்தை'' உருவாக்க வேண்டியது அவசியம் என்று ஒப்புக் கொண்ட காங்கிரஸ் இதைப் படிப்படியாக செய்வதுதான் சிறப்பாயிருக்கும் என்று கருதியது. நகலை உருவாக்குவதிலும் இதன் விவாதத்திலும் சங்கம் முழுவதையும் ஈடுபடுத்த வேண்டியது முக்கியமானதாய் இருந்தது. ''கம்யூனிஸ்டு நம்பிக்கை அடையாளம்'' நகலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

---

* *Der Bund der Kommunisten,* Bd. 1, S. 481.

இதில் சமுதாய வளர்ச்சிப் பிரச்சினைகள் வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து ஆராயப்பட்டன. இந் நகல் பெரும்பாலும் எங்கெல்சால் உருவாக் கப்பட்டது. கம்யூனிஸ்டு சங்க வேலைத் திட்டத்தின் இந்த முதல் நகல் இவரால் எப்போது, எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எழுதப்பட்டது என்பது இன்னமும் தெரிய வில்லை. ஆனால் இதை எழுதியது எங்கெல்ஸ்தான் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இதன் மூலம் எங்கெல்சின் கையால் எழுதப்பட்டுள்ளது, இதன் கணி சமான பகுதி பின்னால், கம்யூனிஸ்டு சங்கத்தின் இரண்டாவது காங்கிரசிற்காக இவரால் தயாரிக்கப்பட்ட **கம்யூனிசக் கோட் பாடுகள்** எனும் புதிய நகலில் சேர்ந்திருந்தது. ஒரு சில கருத்து நிலைகள் காங்கிரசின் மற்ற பிரதிநிதிகளின் முன்மொழிவிற்கேற்ப நகலில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்பதை மறுக்க முடியாது. இது அக்காலத்தில் தொழிலாளர்களுக்குப் பழக்கமானதாக இருந்த வினாவிடை வடிவில் உருவாக்கப்பட்டிருந்தது.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியைத் தோற்றுவிப்பதற்காக மார்க்சும் எங்கெல்சும் நடத்திய போராட்டத்தின் பெரும் சிக்கலான கட்டத்தைத் தொகுத் துரைப்பது போல் காங்கிரஸ் விளங்கியது. அது முதல், தொழிலாளர் இயக்கத்தில் சர்வதேச் ஸ்தாபனம் நிலவத் துவங்கியது, விஞ்ஞான கம்யூனிசம் இதன் பதாகையாக

விளங்கியது. விஞ்ஞான கம்யூனிசத்தைத் தொழிலாளர் இயக்கத்துடன் இணைக்க அடித்தளம் இடப்பட்டது. அடையப்பட்ட முடிவுகளை வளர்த்து வலுப்படுத்தும் முக்கியப் பணி முன் நின்றது.

காங்கிரஸ் பிரதிநிதிகள் கம்யூனிஸ்டு சங்க உறுப்பினர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கைக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''சங்கத்தின் கோட்பாடுகளை வெளிப்படையாக பிரகடனப்படுத்தியது மிகப்பெரும் முக்கியத்துவமுடைய ஒரு நடவடிக்கையாகும்; நல்ல ஒரு நம்பிக்கை அடையாளம் எவ்வளவு பயனுள்ளதாக இருக்குமோ அதே போல் ஒரு சில ஆண்டுகள், அல்லது ஒருவேளை ஒரு சில மாதங்கள் கழித்து காலத்திற்குப் பொருந்தாதாய் போய் பெரும்பான்மையை இழக்கும் ஒரு நம்பிக்கை அடையாளம், தீய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று காங்கிரஸ் கருதுகிறது. எனவே இந்நடவடிக்கையைக் குறிப்பான எச்சரிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும், அவசரப்படக் கூடாது. இந்தப் பிரச்சினையில்தான்... இறுதியான ஒரு நகலை முன்வைக்கக் கூடாது, நம்பிக்கை அடையாளத்தைப் பற்றிய திட்டத்தின் மீதான விவாதத்தின் மூலம் சங்கத்தில் மீண்டும் விழித்தெழும் வாழ்க்கைக்குப் புதிய உணவை அளிக்கும் பொருட்டு நிறுவன முன்மொழிவை வைக்க வேண்டுமென காங்கிரஸ் உணருகிறது. எனவே இத்திட்டத்தின் முதற்குறிப்பைத் தயாரிப்பதென்றும் இதைக் கிளைகளுக்கு

விவாதத்திற்காக அனுப்புவதென்றும் காங்கிரஸ் முடிவு செய்தது...''*

காங்கிரஸ் முடிவடைந்ததுமே கம்யூனிஸ்டு சங்கத்தின் மத்தியக் கமிட்டி பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள 10 நகரங்களுக்கு விதிமுறைகளின் நகல், வேலைத் திட்ட நகல் மற்றும் சுற்றறிக்கைக் கடிதம் ஆகியவற்றை விவாதத்திற்காக அனுப்பியது. மத்தியக் கமிட்டியின் தூதுவர்கள் அமெரிக்கா, ஹாலந்து, ஜெர்மனி, நார்வே, ஸ்விட்சர்லாந்திற்கு அனுப்பப்பட்டனர். சங்கத்தின் எல்லாக் கிளைகளிலும் நகலைப் பற்றிய காரசாரமான விவாதம் துவங்கியது.

கம்யூனிஸ்டு சங்கத்தின் மத்தியக் கமிட்டி இருந்த லண்டன் வேலைத்திட்ட நகல் பற்றிய விவாதங்களின் ஸ்தாபன மையமாக இருந்தது என்றால், பிரஸ்ஸல்ஸ் சந்தேகத்திற்கிடமற்று சித்தாந்த மையமாக இருந்தது. மார்க்சும் எங்கெல்சும் இவர்களின் சக தோழர்களும் ''கம்யூனிஸ்டு நம்பிக்கை அடையாள'' நகலை விரிவாக விவாதித்தனர், இதன் விளைவாய் ''ஏராளமான முக்கிய மாற்றங்கள் முன்மொழியப்பட்டன''**. கம்யூனிஸ்டு சங்கத்தின் பத்திரிகையாகிய Deutsche-Brusseler Zeitung இல் மார்க்ஸ், எங்கெல்ஸ், வோல்ஃப், மற்ற சங்க உறுப்பினர்

---

* *Der Bund der Kommunisten,* Bd. 1, S. S. 484—485.

** *Ibid.,* S. 539.

கள் எழுதிய கட்டுரைகள்தான் எதிர்கால வேலைத்திட்டத்தைத் தயார்படுத்துவதிலும் நடைபெறவிருக்கும் புரட்சியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் போர்த்தந்திரத்தையும் நடைமுறை வழிகளையும் முடிவு செய்வதிலும் பிரஸ்ஸல்ஸ் சங்க உறுப்பினர்கள் ஆற்றிய முக்கியப் பங்காகும். இவற்றில் உள்ள கருத்து நிலைகளில் பல கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை எழுதும் போது ஏதாவது ஒரு வடிவத்தில் பயன்படுத்தப்பட்டன.

1847 அக்டோபர் இறுதியில் நடைபெற்ற கம்யூனிஸ்டு சங்க பாரிஸ் வட்டக் கமிட்டியின் கூட்டத்தில், அக்டோபர் நடுவில் பாரிசிற்கு வந்து வேலைத்திட்ட நகல் பற்றிய விவாதங்களில் தீவிரமாகக் கலந்து கொண்ட எங்கெல்சிற்கு வேலைத்திட்டத்தின் புதிய நகலைத் தயாரிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது. இப்பணியில் இறங்கிய எங்கெல்ஸ், ''முக்கியத்துவம் இல்லாத ஒரு சில சிறு விஷயங்கள் தவிர, நமது கண்ணோட்டங்களுக்கு முரண்பாடான எதுவும் இந்த நகலில் இடம் பெறாமலிருக்க''* முயற்சி செய்யப் போவதாக மார்க்சிற்குத் தெரிவித்தார்.

எங்கெல்சால் உருவாக்கப்பட்ட வேலைத் திட்ட நகல் **(கம்யூனிசக் கோட்பாடுகள்)** சாராம்சத்தில் ''கம்யூனிஸ்டு நம்பிக்கை அடையாளத்தின்'' மேற்கொண்ட வளர்ச்சி

* K. Marx, F. Engels, *Werke,* Bd. 27, S. 107.

யாக, பிற்சேர்க்கையாக இருந்தது, என்றாலும் இது உண்மையிலேயே ஒரு புதிய படைப்பு, "கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்" **பூர்வாங்க** முதற்குறிப்பு எனலாம். இப்பணியில் ஈடுபட்டிருந்த போதுதான் வேலைத்திட்டத்தின் வடிவத்தை அடிப்படை ரீதியாக மாற்றும் யோசனை எங்கெல்சின் மனதில் உதித்தது. "'நம்பிக்கை அடையாளத்தைப்' பற்றி யோசித்துப் பார். வினாவிடை வடிவத்தை விட்டுவிட்டு இதற்கு 'கம்யூனிஸ்டு அறிக்கை' என்று பெயரிடுவதுதான் சிறந்ததாக இருக்குமென நான் கருதுகிறேன். ஏனெனில் இதில் பிரச்சினையின் வரலாற்றை ஓரளவாவது விளக்க வேண்டும். இதற்கு இப்போதுள்ள வடிவம் முழுக்க முழுக்க ஏற்புடையதல்ல"* என்று 1847 நவம்பர் 23—24ல் எங்கெல்ஸ் மார்க்சிற்கு எழுதினார்.

உண்மையில், **கம்யூனிசக்** கோட்பாடுகளில் எங்கெல்ஸ் "பிரச்சினையின் வரலாற்றிற்கு" வரும் இடங்களில் அவர் வினாவிடை வடிவத்தைப் பயன்படுத்தவில்லை. "கம்யூனிசம் என்றால் என்ன என்ற கேள்வியிலிருந்து துவங்கி பின் நேரடியாக பாட்டாளி வர்க்கத்திற்கு வருகிறேன்—இது தோன்றிய வரலாறு, முந்தைய வேலையாட்களிடமிருந்து பாட்டாளிகள் எப்படி மாறுபடுகின்றனர், பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டின்

* K. Marx, F. Engels, *Selected Correspondence,* p. 40.

வளர்ச்சி, நெருக்கடிகள், முடிவுகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறேன். இடையில் பல்வேறு இரண்டாம் பட்சமான விஷயங்கள், இறுதியில் கம்யூனிஸ்டுகளின் கட்சிக் கொள்கை, ஏனெனில் இதைப் பற்றி ஒளிவுமறைவின்றி கூறலாம்'' * என்று எங்கெல்ஸ் மார்க்சிற்கு எழுதினார்.

**கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** பூர்வாங்க முதற்குறிப்பு என்ற வகையில் **கம்யூனிசக் கோட்பாடுகள்** இன்றும் பெரிதும் முக்கியமானவை, ஏனெனில் இவை **அறிக்கையின்** தனிப்பட்ட கருத்து நிலைகளைத் தமக்கே உரித்தான வகையில் விளக்குகின்றன, முழுமையாக்குகின்றன. இப்படைப்பில், கம்யூனிச சமுதாயத்தின் முக்கிய சிறப்பியல்புகள், பழைய சமுதாய உறவுகளை மாற்றியமைப்பதற்காக பாட்டாளி வர்க்க அரசு மேற்கொள்ள வேண்டிய மிக முக்கிய நடவடிக்கைகள், கம்யூனிசத்தை அடையும் வழிகள், சாதனங்கள் ஆகியவற்றைப் பற்றி எங்கெல்ஸ் விளக்கும் இடம் விசேஷமாக குறிப்பிடத் தக்கதாகும். தனியுடைமையை ஒழிக்கப் பாடுபடும் கம்யூனிஸ்டுகள், உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான பொதுச் சொத்துடைமையைப் பொருளாதார அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாய அமைப்பைத் தோற்றுவிக்க முயலுகின்றனர், இதில் போட்டிக்குப் பதில் ஒற்றுமை, மக்களின் சுதந்திரமான ஒத்துழைப்பு நிலவும்

---

* *Ibid.*

என்றார் அவர். சமுதாய நலன்களுக்காக, ஒரே ஐக்கிய திட்டத்தின் அடிப்படையில், சமுதாய உறுப்பினர்கள் அனைவரின் பங்கேற் போடு உற்பத்தியை நடத்தினால், அது உற்பத்தியின் வாய்ப்புகளைப் பரவலாகப் பயன்படுத்த உதவும், இதனால் எல்லா உழைப்பாளிகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யலாம். இச்சூழ்நிலையில் சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிரிப்பது தேவையற்றதாகும். ''உழைப்புப் பிரிவினையின் வாயிலாகவே வர்க்கங்கள் தோன்றின. இந்த உழைப்புப் பிரிவினை இதுகாறும் நிலவி வந்த வடிவில் முற்றாக மறைந்து விடும்''* என்று எங்கெல்ஸ் எழுதுகிறார். அதோடு கூட நகரத்திற்கும் கிராமத்திற்கும், மூளையுழைப்பிற்கும் உட லுழைப்பிற்கும் இடையிலுள்ள எதிர்நிலையும் மறையும். வேறு மாதிரியான உற்பத்தி மற்றும் வினியோகக் கோட்பாடுகளின் அடிப் படையில் கட்டப்பட்ட புது சமுதாயத்திற்குப் புதுவிதமான மக்கள் — ''சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த ஆற்றல்களைக் கொண்ட மக்கள், உற்பத்தி அமைப்பு முறை அனைத் தையும் மேற்பார்வை செய்ய வல்ல மக்கள்''** — தேவைப்படுவார்கள். குடும்ப வடிவங்களின் வளர்ச்சி, தேசிய இனங்களின் பரஸ்பர உறவுகள் போன்றவையும் இப்படிப்பட்ட

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 161.

** அதே நூல், பக்கம் 162.

சமுதாயத்தில் புதிய தன்மையைப் பெறும் என்பது இயற்கையே.

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போக்கு மற்றும் தன்மை பற்றிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போது இது எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு ஜனநாயக அரசியலமைப்பைத் தோற்றுவிக்கும், இதன் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்திற்கு வழிகோலும் என்று எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.* எங்கெல்லாம் பாட்டாளி வர்க்கம் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ளதோ அங்கெல்லாம் அதன் நேரடி ஆதிக்கம் நிறைவேற்றப்படும் என்று அவர் தெளிவு படுத்துகிறார். பாட்டாளிகள் மட்டுமின்றி சிறு விவசாயிகளும் நகர குட்டி முதலாளிகளும் (இவர்கள் இன்னமும் பாட்டாளிகளாக மாற்றப்படுகிறார்கள், தம் அரசியல் நலன் களைப் பொறுத்தவரை பாட்டாளி வர்க் கத்தை மேன்மேலும் சார்ந்தவர்களாகி வரு கின்றனர், எனவே விரைவில் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்கு இணங்கி விடுவார்கள்) பெரும்பான்மையாக உள்ள நாடுகளில் புரட்சியின் முதல் கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஆதிக்கம் மறைமுக மானதாய் இருக்கும். இதன் புதிய கட்டத் திற்கு மாறிச் செல்ல ஒருவேளை இன்னமும் புதிய போராட்டம் தேவைப்படலாம், இதில்

---

* அதே நூல், பக்கம் 156 பார்க்க.

பாட்டாளி வர்க்கம் இறுதி வெற்றியைப் பெறும்.*

ஜனநாயக அமைப்பை நிலைநாட்டுவதைப் பாட்டாளி வர்க்கம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் காட்டிய எங்கெல்ஸ், மாறுகால கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான நடவடிக்கைகள் அடங்கிய வேலைத்திட்டத்தை வெளியிட்டார். வேலைத் திட்டத்தின் ஜூன் நகலில் மூன்று கோரிக் கைகள் மட்டுமே அடங்கியிருந்தன என்றால், புதியதில் 12 கோரிக்கைகள் இருந்தன. பின்னால் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் இவை பத்து கோரிக்கைகளாக்கப்பட்டு பொதுமைப்படுத்தப்பட்ட வடிவத்தில் வகுத் துரைக்கப்பட்டன.

கடைசியாக, தனியுடைமையை சமாதான வழியில் ஒழிக்க முடியுமா? என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் போது எங்கெல்ஸ், கம்யூனிஸ்டு கள்தான் இதை எதிர்ப்பவர்களில் கடைசியாக இருப்பார்கள் என்று கோடிட்டுக் காட்டி னார். ஏனெனில் சதித் திட்டங்கள் எல்லாம் பயனற்றவை மட்டுமல்ல, கேடு விளைவிப்பவையும் கூட என்பதைக் கம்யூ னிஸ்டுகள் நன்றாக அறிவார்கள். வேண்டு மென்று விருப்பப்பட்டோ தன்னிச்சையாக வோ புரட்சியை செய்ய முடியாது, எங்கும் எப்போதும் புரட்சிகள் சம்பவங்களின் அவசி யமான விளைவாகவே இருந்து வந்துள்ளன,

---

* அதே நூல், பக்கம் 156 பார்க்க.

இச்சம்பவங்கள் தனிப்பட்ட கட்சிகள் அல்லது முழு வர்க்கங்களின் சித்தத்தையும் தலைமையையும் முற்றிலும் சாராதவை என்பதும் இவர்களுக்கு நன்கு தெரியும். அதே சமயம் கிட்டத்தட்ட எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பலவந்தமாக அடக்கப்படுகிறது என்பதையும் இதன் மூலம் கம்யூனிசத்தின் எதிராளிகள் எல்லா வழிகளிலும் புரட்சியை ஊக்குவிக்கின்றார்கள் என்பதையும் இவர்கள் காண்கிறார்கள். இவையெல்லாம் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தை இறுதியில் புரட்சியில் இறங்க தூண்டினால், கம்யூனிஸ்டுகளாகிய நாம் பாட்டாளி வர்க்கத்தின் லட்சியத்துக்கு இப்போது சொல் மூலம் செய்து வருவதற்கு சற்றும் குறையாமல் செயலின் மூலம் உதவுவோம் என்று எங்கெல்ஸ் எழுதினார். *

எங்கெல்சால் முன்வைக்கப்பட்ட **கம்யூனிசக் கோட்பாடுகளை** கம்யூனிஸ்டு சங்க பாரிஸ் வட்டக் கமிட்டி கட்சியின் வேலைத்திட்ட நகலாக அங்கீகரித்தது. சங்கத்தின் 2வது காங்கிரசிற்கு பாரிஸ் கிளைகளின் பிரதிநிதியாக எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரஸ்ஸல்ஸ் வட்டத்திலிருந்து மார்க்ஸ் பிரதிநிதியாக வந்தார்.

கம்யூனிஸ்டு சங்கத்தின் இரண்டாவது காங்கிரஸ் 1847 நவம்பர் 29ந் தேதி ஆரம்பமாக வேண்டியிருந்தது. காங்கிரசில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய

---

* அதே நூல், பக்கம் 155 பார்க்க.

பொதுவான போக்கை உருவாக்கவும் லண்டனில் விவாதிக்க வேண்டியிருந்த முக்கியப் பிரச்சினைகள் பற்றி முடிவு செய்யவும் மார்க்சும் எங்கெல்சும் நவம்பர் 27ந் தேதி பெல்ஜிய கடற்கரை நகரமாகிய ஓஸ்தென்ட் நகரில் சந்தித்தனர். எங்கெல்ஸ் தன் **கம்யூனிசக் கோட்பாடுகளை** காங்கிரசிற்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார். அனேகமாக மார்க்சும் வேலைத்திட்டம் பற்றிய முதற் குறிப்பைத் தீட்டியிருக்க வேண்டும். எது எப்படியிருந்தபோதிலும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையைக்** கூட்டாக எழுதத் துவங்கும் முன் காங்கிரசிற்கு முன்னராகவே தானும் மார்க்சும் தனித்தனியே வேலைத்திட்ட நகல்களை உருவாக்கியதைப் பின்னால் எங்கெல்ஸ் நினைவுகூர்ந்தார். துரதிர்ஷ்டவசமாக கம்யூனிஸ்டு சங்கத்தின் இரண்டாவது காங்கிரசின் ஆவணங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே மார்க்சின் நகல் எப்படியிருந்தது என்று தெரியாது. ஆனால் காங்கிரஸ் நடைபெற்ற 10 நாட்களில் மார்க்சின் வசீகரமான தர்க்கம், இவருடைய வாதங்களின் சக்தி, பெரும் ஞானம், நம்பிக்கைகளின் உறுதி, பரந்த சிந்தனை, தன்னைக் கேட்பவர்களைக் கவரும் திறமை, ஊசலாட்டங்கள், சந்தேகங்களிலிருந்து இவர்கள் விடுபட உதவும் திறமை முதலியன முழுக்க வெளிப்பட்டன என்பது தெரியும்.

வேலைத்திட்டத்தைப் பற்றிய விவாதம்தான் காங்கிரசின் மையப் பணியாக இருந்தது.

காரசாரமான விவாதங்களில் மார்க்சும் எங்கெல்சும் புதிய கோட்பாடுகளைக் காத்து நின்றனர், விஞ்ஞான கம்யூனிசத்தின் முக்கியக் கருத்து நிலைகளைத் திட்டவட்டமாக, விரிவாக ஆதாரப்படுத்தினர். ''இறுதியில் எல்லா கருத்து மாறுபாடுகளும் சந்தேகங்களும் ஒரு வழியாக அகற்றப்பட்டு, புதிய கோட்பாடுகள் ஒருமனதாக ஏற்கப்பட்டன. அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு எனக்கும் மார்க்சிற்கும் அளிக்கப்பட்டது''* என்று எங்கெல்ஸ் பின்னால் எழுதினார்.

1847 டிசம்பர் 8ந் தேதி காங்கிரஸ் முடிந்தபோதிலும் மார்க்சும் எங்கெல்சும் லண்டனில் இன்னமும் சில நாட்களைக் கழித்தனர். இந்நேரத்தில் அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் முதற்குறிப்பு அல்லது சுருக்கமான நகல் போன்ற ஏதாவது ஒன்றைத் தயாரித்து அதைப் பற்றி கம்யூனிஸ்டு சங்க மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுடன் அனேகமாக விவாதித்திருக்கலாம். எது எப்படியிருப்பினும் அறிக்கையின் முதல் பக்கத்தில் இது லண்டனில் குழுமியிருந்த ''பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளால்''** உருவாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்னமும் நிறைய வேலை பாக்கியிருந்தது, எனவே மார்க்சும் எங்கெல்சும் பிரசுரிப்பதற்காக ''முழு அளவி

---

* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. 3, p. 182.

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**, பக்கம் 40.

லான தத்துவார்த்த, நடைமுறைக் கட்சி வேலைத்திட்டத்தை வகுத்தளிக்கும்'' * கட்டளையைப் பெற்று தமக்களிக்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்ட நகல்களையும் மற்ற காங்கிரஸ் ஆவணங்களையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

1847 டிசம்பர் இறுதியில் எங்கெல்ஸ் பாரிசிற்குக் கிளம்பிச் செல்லும் வரையில் இவரும் மார்க்சும் பிரஸ்ஸல்சில் இந்தத் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டிருந்தனர். 1848 ஜனவரியில் மார்க்ஸ் மட்டும் தனியாக இதை முடித்தார்.

1848 ஜனவரி இறுதியில் கையெழுத்துப் பிரதி லண்டனுக்கு அனுப்பப்பட்டது; பிப்ரவரியில், பாரிசில் நடைபெற்ற புரட்சி பற்றிய செய்தியோடு கூட கிட்டத்தட்ட அதே சமயத்தில், 46, லிவர்பூல் ஸ்ட்ரீட்டில் உள்ள சிறு அச்சகத்திலிருந்து 23 பக்கங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரம் வெளிவந்தது. வி. இ. லெனினின் வார்த்தைகளில் சொன்னால் இதன் சாரம் ''நாகரிக உலகில் ஒழுங்கமைப்பு பெற்று அணிதிரண்டு போராடி வரும் பாட்டாளி வர்க்கம் முழுவதையும் இன்றைக்கும் கூட ஊக்குவித்து இயக்கிச் செல்கிறது'' * *.

---

* அதே நூல், பக்கம் 15.

** வி. இ. லெனின், **மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1985, பக்கம் 92.

அத்தியாயம் மூன்று

## ''இந்தச் சிறு பிரசுரம் மிகப் பெரிய நூல் தொகுதிகளுக்கு சமமானது''*

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை மார்க்சியத் தத்துவத்தின் முந்தைய வளர்ச்சி முழுவதையும் தொகுத்துரைத்தது போல் அமைந்தது. இந்த நேரத்திற்குள் மார்க்சியம் உருவாவது பெரும்பாலும் முடிவடைந்திருந்தது, இது உலகின் முன் ஒரு முழுமையான உலகக் கண்ணோட்டமாக, இதை அறிந்து, மாற்றும் ஒரு கோட்பாட்டு வழிப்பட்ட புதிய கருத்தமைப்பாக நின்றது. இந்தப் புதிய கருத்தமைப்புதான் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேசக் கட்சியாகிய கம்யூனிஸ்டு சங்க வேலைத் திட்டத்தின் அடிப்படையாகத் திகழ்ந்தது.

தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையிலான ஒற்றுமை பற்றிய கோட்பாடுதான் இக்கட்சிக்கு, இக்கட்சியினுடைய போராட்டத்தின் சித்தாந்த அடிப்படையாகத் திகழும் போதனைக்கு அடிப்படை அம்சமாக இருந்தது, இன்றும் இருந்து வருகிறது. அறிக்கையின் முதல் இரண்டு அத்தியாயங்களில் விஞ்ஞான கம்யூனிசத்தின் தத்துவார்த்த அடிப்படைகள் விளக்கப்படும் அதே சமயம் மூன்றாவது அத்தியாயத்தில்

---

* வி. இ. லெனின், மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள், பக்கம் 92.

பாட்டாளி வர்க்கத் தன்மையற்ற சோஷலிசத்தின் பல்வேறு போக்குகள் விமரிசிக்கப்படுவதும் நான்காவது, இறுதி அத்தியாயத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கத்தின் நடைமுறைத் தந்திர சிறப்பியல்புகள் விவரிக்கப்பட்டிருப்பதும் தற்செயலானது அல்ல.

**முதலாளிகளும் பாட்டாளிகளும்** எனும் முதல் அத்தியாயத்தில் கம்யூனிசப் புரட்சியின் தவிர்க்க இயலாமையும் நியதியும் ஆதாரப்படுத்தப்படுகின்றன. வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கருத்தமைப்பை உருவாக்கும் போது மார்க்சும் எங்கெல்சும் செய்த மிக முக்கிய முடிவுகளில் ஒன்றுடன் முதல் அத்தியாயம் ஆரம்பமாகிறது. ''இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்''* என்பதுதான் அந்த முடிவாகும். இந்த வாக்கியத்தைப் பற்றி 1888இல் எழுதிய குறிப்பில் எங்கெல்ஸ், இவை புராதன கூட்டுவாழ்வுச் சமூகங்களின் இடிபாடுகளில் எழுந்த சமுதாயங்களைக் குறிப்பதாகத் தெரிவித்தார். கூட்டுச் சமூகத்தின் சிதைவுதான் ''தனித்தனியான, முடிவில் ஒன்றுக்கொன்று பகைமையான வர்க்கங்களாய்''** சமுதாயம் பிரிவதற்கான ஆரம்பமாக இருந்தது. பின்னால் மார்க்சே

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை,** பக்கம் 41.

** அதே நூல், பக்கம் 42.

தன் சகதோழர்களில் ஒருவரும் கம்யூனிஸ்டு சங்க உறுப்பினருமான யோ. வெய்டமையருக்கு (1848—1849ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வி யடைந்த பிறகு இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குக் குடிபெயர்ந்தார்) எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறினார்: ''என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவற்றின் இடையே போராட்டம் நடைபெறுவதையோ கண்டுபிடித்த பெருமை எதுவும் எனக்கு உரியது அல்ல. எனக்கு நீண்ட காலத்துக்கு முன்பே முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை வருணித்திருக்கிறார்கள், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் வர்க்கங்களின் பொருளாதார அமைப்பியலை விரித்துரைத்திருந்தார்கள்''* என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். **வர்க்கங்கள் நிலவுவதானது உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன்** மட்டுமே தொடர்புடையது** என்பதை நிரூபித்து மேற்கூறிய கண்டுபிடிப்பை விஞ்ஞான அடிப்படையில் வைத்ததுதான் மார்க்சின் இறவாப் புகழ் பெற்ற, சந்தேகத்திற்கிடமற்ற சேவையாகும். மேலும் தன் காலத்திய சமுதாயத்தில் வர்க்கப் போராட்ட வளர்ச்சியின் தன்மையை ஆராய்ந்த அவர், இது ''தவிர்க்க முடியாத

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 1, p. 528.
** *Ibid.*

வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது'', ''இச்சர்வாதிகாரமானது, எல்லா வர்க்கங்களையும் ஒழித்துக் கட்டி வர்க்கங்களற்ற சமுதாயத்தை நோக்கிய மாறுதல் கட்டம் மட்டுமே''* என்ற முடிவிற்கு வந்தார்.

இக்கண்ணோட்டத்திலிருந்து முந்தைய வரலாறு முழுவதையும் ஆராய்ந்த பின் மார்க்சும் எங்கெல்சும் பூர்ஷ்வா சமுதாயத்தை சித்தரிக்கின்றனர். ''நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளிலிருந்து முளைத்தெழுந்துள்ள தற்கால முதலாளித்துவ சமுதாயம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவுகட்டி விடவில்லை; பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டியிருக்கிறதே அன்றி வேறில்லை''** என்று அவர்கள் எழுதுகின்றனர்.

அறிக்கையின் ஆசிரியர்கள் ஏன் இதைக் கோடிட்டுக் காட்டுவது அவசியம் என்று நினைத்தார்கள்? ஏனெனில் அவர்கள் காலத்திய பூர்ஷ்வா சமுதாயம் இன்னமும் இளமையானதாக இருந்தது, இது எந்தக் கோஷங்களின் கீழ் ஆதிக்கம் செலுத்தியதோ அந்தக் கோஷங்களைப் பலர் இன்னமும் தொடர்ந்து நம்பி வந்தனர். ''சுதந்திரம், சமத்துவம்,

---

* *Ibid.*

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, பக்கங்கள் 42—43.

சகோதரத்துவம்'' என்ற பதாகையின் கீழ் பிரெஞ்சு மக்கள் பாஸ்டிலி கோட்டையைத் தாக்கினார்கள்; மன்னராட்சியையும் நிலப்பிரபுக் களையும் தோற்கடித்து வெற்றி பெறுவதே பிரகடனப்படுத்தப்பட்ட கோரிக்கைகளுக்கான உத்திரவாதமாக இம்மக்களுக்குப் பட்டது. ஆனால் நடைமுறையில் உண்மையான சுதந்திர மோ சமத்துவமோ கிடைக்காததால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். எந்த மூன்றாவது சமூகப் பிரிவின் நலன்கள் 18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியின் போது நிலப்பிரபுக்களாலும் எதேச்சாதிகாரத்தாலும் ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினரின் நலன் களோடு ஒத்திருந்தனவோ அந்த மூன்றாவது சமூகப் பிரிவினர் முதலாளி வர்க்கத்தினரா யினர். மக்களின், உழைப்பாளிகளின் நலன் களும் இந்த வர்க்கத்தின் நலன்களும் சொத்தற்றவர்கள் மற்றும் சொத்துடைய வர்களின் நலன்களைப் போல், சுரண்டப் படுபவர்கள் மற்றும் சுரண்டுபவர்களின் நலன் களைப் போல் நேரடியாக முரண்பட்டு நிற்பது உடனேயே தெளிவாயிற்று. நிலப் பிரபுக்களை ஆட்சியிலிருந்து அகற்றிய பூர்ஷ்வா வர்க்கம், முதலாளி வர்க்கம் இவர்களுடனான தன் முரண்பாட்டையும் இரண்டாம் இடத் திற்கு மாற்றியது. அதுமுதல் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும், மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான முரண்பாடு முதலிடத்திற்கு வந்தது. இந்தப் புதிய வர்க்க முரண்பாடு ''புதிய போராட்ட



7–718

வடிவங்களையும்'' * நிர்ணயித்தது.

புதிய சகாப்தமாகிய பூர்ஷ்வா வர்க்கத்தின் சகாப்தம் இந்த வர்க்க முரண்பாட்டை இன்னமும் வெளிப்படையானதாக ஆக்கியது. ''சமுதாயம் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய், எதிரும் புதிருமான இரு பெரும் வர்க்கங்களாய் – முதலாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கமுமாய் – பிளவுண்டு வருவதை'' ** இங்கிலாந்தின் உதாரணம் மற்றவற்றை விடத் தெளிவாகக் காட்டியது. எனவேதான் அறிக்கையின் ஆசிரியர்கள் முதலாளித்துவ சமுதாயத்தின் இந்த இரண்டு முக்கிய வர்க்கங்கள் தோன்றி, வளர்ந்த நிகழ்ச்சிப் போக்கை ஆராய்கின்றனர், இவற்றின் போராட்டத்தைப் பகுப்பாய்வு செய்கின்றனர். சாராம்சத்தில் இந்தப் பகுப்பாய்வு கம்யூனிசப் புரட்சியின் இரண்டு முக்கிய முன்தேவைகளைப் பற்றிய பகுப்பாய்வாகும், அல்லது ஜெர்மன் சித்தாந்தத்தில் மார்க்ஸ் குறிப்பிட்டபடி ''சர்வபொது மாற்றத்தின் பொருளாயத அம்சங்களைப்'' பற்றிய பகுப்பாய்வாகும்; ''அதாவது ஒரு புறம், குறிப்பிட்ட உற்பத்திச் சக்திகள், மறு புறம், முந்தைய சமுதாயத்தின் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு எதிராக மட்டுமின்றி, முந்தைய 'வாழ்க்கை உற்பத்திக்கே' எதிராகவும்... போராடும் புரட்சிகர மக்கள் திரளினர்

---

* அதே நூல், பக்கம் 43.

** அதே நூல், அதே பக்கம்.

உருவாவது''* என்பதைப் பற்றிய பகுப்பாய்வாகும்.

முதல் அத்தியாயத்தின் முதல் பாதியில் உற்பத்திச் சக்திகள் மற்றும் தொழில் துறையின் வளர்ச்சி சித்தரிக்கப்படுகிறது. இவற்றோடு கூடத்தான் உலகச் சந்தையும் வளர்ந்து பரந்தது. இந்த வளர்ச்சி, பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழ், இதன் தலைமையில் நடைபெறுகிறது, இது ஈவிரக்க மின்றி எங்கும் நிலப்பிரபுத்துவ, தந்தைவழி உறவுமுறைகளை அழித்தொழிக்கிறது. இவற்றிற்குப் பதிலாக அப்பட்டமான பொருளாயத நலன்களின் அடிப்படையிலான, ஈவிரக்கமற்ற ''கொள்ளை லாப'' அடிப்படையிலான உறவுகள் வருகின்றன. எல்லா சுதந்திரங்களிலும் பூர்ஷ்வா வர்க்கம் வர்த்தக சுதந்திரத்தையே பெரிதும் நாடி விரும்புகிறது; மனிதனை மனிதன் சுரண்டுவது பற்றி முந்தைய சகாப்தங்களில் நிலவிய எல்லா மத, அரசியல் மாயைகளையும் தூக்கியெறிந்து விட்டு அவற்றிற்குப் பதில் ஒளிவுமறைவற்ற, நேரடியான, மானங்கெட்ட சுரண்டலில் இறங்குகிறது.

''நீண்டதொரு வளர்ச்சிப் போக்கின் விளைவாய், உற்பத்தி முறைகளிலும் பரிவர்த்தனை முறைகளிலும் வரிசையாய் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாய்''** உருவான பூர்ஷ்வா வர்க்கத்தால் ''ஓயாது ஒழியாது உற்பத்திக்

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 5, p. 54.

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**, பக்கம் 44.

கருவிகளிலும், இதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும், இவற்றுடன் கூடவே சமூக உறவுகள் அனைத்திலுமே புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தாமல் வாழ முடியாது''*'. இது மட்டுமல்ல, முந்தைய தொழில் வர்க்கங்கள் எல்லாம் தமக்குப் பழக்கப்பட்டுப் போன உற்பத்தி முறையை அப்படியே தக்க வைக்க முயன்றன என்றால், பூர்ஷ்வா வர்க்கம் இடையறாது புதியவற்றைத் தேடுகிறது, தேக்கமுற்ற பழையதை நிரந்தரமாக அழிக்கிறது; இது சமூக உறவுகள் முழுவதையும் இடையறாது நிலைகுலையச் செய்கின்றது. **

முதலாளித்துவ உற்பத்தி முறை தேசிய இன மற்றும் நாடுகளுக்கிடையேயான உறவுகளின் மீது செலுத்தும் தாக்கத்தின் இயக்கவியல் தன்மையை **அறிக்கையின்** ஆசிரியர்கள் விசேஷமாகச் சுட்டிக்காட்டுகின்றனர். ஒரு புறம் உற்பத்திச் சாதனங்கள், சொத்துடைமை மற்றும் மக்கள்தொகை குவிக்கப்பட்டதானது அரசியல் ரீதியான மையப்படுத்தலுக்கு, தனித்தனி நலன்களையும் சட்டங்களையும் அரசாங்கங்களையும் சுங்க வரிவிதிப்பு முறைகளையும் கொண்டு ''சுயேச்சையாகவோ, அல்லது தளர்ந்த இணைப்புடனோ இருந்த மாநிலங்கள் ஒரே அரசாங்கத்தையும் ஒரே சட்டத் தொகுப்பையும்

---

* அதே நூல், பக்கம் 47.

** அதே நூல், பக்கம் 47 பார்க்க.

தேச அளவிலான ஒரே வர்க்க நலனையும் ஒரே சுங்கவரி முறையையும் கொண்ட ஒரே தேசமாய்'' * ஒன்றிணைக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. மறு புறம் உலகச் சந்தையின் தோற்றம், இது விரிந்து பரந்தது, உற்பத்தியும் நுகர்வும் உலகமயமாக்கப்பட்டது ஆகியவை தொழில்துறையின் தேசிய அடிப்படையை அகற்றின. பாரம்பரிய தேசியத் தொழில் வகைகளுக்குப் பதில் புதிய தொழில்கள் தோன்றுகின்றன. ''இந்தப் புதிய தொழில்களைத் தோன்றச் செய்வது நாகரிக நாடுகள் யாவற்றுக்கும் ஜீவமரணப் பிரச்சினையாகி விடுகிறது. முன்பிருந்தவற்றைப் போல் இந்தப் புதிய தொழில்கள் உள்நாட்டு மூலப் பொருள்களை மட்டும் உபயோகிப்பவை அல்ல, தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து தருவிக்கப்படும் மூலப்பொருள்களையும் உபயோகிப்பவை. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் தாய்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு எல்லா பகுதிகளிலும் நுகரப்படுகிறவை.'' * *

இவ்வாறாக எல்லா தேசங்களையும் ஏன் மிகவும் பின்தங்கிய தேசங்களைக் கூட தொழில்துறை, பூர்ஷ்வா வளர்ச்சியினுள் இழுப்பதன் மூலம் முதலாளித்துவம் இத்தேசங்கள் நாகரிகமடைந்த நாடுகளைச் சார்ந்திருக்குமாறும், விவசாயி மக்களினங்கள்

---

* அதே நூல், பக்கம் 50.

** அதே நூல், பக்கம் 48.

பூர்ஷ்வா மக்களினங்களைச் சார்ந்திருக்குமாறும், கிழக்கு மேற்கைச் சார்ந்திருக்குமாறும் செய்கிறது. நவீன அனுபவம் காட்டும்படி, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் இச்சார்பு நிலையைத் தக்கவைத்து நிரந்தரமாக்க முயலுகின்றன, ஏனெனில் மேற்கூறிய இடங்களிலிருந்து மூலப்பொருட்களையும் மலிவான வேலைச் சக்தியையும் பெற இது உதவுகிறது.

அதே சமயம் உற்பத்திச் சக்திகளின் இப்படிப்பட்ட வேகமான வளர்ச்சியும் உற்பத்தி சர்வதேசியமயப்படுத்தப்பட்டதும் மேன்மேலும் புதிய புதிய மக்கள் பிரிவினர் இதனுள் ஈடுபடுத்தப்பட்டதும் சமுதாயத்தையே அனேகமாக புரட்சிகரமாக மாற்றின எனலாம். நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பினுள் தோற்றுவிக்கப்பட்ட, பூர்ஷ்வா வர்க்கம் உருப்பெற்று எழ அடிப்படையாக இருந்த உற்பத்தி மற்றும் பரிவர்த்தனைச் சாதனங்களுக்கு நிலப்பிரபுத்துவ சொத்துடைமை உறவுகளின் வரம்புகள் போதவில்லை. இவை உற்பத்தியை வளர்ப்பதற்குப் பதில் இதற்குப் பூட்டப்பட்ட கால்விலங்குகளாய் மாறின. இந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டியிருந்தது; இவை உடைத்தெறியப்பட்டன.* முதலில் இங்கிலாந்திலும் பிரான்சிலும் நடைபெற்ற பூர்ஷ்வா புரட்சிகள் புதிய வர்க்கத்தின் பொருளாதார, அரசியல்

---

* அதே நூல், பக்கங்கள் 50—51 பார்க்க.

ஆதிக்கத்தை நிலைநாட்டின. ‘‘நவீன கால அரசின் ஆட்சியதிகாரமானது முதலாளி வர்க்கம் அனைத்துக்குமான பொது விவகாரங்களை நிர்வகிக்கும் குழுவே அன்றி வேறில்லை’’ * என்று அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

இப்படிப்பட்ட இயக்கவியல் வளர்ச்சித் தன்மை பூர்ஷ்வா சமுதாயத்திற்கும் உரித்தானது என்பதை வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கருத்தமைப்பிற்கு முழுக்க ஏற்றபடி மார்க்சும் எங்கெல்சும் காட்டுகின்றனர். தானே தோற்றுவித்த சக்தி மிக்க உற்பத்திச் சக்திகளை பூர்ஷ்வா வர்க்கத்தால் சமாளிக்க முடியவில்லை, ஏனெனில் தனியுடைமை உறவுகளின் நெருக்கமான வரம்புகளால் இவற்றின் மேற்கொண்ட வளர்ச்சி கட்டுப் படுத்தப்பட்டது; இந்த உறவுகள் பூர்ஷ்வா வர்க்கம் மற்றும் அதனுடைய ஆதிக்கம் நிலவுவதற்கு அவசியமான நிலைமைகளாகும். ** அமித உற்பத்தியின் தொற்று நோய்கள், முறையான வர்த்தக நெருக்கடிகள் — இவை தான் தம்மை விலங்கிட்டு கட்டிப் போடும் உற்பத்தி உறவுகளுக்கு எதிரான நவீன உற்பத்திச் சக்திகளின் எதிர்ப்பின் வடிவங்களாகும். இப்படிப்பட்ட நெருக்கடிகளின் போது சமுதாயம் பின்னுக்குத் தள்ளப் படுகிறது, ஏனெனில் ஒவ்வொரு முறையும்

* அதே நூல், பக்கம் 45.

** அதே நூல், பக்கம் 51.

இருப்பிலுள்ள உற்பத்திப் பொருட்களின் பெரும் பகுதி மட்டுமின்றி, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளின் ஒரு பெரும் பகுதியும் அழிக்கப்படுகிறது.* இது இவ்வாறு நடை பெறக் காரணம் முதலாளித்துவ சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் ''முதலாளித்துவச் சொத் துடைமை உறவுகளின் வளர்ச்சிக்கு இனி உதவுவதாய் இல்லை. மாறாக, அவை இந்த உறவுகளுக்குப் பொருந்தாதபடி அளவு மீறி வலிமை மிக்கவையாகி விட்டன. இந்த உறவுகள் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாகி விட்டன''. உற்பத்திச் சக்திகள் இந்தத் தடைகளைக் கடக்க முற்பட்டதும் அவை முதலாளித்துவ சமுதாயம் முழுவதிலும் குழப்பத்தை உண்டாக்குகின்றன, ''முதலாளித் துவச் சொத்துடைமை நிலவுவதற்கே அபா யத்தை ஏற்படுத்துகின்றன''.**

நடப்பதையெல்லாம் பூர்ஷ்வா வர்க்கம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று கருதுவது வெகுளித்தனமானதாகும். இல்லை, இது இப்படியிருக்கவில்லை. தனியுடை மையின் ஆதிக்கத்தையும் தன் பொருளாதார, அரசியல் ஆட்சியையும் தக்க வைக்க முயலும் பூர்ஷ்வா வர்க்கம் நெருக்கடி நிலைமை களைச் சமாளிக்க, இவற்றிலிருந்து மீள இயன்றதை எல்லாம் செய்கிறது. இது எப்படி செய்யப்படுகிறது? ''ஒரு புறத்தில்

---

* அதே நூல், பக்கம் 52 பார்க்க.

** அதே நூல், அதே பக்கம்.

வலுக்கட்டாயமாய் உற்பத்திச் சக்திகளில் ஒரு பெரும் பகுதியை அழிப்பதன் மூலமும் மறு புறத்தில் புதிய சந்தைகளை வென்று கைப்பற்றுவதன் மூலமும், பழைய சந்தைகளை இன்னும் அழுத்திப் பிழிவதன் மூலமும்'' * இது செய்யப்படுகிறது. இதன் பயனாய் பூர்ஷ்வா வர்க்கம் மேலும் விரிவான, மேலும் நாசகரமான நெருக்கடிகளுக்கு வழி கோலி, இவற்றைத் தடுப்பதற்கான வழிமுறை களைக் குறைக்க மட்டுமே செய்கிறது.

எந்த ஆயுதங்களைக் கொண்டு பூர்ஷ்வா வர்க்கம் நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தியதோ, அதே ஆயுதங்கள் இப்போது பூர்ஷ்வா வர்க்கத்திற்கு எதிராகத் திருப்பப்படுகின்றன. **

இவ்வாறாக, உயர் வளர்ச்சியடைந்த உற்பத்திச் சக்திகள் சமுதாயத்தைத் தவிர்க்க இயலாதவாறு மாற்றியமைப்பதற்கான முதல் முன்தேவையாகின்றன. முதலாளித்துவத்தில் உற் பத்தியானது சமுதாயத் தன்மையைக் கொண் டிருப்பதால் இது தனியுடைமை சுவீகரிப்பு வடிவத்துடன் முரண்படுகிறது. சுவீகரிப்பு வடிவத்தையும், உற்பத்தி செய்யப்படும் பொருட் களின் வினியோக முறையையும் உற்பத்தி வடிவத்துக்குப் பொருந்த செய்தால்தான் இம்முரண்பாட்டை அகற்ற முடியும். இது தனியுடைமையை ஒழித்துக் கட்டி பொது வுடைமையை நிலைநாட்டும் பாதையாகும்,

---

* அதே நூல், அதே பக்கம்.

** அதே நூல், பக்கம் 53 பார்க்க.

அதாவது கம்யூனிசப் புரட்சியின் பாதையாகும்.

இங்கே மார்க்சும் எங்கெல்சும், முதலாளித் துவ உற்பத்தி உறவுகளை ஒழித்துக் கட்டி புதிய, கம்யூனிச உறவுகளை நிலைநாட்டும்படி எந்தப் புறவய சக்திக்கு வரலாறு கட்டளை யிட்டுள்ளதோ அந்தப் புறவய சக்தியாகிய பாட்டாளி வர்க்கம் தோன்றி வளர்ந்த நிகழ்ச்சிப் போக்கைப் பகுப்பாய்வு செய்வதில் இறங்குகின்றனர். இச்சக்தி தொழில்துறை வளர்ச்சியால் பிறக்கிறது, இதற்கு ஏற்றதாக கூடவே இருக்கிறது, மக்களின் எல்லா பிரிவினர், வர்க்கங்களிலிருந்து உருவாக்கப்படு கிறது. மக்கள் திரளினர் தொழிலாளர்களாக மாற்றப்படுவதுதான் பாட்டாளி வர்க்கம் உருவாகும் முதல் கட்டத்தின் சாராம்சமாகும். மூலதனம் ஆதிக்கம் செலுத்தும் போது பொதுவில் தொழிலாளர் திரளினரின் வாழ்க் கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகள் ஒரே மாதிரியானவை, அதுவும் குறிப்பாக ஆரம்பக் கட்டத்தில் ஒரே மாதிரியானவை; இதுதான் இவர்களுடைய நலன்களின் பொதுமையை நிர்ணயிக்கிறது. இதன் பயனாய் இக்கட்டத் திலேயே பாட்டாளி வர்க்கம் சமூகப் பொருளில் வர்க்கமாகிறது.

ஆனால் பாட்டாளி வர்க்கம் அரசியல் ரீதியாக சுயமான சக்தியாக மாற அது (குறைந்த பட்சம் அதன் முன்னணிப் படை) சமுதாய உறவுகளின் முறையில் தன்னிடத்தை உணர வேண்டும், தன் வரலாற்றுக் கடமை யைப் புரிந்து கொள்ள வேண்டும், நடைமுறை

மற்றும் அணிதிரண்ட போராட்டத்தின் அனுபவத்தைப் பெற வேண்டும். இந்த நிகழ்ச்சிப் போக்கின் பல்வேறு அம்சங்களை அறிக்கை ஆராய்கிறது; இது ஆரம்பத்தில் சிதறுண்டு, பலவீனமாக இருக்கும் தொழிலாளி வர்க்கத்தை, பூர்ஷ்வா வர்க்கத்தைத் தூக்கி யெறிந்து தன் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட வல்ல பலமான புரட்சிகர அரசியல் சக்தியாக மாற்றுவதற்கு இட்டுச் செல்கிறது.

பாட்டாளி வர்க்கம் வளர்ச்சியடையும் போது அது எண்ணிக்கை ரீதியில் அதிகரிக் கிறது, ஸ்தாபன ரீதியாக அணிதிரளுகிறது, அதன் உணர்வு வளருகிறது என்று கூறிய அறிக்கையின் ஆசிரியர்கள், இவற்றில் கடைசி அம்சத்தின் மீது விசேஷ கவனம் செலுத்து கின்றனர். நிலப்பிரபுத்துவ மேற்குடியினருக்கு எதிரான போராட்டத்தின் போதும், பிற்பாடு பூர்ஷ்வா வர்க்கத்தைச் சேர்ந்த ''சில பகுதிகளின் நலன்கள் தொழில் முன்னேற் றத்துக்கு விரோதமாகி விடும் போது இந்தப் பகுதிகளுக்கு''* எதிரான போராட்டத்தின் போதும் உதவிக்காக பூர்ஷ்வா வர்க்கம் தொழிலாளிகளை நாட வேண்டியுள்ளது, தொழிலாளர்களின் சக்தியை ஆதாரமாகக் கொண்டு செயல்பட வேண்டியுள்ளது என்று முதலில் மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறாக தொழிலாளி

---

* அதே நூல், பக்கம் 58.

வர்க்கத்தை அரசியல் இயக்கத்தில் ஈடுபடுத்தும் இது தன்னுடைய ''அரசியல் கல்வி, பொதுக் கல்வி ஆகியவற்றின் கூறுகளை அதற்கு அளித்திடுகிறது; அதாவது தன்னையே எதிர்த்துப் போராடுவதற்கான ஆயுதங்களை பாட்டாளி வர்க்கத்துக்கு வழங்குகிறது'' *.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியால் சமுதாயத்தின் சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களும் பாட்டாளி வர்க்கத்திற்கு அறிவொளியூட்ட பெரிதும் உதவுகின்றன. போட்டியில் திவாலடைவதன் விளைவாய் சொத்துடைமையாளர் வர்க்கத்தின் தனிப்பட்ட நபர்களும் முழுப் பிரிவுகளும் தொழிலாளர் வர்க்கத்தில் இடையறாது வந்து சேருகின்றனர். இவர்கள் தாம் பெற்ற கல்வியின் அம்சங்களையும் பாட்டாளி வர்க்கத்திற்குக் கொண்டு வருகின்றனர். இந்த நிகழ்ச்சிப் போக்கு எவ்வளவுக்கெவ்வளவு ஆழமானதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த அம்சங்களின் பங்கு கணிசமானது.

வர்க்கப் போராட்டம் விசேஷமாகக் கூர்மையடையும் காலகட்டங்களில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் உள்ளே சிதறும் போக்கு அசாதாரணமாக கடுமையடைகிறது. இதன் விளைவாய் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதி இதனிடமிருந்து பிரிந்து புரட்சிகர வர்க்கத்தின் நிலைகளுக்கு வருகிறது; எதிர்காலம் இந்த வர்க்கத்திற்குத்

---

* அதே நூல், பக்கங்கள் 58—59.

தான் சொந்தமானது. பூர்ஷ்வா வர்க்கத்தில் ஒரு பகுதியினர், அதாவது பூர்ஷ்வா "சித்தாந்தவாதிகளில் வரலாற்று இயக்கத்தை ஒட்டுமொத்தமாய்த் தத்துவார்த்த வழியில் புரிந்து கொள்ளும் நிலைக்கு உயர்ந்து விட்ட ஒரு பிரிவினர்"* பாட்டாளி வர்க்கத்தின் நிலைக்கு மாறுகின்றனர்.

பாட்டாளி வர்க்கம் நிலவும் வெளிச் சூழ்நிலைகளின் மாற்றம் இதன் வளர்ச்சி மீது பெரிதும் தாக்கம் செலுத்துகிறது. இச்சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதிலும் இவற்றை மாற்றுவதிலும் பாட்டாளி வர்க்கம் தீவிரமாகப் பங்கேற்பது மேற்கூறிய வளர்ச்சி மீது இன்னமும் அதிகமாகத் தாக்கம் செலுத்துகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தைதான் மார்க்சும் எங்கெல்சும் இப்படிப்பட்ட தீவிரப் பங்கேற்பாகப் புரிந்து கொண்டனர். தன் சாராம்சத்திலும் அளவிலும் இப்போராட்டம் எப்படி மாறுகிறது என்று அறிக்கையில் இவர்கள் காட்டினார்கள். தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் பல்வேறு கட்டங்களைக் கடந்து (அடிக்கடி இயந்திரங்களை, மற்ற உற்பத்திக் கருவிகளை அடித்துடைப்பதிலிருந்து துவங்கிய தனிப்பட்ட பாட்டாளிகள், தொழிலாளர் கூட்டங்களின் தனித்தனிப் போராட்டங்களிலிருந்து தம் ஊதியங்களைக் காப்பதற்கான கூட்டணிகளை ஏற்படுத்துவது,

---

* அதே நூல், பக்கம் 59.

ஆயுதக் கிளர்ச்சிகள் வரை) படிப்படியாகப் பொருளாதாரப் போராட்ட வரம்புகளை விட்டு வெளிவந்து மையப்படுத்தப்பட்டு, ஒரே தேசிய, வர்க்கப் போராட்டமாக இணை கிறது; ஆனால் ''வர்க்கப் போராட்டம் ஒவ்வொன்றும் ஓர் அரசியல் போராட் டமாகும்'' * என்கிறது அறிக்கை. இந்த அரசியல் போராட்டம் இறுதியில் புரட்சிகர வழியில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் நிலவும் சமுதாய அமைப்பு முழுவதையும் அடிப்படை ரீதியாக மாற்றியமைக்கவும் இட்டுச் செல்ல வேண்டும்.

பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று விடுதலைக் கடமைக்கான பொருளாதார ஆதாரத்தைத் தந்த மார்க்சும் எங்கெல்சும் அறிக்கையில் பின்வருமாறு சுட்டிக்காட்டினார் கள்: ''இன்று முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய் யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சி யின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது.'' **

அதே சமயம் தொழிலாளி வர்க்கம்

---

* அதே நூல், பக்கம் 58.

** அதே நூல், பக்கம் 59.

உதித்தெழுந்து வளருவதும் மிகத் தொடர்ச்சி கரமான புரட்சி சக்தி என்ற வகையில் இது உருவெடுப்பதும் மிகவும் சிக்கலான, முரண்பாடான நிகழ்ச்சிப் போக்காகும். ஒரு புறம் பாட்டாளி வர்க்கம் மூலதனத்திற்கு எதிராக நிற்கிறது, ஏனெனில் இதற்குத் தனியுடைமை இல்லை, இது மூலதனத்தால் சுரண்டப்பட்டு ஒடுக்கப்படுகிறது. மறு புறம் பாட்டாளி வர்க்கமே தனியுடைமை அடிப் படையிலான, முதலாளித்துவ உற்பத்தியால் தான் பிறந்தது, தன் உழைப்பு, வாழ்க்கைச் சூழ்நிலைகளாலும் இதனுடன் இணைந்துள் ளது. இவ்வாறாக, பாட்டாளி வர்க்கத்திடம் தனியுடைமை இல்லாததும் இது சுரண்டப் படுவதும் ஒடுக்கப்படுவதும் இதன் புரட்சிகர வளர்ச்சிக்கு வழிகோலுகின்றன, முதலாளித் துவத்திற்கு எதிராக உறுதியோடு, ஊக்கத் தோடு போராட உந்தித் தள்ளுகின்றன. முதலாளித்துவ உற்பத்தியில் புறவய ரீதியாகப் பங்கேற்பதும் இந்த உற்பத்தியின் சூழ்நிலை களைத் தன் வாழ்க்கைச் சூழ்நிலைகளாக ஏற்றுக் கொள்வதும் சமூக சமரசத்தின் ஏதாவது ஒரு வடிவத்திற்கு இட்டுச் செல் கின்றன. வளர்ச்சியின் தனிப்பட்ட கட்டங் களில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சமரசப் போக்குகள் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியைக் கவர்ந்திழுக்கக் கூடும், ஆனால் இறுதியாகப் பார்த்தால் இந்த இரண்டு போக்குகளுக்கு இடையிலான போராட் டத்தில் புரட்சிகரப் போக்குதான் வெற்றி

பெறும். ஏனெனில் பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான சமரசம் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு மட்டுமே ஆதாயமானது. தனிப்பட்ட சில இணக்கங் களுக்கு இறங்கி வரும் பூர்ஷ்வா வர்க்கம் ஒருபோதும் தன் ஆதிக்க நிலையை விட்டுக் கொடுக்காது, பாட்டாளிகளின் உழைப்புச் சக்தியை வாங்கி, விற்கும் நிபந்தனை களைத் தானே பாட்டாளிகளின் மீது திணிக் கும்.

அடுத்து வரும் இன்னொரு முரண்பாடு இந்த முரண்பாட்டுடன் அங்கக ரீதியாகப் பின்னிப் பிணைந்துள்ளது. முதலாளித்துவ உற்பத்தியின் போக்கு முழுவதும், பெரும் தொழில் நிறுவனங்களில் உழைப்பின் ஒழுங் கமைப்பு, வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் பயனாய் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு அணி திரண்டு வளர்க்கப்படுகின்றனர், புடம் போட்டு எடுக்கப்படுகின்றனர், வர்க்க ஒருமைப்பாட் டையும் சுய உணர்வையும் பெறுகின்றனர். இதுதான் இவர்களுடைய போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கிறது. மறு புறமோ, அறிக்கையில் குறிப்பிடப்பட்டபடி, ''பாட்டாளி கள் இவ்விதம் ஒரு வர்க்கமாகவும், ஆகவே ஓர் அரசியல் கட்சியாகவும் ஒழுங்கமைப்பு பெறும் நிகழ்வானது தொழிலாளர்களிடத்தே ஏற்படும் போட்டியால் ஓயாமல் மீண்டும் குலைக்கப்படுகிறது''*. குறிப்பாக நெருக்கடிக்

---

* அதே நூல், பக்கம் 58.

கட்டங்களின் போது இத்தகைய போட்டி அதிகரிக்கிறது; இத்தருணங்களில், எங்கே வேலையில்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தால் இவர்கள் சுரண்டல் அதிகரிக்கப் படுவது, ஊதியக் குறைப்பு போன்றவற்றை ஏற்றுக் கொள்கின்றனர். தொழிலாளி வர்க் கத்தின் உள்ளே நிலவும் இப்போட்டியை பூர்ஷ்வா வர்க்கம் தொழிலாளிகளுக்கே எதிரான ஆயுதமாக, இவ்வர்க்கத்தைப் பிளவுபடுத்தும் சாதனமாகப் பயன்படுத்து கிறது.

புறவய நிகழ்ச்சிப் போக்குகள், எல்லா வற்றிற்கும் மேலாக உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி பாட்டாளி வர்க்கத்தின் ஸ்தாபன ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பலப் படுத்துகின்றன; இதன் மூலம் இதன் பிளவை, இதை அரிக்கும் உள் போட்டியை அகற்ற உதவுகின்றன. தொழிலாளர் இயக் கத்தின் இப்படிப்பட்ட வளர்ச்சி ஸ்திரமான தன்மையைப் பெற, பின்னுக்கு வராமலிருக்க உணர்வு பூர்வமான, செயல்முனைப்பான நடவடிக்கைகள் தேவை, பாட்டாளி வர்க் கத்தின் வர்க்க உணர்வை வளர்ப்பது அவசியம். பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையில் நடக்கும் நிரந் தரமான (ஓரளவு மூடிமறைக்கப்பட்டது என்றாலும்) உள்நாட்டு யுத்தம் அப்போது தான் “பகிரங்கப் புரட்சியாய் வெடித்து, முதலாளி வர்க்கம் பலாத்காரமாய்” வீழ்த்தப் படுவதன் மூலம் பாட்டாளி வர்க்க ஆட்சியதி

காரத்துக்கு அடித்தளம் இடப்படும் நிலைக்கு''* வழிகோலும்.

பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் பூர்ஷ்வா வர்க்கத்தின் அழிவும் தவிர்க்க இயலாதவை எனும் முடிவுடன் அறிக்கையின் முதல் அத்தியாயம் முடிகிறது. இம்முடிவிற்கு முன் கோட்பாட்டு ரீதியாக முக்கியமான இரண்டு கருத்து நிலைகள் கூறப்படுகின்றன. முந்தைய வர்க்கங்கள் எல்லாம் (அடிமையுடைமையாளர்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகள்) ஆதிக்கத்தை வென்றதும் இதைத் தக்க வைத்து நிரந்தரமானதாக ஆக்கவும் தனக்கு ஆதாயமான சுவீகரிப்பு முறைக்கு சமுதாயம் முழுவதையும் உட்படுத்தவும் முயன்றன என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினார்கள். பாட்டாளிகளோ ஆதிக்கத்தை நிலைநாட்டியதும், எந்த சுவீகரிப்பு முறையின் கீழ் தனியுடைமையாளனும் ஆட்சியில் இருப்பவனும் தன் மேசை மீது பாட்டாளி உற்பத்தி செய்த செல்வம் நிரம்பி வழிந்தாலும் இதிலிருந்து அவனுக்கு மிக மிகச் சிறு துண்டுகளை மட்டும் ஒதுக்கித் தருகிறானோ அந்த சுவீகரிப்பு முறையை ஒழித்துக் கட்ட வேண்டும். இந்த சுவீகரிப்பு முறையை ஒழித்துக் கட்டுவதன் மூலம் பாட்டாளி வர்க்கம் மொத்தத்தில் இதுவரை நிலவிய ''சுவீகரிப்பு முறைகள் யாவற்றை

---

* அதே நூல், பக்கம் 62.

யும்'' * அழிக்கிறது.

எனவேதான் முந்தைய சமுதாய இயக்கங்கள் எல்லாம் சிறுபான்மையினரின் இயக்கங்களாக இருந்து, சிறுபான்மையினரின் நலன்களுக்காக நடத்தப்பட்டன என்றால், ''பாட்டாளி வர்க்க இயக்கம் மிகப் பெருவாரியானோரது நலனுக்காக மிகப் பெருவாரியானோர் தன்னுணர்வோடு நடத்தும் சுயேச்சையான இயக்கமாகும்'' * *. இதில்தான் இதனுடைய இறுதி வெற்றியின் அடிப்படை உள்ளது.

**கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** இரண்டாவது அத்தியாயம் **பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும்** என்று அழைக்கப்படுகிறது. இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பாட்டாளிகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையிலான உறவு பற்றிய பிரச்சினை ஆராயப்படுகிறது. சமுதாயத்தின் எதிர்கால கம்யூனிச ரீதியான மாற்றம் பற்றிய நிகழ்ச்சிப் போக்குதான் இந்த அத்தியாயத்தில் ஆராயப்படும் முக்கியப் பிரச்சினையாகும். **அறிக்கையின்** முதல் அத்தியாயங்களைக் கவனமாகப் படித்தால், முதல் அத்தியாயத்தில் புரட்சிக்கு முந்திய தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் போராட்ட வளர்ச்சி ஆராயப்பட்டிருப்பதும் இரண்டாவது அத்தியாயத்தில் புரட்சிக்குப் பிந்தைய கட்டம் ஆராயப்பட்டிருப்பதும் தெளிவாகும்.

---

* அதே நூல், பக்கம் *61*.

* * அதே நூல், அதே பக்கம்.

எல்லாவற்றிற்கும் மேலாக மார்க்சும் எங்கெல்சும் வர்க்கத்திற்கும் இதன் கட்சிக்கும் இடையிலான பரஸ்பர உறவின் இயக்கவியலை வெளிப்படுத்துகின்றனர். கம்யூனிஸ்டுகள் ''பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்கள் அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்''. அதே சமயம் பின்வரும் அம்சங்கள்தான் கம்யூனிஸ்டுகளை மற்ற பாட்டாளி வர்க்க கட்சிகளிடமிருந்து வேறுபடுத்தி காட்டுகின்றன: ''வெவ்வேறு நாடுகளில் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன்னிலைக்கு கொண்டு வருகிறார்கள்''. பூர்ஷ்வா வர்க்கத்துடன் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில் ''அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்''*.

தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் முன்னணிப் பாத்திரத்தை ஆதாரப்படுத்திய **அறிக்கையின்** ஆசிரியர்கள், ''பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதி விளைவுகளையும் புரிந்து கொள்ளும்'' அனுகூலம் தான் இப்பாத்திரத்தை நிர்ணயிப்பதாகக் கோடிட்டுக் காட்டுகின்றனர். முதலாவது

* அதே நூல், பக்கம் 64.

அத்தியாயத்தின் முக்கிய முடிவுகளைத் தொடர்ந்து வளர்க்கும் முகமாக அவர்கள் பின்வருமாறு எழுதுகின்றனர்: ''கம்யூனிஸ்டு களுடைய உடனடி நோக்கம் ஏனைய எல்லாப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது உடனடி நோக்கம் என்னவோ அதுவேதான்: பாட்டாளிகளை ஒரு வர்க்கமாய் உருப் பெறச் செய்வதும், முதலாளித்துவ மேலாதிக் கத்தை வீழ்த்துவதும்'',* பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தை வென்று பெறு வதும் தான் அந்த நோக்கமாகும்.

குறிப்பிட்ட பொருளாயத முன்தேவைகளை ஏற்படுத்தாமல் கம்யூனிசப் புரட்சி இயலாதது என்று முதலாவது அத்தியாயத்திலேயே மார்க்சும் எங்கெல்சும் குறிப்பிட்டனர். கம் யூனிசப் புரட்சியைப் பற்றிய கருத்து வரலாற்றில் எவ்வளவு முறை குறிப்பிடப்பட் டாலும், மேற்கூறிய முன்தேவைகள் இல் லாமல், இவை முதிர்ச்சியடையாமல் அந்தப் புரட்சி நிறைவேற முடியாது என்று மார்க்ஸ் முன்னால் எழுதினார். கம்யூனிஸ்டுகளுடைய கட்சியின் நடவடிக்கைக்குத் தத்துவார்த்த அடிப்படையாகத் திகழும் விஞ்ஞானக் கம் யூனிசக் கருத்துகள் ''நடப்பிலுள்ள வர்க்கப் போராட்டத்திலிருந்து, நம் கண்ணெதிரே நடைபெற்று வரும் வரலாற்று இயக் கத்திலிருந்து உதிக்கும் மெய்யான உறவு களையே பொதுப்பட எடுத்துரைக்கின்றன''**.

* அதே நூல், பக்கம் 65.

** அதே நூல், பக்கம் 65.

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம், நவீன காலத்தில் மிகவும் முன்னணியில் உள்ள வர்க்கத்தின் சித்தாந்தம், இந்த வர்க்கத்தின், இதன் போராட்டத்தின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்தான் தோன்றும். இது தோன்றியதால், தன் விடுதலைக்காக உணர்வு பூர்வமான போராட்டத்தை நடத்த உதவும் சித்தாந்த ஆயுதம் மட்டும் தொழிலாளி வர்க்கத்திற்குக் கிட்டவில்லை. இந்தத் தத்துவமானது, பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் மிகவும் இம்சையான பலிகள், கடும் தோல்விகளைப் பொருட்படுத்தாது கண்டிப்பாக வெற்றி பெறும், உண்மையான சமத்துவமும் விடுதலையும் நிலவும் புதிய அமைப்பை உருவாக்கும் என்று காட்டி பாட்டாளிகளுக்கு வரலாற்று ரீதியான எதிர்கால நம்பிக்கை உணர்வை ஊட்டியது.

''பொதுப்பட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, முதலாளித்துவச் சொத்துடைமையை ஒழிப்பதே கம்யூனிசத்திற்குரிய சிறப்பியல்பு'' என்றனர் மார்க்சும் எங்கெல்சும். கம்யூனிச விரோதிகள் மார்க்சை விமரிசித்த போது பின்பற்றிய முக்கிய கருத்து நிலைகளில் ஒன்று அவர் பொதுப்பட சொத்துடைமையை ஒழிக்கக் கோருகிறார் என்பதாகும், இன்று வரை சிலர் இவ்வாதத்தை முன்வைக்கின்றனர். இந்த முதலாளித்துவச் சொத்துடைமை ''வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில், ஒரு சிலர் மிகப் பலரைச் சுரண்டுவதன் அடிப்படையில் பொருள்களை உற்

பத்தி செய்வதற்கும் சுவீகரிப்பதற்குமான அமைப்பின்'' ஆதிக்கமாகத் திகழ்வதால் கம்யூனிஸ்டுகளுடைய தத்துவத்தை இரத்தனச் சுருக்கமாய் ''தனிச்சொத்துடைமையை ஒழித்திடல்'' * எனலாம்.

அனேகமாக இதனால்தான் இரண்டாவது அத்தியாயத்தின் பெரும் பகுதி, சொத்துடைமையின் பாலான கம்யூனிஸ்டுகளின் உறவை விளக்கவும் இவர்கள் மீது சாட்டப்படும் குற்றங்களை நிராகரிக்கவும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். கம்யூனிஸ்டுகள் சொத்துடைமையை மட்டுமல்ல (ஆம், சொத்துடைமையை, ஆனால் தனிச் சொத்துடைமையைக் கூட அல்ல!) குடும்பம், தேசிய இனம், தாயகம், மதம், ஒழுக்கம் எல்லாவற்றையுமே ஒழித்துக் கட்ட விரும்புவதாகக் குற்றம் சாட்டப்பட்டது. சொத்துடைமை மற்றும் இதன் பாலான கம்யூனிஸ்டுகளின் உறவு பற்றிய பிரச்சினையின் தொடர்பாய் அறிக்கையின் இந்த அத்தியாயத்தில் தனிநபர், உழைப்பு மற்றும் கல்வி பற்றிய பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன; குடும்பம் பற்றிய பிரச்சினையின் ஆராய்ச்சி குழந்தை வளர்ப்புப் பிரச்சினைகளுடன் தொடர்புடையது; மதம் மற்றும் ஒழுக்கம் பற்றிய பிரச்சினை பொதுவாக சமுதாய உணர்வு பற்றிய பிரச்சினையின் ஆராய்ச்சி வரை விரிவுபடுத்தப்படுகிறது.

---

* அதே நூல், பக்கங்கள் 65—66.

மேற்கூறிய பிரச்சினைகள் அனைத்தும் அறிக்கையின் ஆசிரியர்களால் எப்படி விளக்கப்படுகிறது என்பதில் இரண்டு அம்சங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். முதலாவதாக, இவற்றின் ஆராய்ச்சியில் உள்ள தொடர்ச்சி தற்செயலானதல்ல. சொத்துடைமை — குடும்பம் — தேசிய இனம் — உணர்வு ஆகிய கருத்தினங்கள் மார்க்ஸ், எங்கெல்சின் பொருள் முதல்வாதக் கருத்தமைப்பில் தெளிவாக உள்ளடங்குகின்றன; இக்கருத்தமைப்பின்படி சமுதாயத்தின் கட்டமைப்பானது உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகளும் மற்ற சமுதாய உறவுகளும், அரசியல் மேல்கட்டுமானம், சமுதாய உணர்வின் வடிவங்கள் ஆகிய அங்கங்களால் ஆனது. இரண்டாவதாக, தம் எதிரிகளின் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் விஞ்ஞான கம்யூனிச ஆசான்கள் எதிர்கால கம்யூனிச சமுதாயத்தின் அந்தந்த அம்சங்களை உரிய வகையில் சித்தரிக்கின்றனர்.

தம்மை ''விமரிசிப்பவர்களுக்குப்'' பதிலளிக்கும் அறிக்கையின் ஆசிரியர்கள், உழைப்பின் உற்பத்திப் பொருள்களைத் தனிநபர் சுவீகரிப்பதை, ''மனித உயிர் வாழ்வின் பராமரிப்புக்காகவும் புனருற்பத்திக்காகவும் வேண்டியதை மட்டும் அளித்து ஏனையோரது உழைப்பின் மீது ஆண்மை செலுத்த உபரியாய் எதையும் விட்டு வைக்காத இந்த சுவீகரிப்பை'', அதே போல் பொதுவாகத் தனிதன்மை, பொதுவாக விடுதலை போன்ற

வற்றை ஒழிக்க வேண்டுமென கம்யூனிஸ்டுகள் விரும்பவில்லை என்பதை ஆணித்தரமாக கோடிட்டுக் காட்டுகின்றனர். உண்மையில் ''முதலாளித்துவத் தனித்தன்மையையும் முதலாளித்துவ சுயேச்சையையும் முதலாளித்துவ சுதந்திரத்தையும் ஒழிப்பதுதான் குறிக்கோள்''*.

பூர்ஷ்வா தனிச்சொத்துடைமை ஒழித்துக் கட்டப்பட வேண்டும், ஏனெனில் இன்றைய சமுதாயத்தில் இது ஏற்கெனவே ''பத்தில் ஒன்பது பங்கு மக்களுக்கு'' ஒழித்துக் கட்டப்பட்டு விட்டது, மேலும் இது நிலவ வேண்டுமெனில் சமுதாயத்தின் மிகப் பெரும்பான்மையோரிடம் எந்தச் சொத்தும் இருக்கக் கூடாது என்று மார்க்சும் எங்கெல்சும் மறுக்க முடியாதபடி ஆணித்தரமாக மெய்ப்பித்தனர். பூர்ஷ்வா தனிநபர் என்பது மறைய வேண்டும் ஏனெனில் முதலாளித்துவ சமுதாயம் பூர்ஷ்வாவைத் தவிர, பூர்ஷ்வா சொத்துடைமையாளரைத் தவிர வேறு யாரையும் தனிநபராக ஒப்புக் கொள்வதில்லை. பூர்ஷ்வா கல்வியும் வளர்ப்பு முறையும் சமுதாயக் கல்வி, வளர்ப்பு முறையால் மாற்றப்பட வேண்டும், ஏனெனில் முதலாளித்துவ சமுதாயத்தில் கல்வி என்பது ''மிகப் பெருவாரியான மக்களுக்கு இயந்திரமாய்ச் செயல்படுவதற்கு வேண்டிய பயிற்சியாகவே இருந்து வருகிறது''.** புதிய சமுதாயத்தில்

---

* அதே நூல், பக்கங்கள் 67–68.

** அதே நூல், பக்கங்கள் 60–70 பார்க்க.

பூர்ஷ்வா குடும்பம் இயல்பாகவே அழிகிறது, ஏனெனில் இது ‘‘மூலதனத்தின், தனியார் லாபத்தின்’’ அடிப்படையிலானது. இவற்றிற்கு கம்யூனிச சமுதாயத்தில் இடம் இருக்காது. கம்யூனிஸ்டுகள் ஏதோ மனைவிகளை எல்லோருக்கும் பொதுவாக்குவதாக பூர்ஷ்வாக்கள் பாசாங்குத்தனமாக கூச்சலிடுவதைப் பொறுத்த மட்டில், ‘‘நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இது செய்யப்பட்டு வருகிறது’’* என்று அறிக்கை கூறுகிறது. எந்த சமுதாயத்தில் பெண்களை வாங்கி, விற்கின்றார்களோ அங்கே திருமணத்தின் ‘‘புனிதத் தன்மை’’ என்பதைப் பற்றியெல்லாம் கூறுவது முகஸ்துதி அல்லவா?!

இவ்வாறாக, படிப்படியாக கம்யூனிசத்திற்கு எதிரான பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளின் மறுப்புகளை நிராகரித்த அறிக்கையின் ஆசிரியர்கள், கம்யூனிச சமுதாயத்தில் சேமிக்கப்பட்ட உழைப்பானது முதலாளிகளின் தனிப்பட்ட செல்வத்திற்கான சாதனமாக இருக்காது, தொழிலாளர்களின் வாழ்க்கையை செழுமை படுத்தி, எளிதாக்கும் சாதனமாக மட்டுமே இருக்கும்** என்றும், முதலாளித்துவத்தில் இல்லாத சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் உழைப்பாளிகள் பெறுவார்கள் என்றும், குழந்தை வளர்ப்பின் தன்மை மாறும் என்றும், ‘‘இன்றைய பொருளுற்பத்தி அமைப்பு

* அதே நூல், பக்கம் 73.

** அதே நூல், பக்கம் 68 பார்க்க.

ஒழிக்கப்படும் போது, இந்த அமைப்பிலிருந்து எழும் பொதுப் பெண்டிர் முறையும் — அதாவது பகிரங்கப் பொது விபசாரமும் இரகசியத் தனி விபசாரமும்'' * மறையும் என்றும் காட்டுகின்றனர். பொருளாதாரக் கணிப்புகளின் அடிப்படையிலான திருமணத் திற்குப் பதில் அன்பின் அடிப்படையிலான திருமணம் வரும். இறுதியாக இவர்கள் தாயகம், தேசிய இனப் பிரச்சினைகளின் பாலான கம்யூனிஸ்டுகளின் உறவின் மீது விசேஷ அக்கறை காட்டுகின்றனர். புரட்சி இயக்கத்திற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகிய, இவ்வியக்கத்தில் தேசிய அம்சத்திற்கும் சர்வதேசிய அம்சத்திற்கும் இடையிலான உறவு பற்றிய பிரச்சினை சோஷலிச சிந்தனையின் வரலாற்றிலேயே முதன்முதலாக **அறிக்கையில்** முன்வைக்கப் பட்டுள்ளது. இங்குதான் இப்பிரச்சினை தொழிலாளி வர்க்கத்தின் நிலைகளிலிருந்து விஞ்ஞான அடிப்படையைப் பெற்றது.

இப்பிரச்சினையின் முக்கியத்துவத்திற்குப் புற வய மற்றும் அகவயக் காரணிகள் உண்டு. புறவயக் காரணிகளில் முக்கியமானவை, மக்களினங்களின் சமூக-பொருளாதார வாழ்க் கையை சர்வதேசியமயப்படுத்தியதும் (இதைப் பற்றி **அறிக்கையின்** முதல் அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது) தேசிய இயக்கங் களின் வளர்ச்சியும் (இது ஐரோப்பாவில்

---

* அதே நூல், பக்கம் 73.

1848—1849ஆம் ஆண்டுகளின் புரட்சியின் போது விசேஷமாக வெளிப்பட்டது) ஆகும். அகவயக் காரணிகளில் முக்கியமானவை, தொழிலாளர் இயக்கத்தில் தேசியவாதப் போக்குகளின் வளர்ச்சி, இவற்றை அகற்று வதற்காக சர்வதேசியவாதிகள் நடத்தும் போராட்டம், பாட்டாளி வர்க்கத்தின் தேசிய மற்றும் சர்வதேசியக் கடமைகளை சரியாக இணைக்கக் கூடிய ஒரு புரட்சிகரப் போர்த்தந் திரத்தை உருவாக்கும் அவசியம் ஆகியவை யாகும்.

மார்க்சும் எங்கெல்சும் தொழிலாளர் இயக் கத்தை, தேசிய மற்றும் சமூக அம்சங்கள் இயக்கவியல் ரீதியாக இணைந்துள்ள ஒரு நிகழ்ச்சிப் போக்காக கருதி அணுகினர். வர்க்க-சமூகக் காரணி இந்நிகழ்ச்சிப் போக்கின் சாரத்தை, உள்ளடக்கத்தை நிர்ணயிக்கிறது; ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டின் சூழ்நிலை களுக்கும் ஏற்ற தேசியக் காரணி இந்நிகழ்ச்சிப் போக்கிற்கான வடிவம், தனியம்சங்களைத் தருகிறது. ''முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், உள்ளடக்கத்தில் இல்லையேனிலும் எப்படியும் வடிவத்தில், ஆரம்பத்தில் தேசியப் போராட் டமாகவே இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தனது நாட்டின் முதலாளி வர்க்கத்துடன்தான் முதலில் கணக்கு தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது'' *

---

* அதே நூல், பக்கம் 61.

என்று அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் குறிப்பிட்டனர்.

இக்கடமைக்கு ஒரே நேரத்தில் சாராம்சத்தில் சமூக, சர்வபொது, சர்வதேசியத் தன்மை உண்டு, ஏனெனில் பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் சமூக-பொருளாதார நிலைக்கும் இது விடுதலையடைவதற்கான நிபந்தனைகளுக்கும் பொது அம்சங்கள் உண்டு. முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி எல்லாவற்றிற்கும் மேலாக சுரண்டப்படும் நபராக விளங்குகிறான். பாட்டாளிகளின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் தேசத்தின் பொருளாயத செல்வத்தை அவர்கள் அடைய முடியாதபடி செய்கின்றன (இதை பூர்ஷ்வா வர்க்கம் சுவீகரிக்கின்றது), தேசிய வாழ்வின் தலைமையிலிருந்து அவர்களை அகற்றுகின்றன (இதையும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கம் பிடுங்கிக் கொள்கிறது). இந்த சமூகப் பொருளில்தான் ''தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை''*. ஆனால், அறிக்கையின் ஆசிரியர்களுடைய கருத்துப்படி, இதனால்தான் பாட்டாளி வர்க்கம் ''தேசத்தின் தலைமையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும், தன்னையே தேசமாக்கிக் கொண்டாக வேண்டும்''**.

அறிக்கையின் இந்தக் கருத்து நிலைகளைப் பற்றி பல பத்தாண்டுகளாக விவாதம்

---

* அதே நூல், பக்கம் 74.

** அதே நூல், அதே பக்கம்.

நடந்து வருகிறது. இடதுசாரி சந்தர்ப்பவாதிகள் ''தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை'' எனும் ஆய்வுரையை ஒருவித தேசிய எதிர்மறுப்புவாதமாகப் பிரகடனப்படுத்தப் பயன்படுத்துகின்றனர் என்றால், வலதுசாரி சந்தர்ப்பவாதிகளோ இரண்டாவது கருத்து நிலையை ''தேசிய சோஷலிசம்'' எனும் சித்தாந்தத்தை (இது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திற்குப் பொருந்தி வராதது) ஆதாரப்படுத்துவதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை நன்கு ஊன்றிப் படித்து, இதைப் பற்றிய ஆழமான, துல்லியமான பகுப்பாய்வை வழங்கிய வி. இ. லெனின், முதல் கருத்து நிலையை இரண்டாவதுடன் தொடர்பு படுத்தாமல் தனியே பிரித்துப் பார்ப்பது மிகவும் தவறானதாகும் என்றார். பூர்ஷ்வா தேசிய தாயகம் பற்றிய கருத்தை நிராகரித்து விட்டு பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் உழைப்பாளி மக்கள் திரளினரைத் தன்னுடன் இட்டுச் செல்ல வேண்டும், சோஷலிசத்திற்கான போராட்டத்தில் தலைமை தாங்கும் பொருட்டு தேசிய இனத்தின் தலைமையான வர்க்கமாக வேண்டும் என்பதுதான் அறிக்கையின் மேற்கூறிய கருத்து நிலைகளின் உண்மைப் பொருளாகும். இதில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் தேசிய அம்சம் சர்வதேசிய அம்சமாக செயல்படுகிறது, ஒவ்வொரு நாட்டின் திட்ட

வட்டமான சூழ்நிலைகளுக்கு ஏற்ற வடிவத்தில் சர்வதேச பாட்டாளி வர்க்கம் முழுவதன் பொதுவான, தேசிய இனத்தைச் சாராத நலன்களை வெளிப்படுத்துகிறது.

அறிக்கையின் ஆசிரியர்கள், முதல் அத்தியாயத்தின் முடிவில் தாம் கூறிய முடிவுகளுக்கு இரண்டாவது அத்தியாயத்தின் இறுதியிலும் வாசகர்களை இட்டுச் செல்கின்றனர் எனலாம். பாட்டாளி வர்க்கப் புரட்சி, பொருளாதார மற்றும் அரசியல் தன்மையுள்ள மாறுகால நடவடிக்கைகள், கம்யூனிச சமுதாயத்தின் ஒரு சில மிகப் பொதுவான அம்சங்கள் எனும் மூன்று முக்கியப் பிரச்சினைகளை இவர்கள் இப்போது ஆராய்கின்றனர். ''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச் செய்வதுதான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவதுதான்''* பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முதல் கடமையாகும் என்கின்றனர் மார்க்சும் எங்கெல்சும். இல்லாவிடில் தொழிலாளி வர்க்கத்தால் மாறுகால கட்டத்தில் தன் முன் நிற்கும் கடமைகளை நிறைவேற்ற முடியாது. ''முதலாளி வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றுதல்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்துதல்,

---

* அதே நூல், பக்கம் 77.

உற்பத்தி சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்குதல்'' * என்பவைதான் இக் கடமைகளாகும்.

மாறுகால கட்டத்தின் திட்டவட்டமான நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் இவற்றில் முக்கியமானவற்றைச் சுட்டிக்காட்டிய மார்க்சும் எங்கெல்சும் இவை ''வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறானவையாகவே இருக்கும்'' ** என்கின்றனர். முன்னணி நாடுகளில் உற்பத்திச் சாதனங்களைப் பொதுமைப் படுத்துவதைத் தொடர்ந்து நிலத்தின் மீதான சொத்துடைமையும் ஒழிக்கப்பட வேண்டும், உயர்வான, வளர்வீத வரிமுறை அமல்படுத்தப்பட வேண்டும், வாரிசுரிமை அகற்றப்பட வேண்டும், குடிபெயர்ந்து போனவர்கள் மற்றும் கலகக்காரர்களின் சொத்துக்கள் பறிக்கப்பட வேண்டும், கடன் வழங்குவதும் போக்குவரத்தும் அரசின் கரங்களில் மையப் படுத்தப்பட வேண்டும். புதிய சமுதாயத்தில் உழைப்பு எல்லாக் குடிமக்களுக்கும் அவசியமானதாய் மாற வேண்டும், நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான மாறுபாடு படிப்படியாக மறைய வேண்டும், குழந்தைகளுக்குப் பொதுப் பள்ளிக்கூடங்களில் இலவசமாக கல்விகற்பிக்கும் முறை அமல்படுத்தப்பட வேண்டும், இத்தியாதி என்று

* அதே நூல், அதே பக்கம்.
** அதே நூல், அதே பக்கம்.

அறிக்கையின் ஆசிரியர்கள் கோடிட்டுக் காட்டு கின்றனர். இந்த வேலைத்திட்டத்தின் முதல் பகுதி சோவியத் ருஷ்யாவில் கிட்டத் தட்ட அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் உடனடியாக நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ''உழைப்பு சரிசம மாய் எல்லோருக்கும் உரிய கடமையாகும்'' எனும் கோட்பாடு எல்லா சோஷலிச நாடுகளுக்கும் முக்கியமானதாகியது. அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்ட ஆக்கபூர்வமான சமுதாய மாற்றக் கடமைகளும் இந்நாடு களில் தொடர்ச்சியாக நிறைவேற்றப்படு கின்றன.

இரண்டாவது அத்தியாயத்தின் இறுதியில், எல்லாவற்றுக்கும் மேலாக வர்க்கங்களற்ற சமுதாயம் என்ற வகையில் கம்யூனிச சமுதாயம் பற்றிய சுருக்கமான, பொதுவான சித்தரிப்பு அடங்கியுள்ளது. வர்க்கங்களும் வர்க்க மாறுபாடுகளும் மறைந்த பின், ஒரு வர்க்கம் இன்னொன்றை அடக்குவதற்காக நிலவும் அரசியல் அமைப்பு என்ற வகையில் பொது அரசு ஆட்சியின் அவசியம் மறைந்து விடும் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்படு கிறது. உற்பத்தி முழுவதும் நாட்டு மக்கள் அனைவரின் மாபெரும் கூட்டமைப்பின் கைகளில் மையமுற்று விடும்,* அதாவது அரசு ஆட்சியதிகாரத்திற்குப் பதில் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளின் மீதான சமூகத்

---

* அதே நூல், பக்கம் 78 பார்க்க.

தலைமை வரும் என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதுகிறார்கள்.

**அறிக்கையின்** தத்துவார்த்தப் பகுதி புதிய, கம்யூனிச அமைப்பின் சாராம்சம் பற்றிய மூலச்சிறப்புள்ள வரையறுப்புடன் முடிகிறது: ''வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டிருந்த பழைய முதலாளித்துவ சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்கு தடையின்றி சுதந்திரமாய் வளர்வதையே எல்லோரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனையாய்க் கொண்ட மக்கள்கூட்டு ஒன்று எழுந்து விடும்''*. சமுதாயத்தைக் கம்யூனிச அடிப்படையில் மாற்றியமைக்கும் இறுதி லட்சியம் இங்கு கூறப்பட்டுள்ளது.

**அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம்** பிற்போக்கான மற்றும் பழமைவாத பூர்ஷ்வா சோஷலிசத்தின் முக்கியப் போக்குகளைப் பற்றிய விமரிசனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர இதில் விஞ்ஞான கம்யூனிசத்திற்கும் (இதற்கு மார்க்சின் பெயர் தரப்பட்டுள்ளது முற்றிலும் சரியே) கற்பனாவாத கம்யூனிசத்திற்கும் இடையிலான கோட்பாட்டு ரீதியான மாற்றங்கள் விளக்கப்பட்டுள்ளன.

மார்க்சும் எங்கெல்சும், கம்யூனிஸ்டு சங்கத்தைத் தோற்றுவித்த போது, விஞ்ஞான கம்யூனிசக் கருத்துகள் பரவுவதற்கான பாதை

---

* அதே நூல், பக்கம் 79.

யைத் தூய்மைப்படுத்தி பாட்டாளி வர்க்கத் தன்மையற்ற சோஷலிசத்தின் பல்வேறு போக்குகளுடன் நடத்திய அயரா போராட்டம் இந்த அத்தியாயத்தில் பிரதிபலிக்கிறது. இப்போக்குகளில் நிலப்பிரபுத்துவ சோஷலிசம் என்று அழைக்கப்பட்டதுதான் மிகப் பிற்போக்கானதாகும்; இது பூர்ஷ்வா புரட்சிகளால் முறியடிக்கப்பட்ட நிலப்பிரபுக்களின் வர்க்கம் தன் ஆட்சியை புனர்நாட்டுவதன் மீது, மறைந்து போன நிலப்பிரபுத்துவ உறவுகளை மீண்டும் நிலைநாட்டுவதன் மீது வைத்திருந்த நம்பிக்கைகளைப் பிரதிபலித்தது. ஆனால் பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்துப் போராட நிலப்பிரபுத்துவ மேற்குடியினருக்கு சக்தியோ சாதனங்களோ இருக்கவில்லை. கடந்த காலத்திற்குத் திரும்பிப் போகலாம் என்று அறைகூவல் விடுத்த இவர்களின் கோஷங்களுக்கு உழைப்பாளிகளோ மக்கள் திரளினரோ செவிமடுக்கவில்லை. எனவே பூர்ஷ்வா வர்க்கத்திற்கு எதிரான போராட்டத்தில் பிரபுக்குலம், பூர்ஷ்வா வர்க்கத்தின் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை மீது உழைப்பாளிகளுக்கு உள்ள அதிருப்தியைப் பயன்படுத்தி இவர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ள முயன்றது. தொழிலாளி வர்க்கத்தின் கடும் துன்பம் தமக்கு ஏதோ கவலையைத் தருவதாகப் பாசாங்கு செய்த மேற்குடியினர் தொழிலாளிகளைத் தம் பக்கம் இழுக்க முயன்றனர். இதற்காக இந்த மேற்குடியினர் ‘‘பாட்டாளி

யின் பிச்சைத் தட்டினைக் கொடி போல்''* ஆட்டி சோஷலிசக் கோஷங்களைப் பயன் படுத்தவும் வெட்கப்படவில்லை.

நிலப்பிரபுத்துவ மேற்குடியினர் தம் அரசியல் போராட்டத்தில், பூர்ஷ்வா உறவுகளின் ஆதிக்கம் மற்றும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் தோன்றுவதன் வரலாற்று ரீதியான நியதியைத் தாம் புரிந்து கொள்ளாததைத் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தினர். முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய தனது விமரிசனத்தின் பிற்போக்குத் தன்மையை இவர்கள் கிட்டத்தட்ட மூடிமறைக்காததாலும், அதே சமயம் ''ஆட்டு ரோமத்திலும் வள்ளிக் கிழங்கு சர்க்கரையிலும் உருளைக் கிழங்கு சாராயத்திலுமான வாணிபத்தில் கிடைக்கும் ஆதாயத்தைப்'' பெறும் வாய்ப்பை நழுவ விடாமல் தன் அரசியல் நடவடிக்கையில் ''பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான எல்லா அடக்குமுறை நடவடிக்கைகளிலும்''** பங்கேற்றதாலும் மக்கள் இந்த மேற்குடியினரின் பிற்போக்கு கோஷங்களின் பின் செல்லவில்லை.

கிறிஸ்துவ சோஷலிசம் நிலப்பிரபுத்துவ சோஷலிசத்துடன் கைகோர்த்துச் செல்கிறது. சுரண்டல் வர்க்கங்களின் ஆதிக்கத்தை மதகுருமார்கள் பாதுகாக்கும் மிக நுண்மையான வடிவமாகிய இது முதலாளிகளுக்கும்

---

* அதே நூல், பக்கம் 81.

** அதே நூல், பக்கம் 82.

தொழிலாளர்களுக்கும் இடையில் ''சீரிசைவும்'' வர்க்க சமாதானமும் நிலவ வேண்டுமென பிரச்சாரம் செய்கிறது. இன்று இத்தாலி, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள கிறிஸ்துவ-ஜனநாயக மற்றும் கிறிஸ்துவ-சோஷலிசக் கட்சிகள் இப்போக்கின் சித்தாந்த வாரிசு களாகத் திகழுகின்றன.

முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சி நகர வாசிகளும் விவசாயிகளும் சமூக ரீதியில் பிரிந்து போகும் போக்கைத் துரிதப்படுத் தியது; இவர்களில் பெரும் பகுதியினர் திவாலடைந்து சமூக உற்பத்தி மற்றும் வர்த்தகத் துறையிலிருந்து வெளியேற்றப்பட்டு தொழில்துறைப் பாட்டாளி வர்க்க அணிகளில் சேர்ந்தனர். இந்த நிகழ்ச்சிப் போக்கு துன்பகரமாக நடைபெற்றது, ஏனெனில் இது சொத்துடைமையை இழப்பதுடன் தொடர் புடையதாயிருந்தது; ஆனால் குட்டி பூர்ஷ்வா உட்பட எந்த ஒரு பூர்ஷ்வாவிற்கும் சொத்தை இழப்பது என்பது தனித்துவத்தை இழப் பதற்கு ஒப்பானது. எனவேதான் மார்க்சும் எங்கெல்சும் குட்டி பூர்ஷ்வா சோஷலிசம் என்றழைத்த சித்தாந்தப் போக்கு தோன்று கிறது. இதன் இலக்கியப் பிரதிநிதிகள், குட்டி பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் பூர்ஷ்வா அமைப்பின் குறைகளையும் முரண்பாடுகளை யும் துல்லியமாக விமரிசித்த அதே சமயம் சிறு உற்பத்திற்கு ஆதரவாயிருந்தனர். ஆனால் நேற்றைய தினத்தில் நின்று கொண்டு

இவ்வாறு விமரிசனம் செய்யப்பட்டது, ஏனெனில் குட்டி பூர்ஷ்வா சோஷலிசம் ''பழைய உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களையும் அவற்றுடன் கூடவே பழைய சொத்துடைமை உறவுகளையும் பழைய சமுதாயத்தையும் மீட்டமைக்கவே விரும்புகிறது; அல்லது நவீன உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களை அவற்றால் தகர்த்தெறியப்பட்டுள்ள, தகர்த்தெறியப்பட்டே ஆக வேண்டிய பழைய சொத்துடைமை உறவுகளின் கட்டுக்கோப்பினுள் இருத்தி வைத்து அடைத்திடவே விரும்புகிறது'' *.

அறிக்கையின் இந்த அத்தியாயத்தில் ஜெர்மானிய அல்லது ''மெய்யான'' சோஷலிசம் மீது விசேஷமான, பெரும் கவனம் செலுத்தப்படுகிறது. பாட்டாளி வர்க்க கட்சியைக் கட்டும் போது இதன் பிரதிநிதிகளுக்கு எதிராக மார்க்சும் எங்கெல்சும் எப்படிப் போராட வேண்டியிருந்தது என்பதைப் பற்றி மேலே பார்த்தோம். இந்த சித்தாந்தப் போக்கை மார்க்சும் எங்கெல்சும் விமரிசித்ததிலிருந்து, எந்த ஒரு அரசியல் நிகழ்ச்சியையும் இவர்களால் திட்டவட்டமான வரலாற்று நிலைகளிலிருந்து எப்படித் திறமையாகப் பகுப்பாய்வு செய்ய முடிந்தது என்பது தெளிவாயிற்று. பூர்ஷ்வா உறவுமுறைகளின் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தைப் பிரதிபலிக்கும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின்

---

* அதே நூல், பக்கம் 85.

கட்டுரைகளிலிருந்து கருத்துகளை எடுத்து ஜெர்மானிய மண்ணிற்கு மாற்றிய ''ஜெர்மன் தத்துவவியலாளர்களும் அரைவேக்காட்டுத் தத்துவவியலாளர்களும் ஆடம்பர அடுக்குமொழிப் பித்தர்களும்'' ''பிரெஞ்சு நாட்டுச் சமூக நிலைமைகள்'' * இந்தக் கருத்துகளுக்குப் பொருத்தமானவையாக இருந்ததை மறந்து விட்டனர். பிரெஞ்சு நிலைமைகள் அத் தருணத்தில் ஜெர்மானிய வாழ்க்கைச் சூழ் நிலைகளிலிருந்து கணிசமாக மாறுபட்டன; ஜெர்மனியில் அப்போதுதான் நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகாரத்திற்கு எதிரான பூர்ஷ்வா வர்க்கத்தின் போராட்டம் ஆரம்பமாகியிருந் தது, தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் உருவாக ஆரம்பித்திருந்தது. இதன் விளைவாய் பிரெஞ்சு சோஷலிச-கம்யூனிச இலக்கியம் ஜெர் மானியரின் கரங்களில் ''ஒரு வர்க்கம் பிறிதொன்றை எதிர்த்து நடத்தும் போராட் டத்தின் வெளிப்பாடாய் இருக்கும் தன்மையை இழந்தது'', ஜெர்மனியில் உள்ள ''மெய்யான'' சோஷலிசத்தின் ஆதரவாளர்களோ தாம் ''பிரெஞ்சு ஒருதலைப்பட்சத் தன்மையைக்'' கடந்து விட்டதாயும் ''உண்மையான தேவை களுக்குப் பதிலாய் உண்மையின் தேவைகளை, பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்குப் பதி லாய் மனித சாரத்தன்மையின் நலன்களை, எந்த வர்க்கத்தையும் சேராமல், எதார்த் தத்தில் இல்லாமல், தத்துவவியல் கற்பனையின்

---

* அதே நூல், பக்கம் 86.

பணிமூட்டத்தில் மட்டும் இருக்கக் கூடிய பொதுப்படையான மனிதனின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாயும்''* எண்ணினர்.

''மெய்யான'' சோஷலிசத்தின் கருத்துகள் பெரிதும் பரவுவதற்கான காரணங்களை ஆராய்ந்த அறிக்கையின் ஆசிரியர்கள் இதன் குட்டி பூர்ஷ்வா சாராம்சத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றனர். ஏனெனில் ''மெய்யான சோஷலிஸ்டுகள்'' தவிர்க்க இயலா அழிவிற்குத் தள்ளப்படும் சமூகப் பிரிவின் நிலைகளில் இருந்துதான் பெருவீத முதலாளித்துவ உற்பத்தியையும் தொழில்துறை மற்றும் நிதி பூர்ஷ்வா வர்க்கம் ஆதிக்கம் செலுத்துவதையும் (இவை பிரான்சில் ஏற்கெனவே யதார்த்தமாயிருந்தன, ஜெர்மனியில் நிகழ்ச்சி நிரலின் முன் நின்றன) விமரிசித்தார்கள். ஒரு புறம் மூலதனம் குவிவதும் பெரும் முதலாளி வர்க்கத்தினரின் தொழில்துறை மற்றும் அரசியல் ஆதிக்கம் வலுவடைவதும், மறு புறம் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியும் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தை இதை நோக்கித் தள்ளுகின்றன. எனவேதான் இந்த ''மெய்யான'' சோஷலிசத்திற்கு ஜெர்மானிய அரசாங்கங்களின் பெரும் ஆதரவு கிட்டியது, ஏனெனில் இது ''தம்மை அச்சுறுத்திய முதலாளி வர்க்கத்திடம் காட்டி மிரட்டுவதற்கு ஏற்ற கிலியூட்டும் பொம்

---

* அதே நூல், பக்கம் 87.

மையாய்'' விளங்கியது; ஏனெனில் ''இதே அரசாங்கங்கள் சரியாய் இதே காலத்தில் ஜெர்மன் தொழிலாளி வர்க்க எழுச்சிகளை அடக்குவதற்காக உபயோகித்த கசப்பு மருந்துகளாகிய கசையடிகளுக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் பிற்பாடு இந்த ஜெர்மன் சோஷலிசம் கசப்பகற்றும் இனிப்பான கடைசிக் கவளமாயிற்று'' *.

மனிதனின் சாராம்சம், இவனுடைய ஆன்மா, இதயம் பற்றிய இப்போக்குடைய சித்தாந்த வாதிகளின் குழப்பமான, தெளிவற்ற வாதங்கள் உழைப்பாளிகளின் கவனத்தை வர்க்கப் போராட்டத்திலிருந்து திசை திருப்பின, இவர்களுடைய வர்க்கச் சுய உணர்வு வளர இடையூறாக இருந்தன. எனவேதான் மார்க்சும் எங்கெல்சும் நிலப்பிரபுத்துவ சோஷலிசம், குட்டி பூர்ஷ்வா சோஷலிசத்தைப் போன்றே ''மெய்யான'' சோஷலிசத்தையும் சோஷலிச மற்றும் கம்யூனிச இலக்கியத்தில் பிற்போக்கானதாகக் கருதுகின்றனர்.

பிற்போக்கு சோஷலிசத்தை அடுத்து அறிக்கையில் பழமைவாத அல்லது பூர்ஷ்வா சோஷலிசமும் அம்பலப்படுத்தப்படுகிறது. ''பொருளாதாரவாதிகளும், கொடைவள்ளல்களும், மனிதாபிமானிகளும், உழைப்பாளி மக்களுடைய நிலைமையை மேம்படுத்துவோரும், தருமப் பணித் துறையாளரும், ஜீவகாருண்ய சங்கத்தாரும், மதுக் குறைப்பு வீரர்களும், எல்லா

* அதே நூல், பக்கம் 89.

விதமான துக்கடாச் சீர்திருத்தக்காரர்களும்'' * இதிலடங்குவார்கள். இவர்கள் பெரும்பாலும் பூர்ஷ்வா வர்க்கப் பிரதிநிதிகள், நிலவும் சமூக அமைப்பை அடிப்படை ரீதியாக மாற்ற அறவே முயலாதவர்கள். நேர்மை யாளர் சங்கத்தின் பிப்ரவரி மாத (1847) வேண்டுகோளில் இவ்வகையான சோஷலிசம் பின்வருமாறு சித்தரிக்கப்பட்டிருந்தது: இது ''எவ்விதப் புது முறையையும் முன்மொழிய வில்லை, பெரும்பாலும் பழைய கட்டிடத்தில் ஒட்டு போடுவதிலும் காலப் போக்கில் தோன்றும் வெடிப்புகளை மூடிப் பூசுவதிலும் மட்டுமே ஈடுபட்டுள்ளது... அல்லது, அதிகபட் சம்... மூலதனம் எனப்படும் பழைய, மங்கி மடியும் அஸ்திவாரத்தின் மீது புதிய மாடியைக் கட்டுகிறது'' * * .

இந்தப் போக்கில் பல்வேறு கிளைகளும் தன்மைகளும் உள்ளன; ஆனால் இதன் ஆதரவாளர்கள் அனைவரும் பூர்ஷ்வா சமுதா யம்தான் மிகச் சிறந்தது, இதில் தொழி லாளர்களையும் உழைக்கும் விவசாயிகளையும் செல்வந்தர்களாக, தன்னிறைவு மிக்கவர் களாக மாற்றலாம் என்பதில் கருத்தொரு மித்துப் போகின்றனர். இதற்கு பாட்டாளி வர்க்கம், வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, பூர்ஷ்வா சமுதாயம் தனக்கு அன்னியமான, வெறுப்பேற்படுத்தும் சமுதாயம் எனும்

---

* அதே நூல், பக்கம் *91*.

** *Der Bund der Kommunisten*, Bd. 1, S. 456.

கருத்தைக் கைவிட்டால் போதும். இந்த சோஷலிசத்தின் மிகப்பெரும் பிரதிநிதியாக அறிக்கை புரூதோனைக் குறிப்பிடுகிறது. மார்க்சின் மெய்யறிவின் வறுமை என்ற நூலில் இவருடைய கண்ணோட்டங்கள் அடிப்படை ரீதியாக விமரிசிக்கப்பட்டுள்ளன.

இறுதியாக, அறிக்கையின் மூன்றாவது அத்தியாயத்தில், விமரிசன-கற்பனாவாத சோஷலிசம் மற்றும் கம்யூனிசம் பற்றி உள்ள பகுதி மிகவும் முக்கியமானது. இங்கு கற்பனாவாத முறைகள் மற்றும் கண்ணோட்டங்களின் தோற்றம் விளக்கப்பட்டுள்ளது, இவை பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் வளர்ச்சியுறாததன் விளைவு என்பது காட்டப்பட்டுள்ளது. ''பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய பொருளாயத நிலைமைகளைக்'' * கற்பனாவாதிகளால் இன்னமும் கண்டுபிடிக்க இயலவில்லை, ஏனெனில் இந்த நிலைமைகள் இன்னமும் முதிர்ச்சி பெறவில்லை, எனவே இவர்கள் இவற்றைக் கற்பனை செய்ய, கண்டுபிடிக்க முயலுகின்றனர். சகலவித புரட்சிகர இயக்கத்தையும் நிராகரிக்கும் இவர்கள் இதற்குப் பதிலாக தாமே கற்பனை செய்த மாதிரியின்படி சமுதாயத்தை ஒழுங்கமைப்பதை முன்மொழிகின்றனர்.

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, பக்கம் 94.

விஞ்ஞான கம்யூனிசத்திற்கும் கற்பனாவாதக் கம்யூனிசத்திற்கும் உள்ள கோட்பாட்டு ரீதியான வேறுபாடு என்னவெனில், முதலாவது பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவதாக இருப்பதாகும்; இது பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தை சரியாக, பாரபட்சமின்றி மதிப்பிடுவதன் அடிப்படையில் அமைந்தது. இது தவிர விஞ்ஞான கம்யூனிசம் வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தைத் தன் தத்துவார்த்த அடிப்படையாகக் கொள்கிறது, பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் விளைவாக கம்யூனிசப் புரட்சி ஏற்பட வேண்டும் என்ற புறவய ரீதியான அவசியத்தை ஒப்புக் கொள்கிறது, கம்யூனிச சமுதாயத்தைப் புறவய ரீதியான வரலாற்று வளர்ச்சியின் நியதியான முடிவாக ஏற்கிறது.

தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியடையும் போது, இது அரசியல் சுதந்திரத்தைப் பெறும் போது விஞ்ஞான கம்யூனிசம் பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தம் என்ற வகையில் கற்பனாவாத கம்யூனிசக் கருத்துகளை வெளித் தள்ளுவது இயற்கையே. தொழிலாளி வர்க்கத்தின் உணர்வு உருவாவதில் முதல் கட்டத்தைப் பிரதிபலிக்கும் இக்கருத்துகள், தொழிலாளி வர்க்கம் உணர்வு பூர்வமான வரலாற்றுப் படைப்பு நடவடிக்கையின் பாதைக்கு வரும் போது அதற்கு சுமையாக, தடையாக மாறுகின்றன.

''விமர்சன-கற்பனாவாத சோஷலிசம் மற்றும் கம்யூனிசம் ஆகியவற்றின் முக்கியத்துவம் வரலாற்று வளர்ச்சியுடன் எதிர்விகிதச் சார்புறவு கொண்டதாகும். நவீன கால வர்க்கப் போராட்டம் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று திட்டவட்டமான உருவம் பெறுகிறதோ, போராட்டத்திலிருந்து கற்பிதமாய் விலகி நிற்பதும், கற்பிதமாய் அதனைத் தாக்குவதும் அந்த அளவுக்கு நடைமுறை மதிப்பையும் தத்துவார்த்த நியாயத்தையும் முற்றும் இழந்து விடுகின்றன. ஆகவே இந்த அமைப்புகளின் மூலவர்கள் பல விதத்திலும் புரட்சிகரமானோராய் இருந்திருப்பினுங்கூட, இவர்களது சீடர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெறும் பிற்போக்குக் குறுங்குழுக்களாகவே அமைந்திருக்கிறார்கள்... இவர்கள் மேலே விவரிக்கப்பட்ட பிற்போக்குப் பழமைவாத சோஷலிஸ்டுகளது பிரிவுக்குத் தாழ்ந்து விடுகிறார்கள். இவர்களது பகட்டுப் புலமை அதிகமாய் முறைப்படுத்தப்பட்டதாய் இருக்கிறது என்பதும், இவர்கள் தமது சமூக விஞ்ஞானத்தின் அதிசய சக்தியில் வெறித்தனமான மூடநம்பிக்கை கொண்டவர்கள் என்பதும்தான் மேலே விவரிக்கப்பட்டோருக்கும் இவர்களுக்குமுள்ள ஒரே வித்தியாசம்''* என்று மார்க்சும் எங்கெல்சும் **அறிக்கையின்** மூன்றாவது அத்தியாயத்தின் இறுதியில் எழுதுகின்றனர்.

**அறிக்கையின்** இறுதி அத்தியாயத்திற்கு

---

* அதே நூல், பக்கங்கள் *96–98*.

தற்போதுள்ள பற்பல எதிர்க்கட்சிகள் குறித்து கம்யூனிஸ்டுகளின் நிலை என்று தலைப் பிடப்பட்டுள்ளது. இதுதான் மிகவும் சுருக் கமானதாகும், பிரச்சினையை முன்வைக்கும் விதத்தில் பொதுவானதாகும். விவரங்களில் இறங்காத மார்க்சும் எங்கெல்சும் இங்கு, கம்யூனிஸ்டுகள் வெவ்வேறு நாடுகளில், வெவ் வேறு போராட்டக் கட்டங்களில், தொழி லாளர் இயக்க வளர்ச்சியின் பல்வேறு மட்டங்களுக்கு ஏற்ப போர்த்தந்திரம் மற்றும் நடைமுறை தந்திரத்தை வகுக்கும் போது பின்பற்ற வேண்டிய முக்கியக் கோட் பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். இக் காரணிகள்தான் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடைமுறை அரசியல் நடவடிக்கையின் விசேஷ அம்சத்தை நிர்ணயிக்கின்றன என்பது இயற் கையே; இந்த சிறப்பியல்பிற்கு அந்தந்த நாட்டில் உள்ள திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகள் கட்டளையிடுகின்றன. கம்யூனிஸ்டு களின் நடைமுறைத் தந்திரத்திற்கும் மற்ற கட்சிகளின் பால் இவர்களின் நிலை எப்படி யிருக்க வேண்டும் என்பதற்கும் அறிக்கையின் ஆசிரியர்கள் பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, போலந்து, ஜெர்மனியை உதாரணமாகக் குறிப்பிட்டபோதிலும் இவர்கள் இந்நாடு களின் தொழிலாளர் கட்சிகளின் மீது தன் கருத்தைத் திணிக்க, தம் ''கட்டளைகளைத்'' தர முயலவில்லை. தமது போதனையை ஒருபோதும் மாற்ற இயலாத மாதிரியாகப் பயன்படுத்தக் கூடாது என்று மார்க்சும்

எங்கெல்சும் தம் வாழ்க்கை முழுவதும் பன்முறை வலியுறுத்திக் கூறினார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் நிலவரம் பல்வேறு காரணிகளைப் பொறுத்து மாறக் கூடும்; அரசியல் ரீதியாக நெளிவு சுழிவான தன்மையையும் இயக்கவியல் ரீதியான சிந்தனையையும் நிலவரத்தை சரியாக மதிப்பிட்டு, விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் முக்கிய, கோட்பாட்டு ரீதியான கருத்து நிலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நிலவரத்திற்கேற்ப பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நடைமுறை தந்திரத்தை உருவாக்கும் திறமையையும் வெளிப்படுத்த வேண்டும்.

இந்தக் கருத்து நிலைகளின் அடிப்படையில் தான் **அறிக்கையின்** ஆசிரியர்கள், பல்வேறு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்காக கம்யூனிஸ்டுகள் நடத்த வேண்டிய போராட்டத்தின் மிகப் பொதுவான கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங்களை, நலன்களை நிறைவேற்றுவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் அதே சமயம் அவர்கள் இன்றைய இயக்கத்தில், இந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் பேணிப் பாதுகாக்கின்றனர்* என்று மார்க்சியத்தின் ஆசான்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அல்லது வேறு விதமாகச் சொன்னால், கம்யூனிஸ்டு

---

* **அதே நூல்,** பக்கம் 99 பார்க்க.

களைப் பொறுத்தவரை, இன்றைய, நடைமுறைப் போராட்டத்தின் கடமைகளும் வெற்றிகளும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் இறுதி லட்சியத்தை, எதிர்கால வாய்ப்பை மூடி மறைக்கக் கூடாது. இல்லாவிடில் இன்று அடையப்பட்ட எல்லா வெற்றிகளும் தற்காலிகமானவையாக இருக்கக் கூடும், ஏனெனில் நிலவும் சமுதாய உறவுகளை அடிப்படை ரீதியாக மாற்றியமைத்தால்தான், தனியுடைமை ஆதிக்கம் செலுத்துவதை ஒழித்துக் கட்டினால்தான் தொழிலாளி வர்க்கம் (ஏன், எல்லா உழைப்பாளிகளும்) சுதந்திரமாக வாழவும் உழைக்கவும் சுதந்திரமாயும் முழுமையாயும் வளரவும் தேவையான சூழ்நிலைகள் உருவாகக் கூடும்.

பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியில் பூர்ஷ்வா வர்க்கத்தையும் பழைய நிலப்பிரபுத்துவ, எதேச்சாதிகார உறவுகளுக்கு எதிராக பூர்ஷ்வாவின் தரப்பில் நின்று போராடும் எதிர்ப்புச் சக்திகளையும் ஆதரிக்க வேண்டும் எனும் கடமையைப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னும் இதன் கட்சியின் முன்னும் வைத்த மார்க்சும் எங்கெல்சும், இந்தப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் உதவியின்றி பூர்ஷ்வா வர்க்கம் செயல்பட முடியாது எனும் நிலையை ஆதாரமாகக் கொண்டனர். இது இப்படியிருக்கும் பட்சத்தில் பூர்ஷ்வா வர்க்கம் தன் வெற்றிக்குப் பின் தன்னுடைய முந்தைய கூட்டாளிக்கு குறிப்பிட்ட ஜனநாயக சுதந்திரங்களையும் உத்திரவாதங்களையும் தரும்

கட்டாயத்திற்கு உள்ளாகிறது. ஆனால் இந்தக் கூட்டு தற்காலிகமானது என்பதையும் பாட்டாளி வர்க்கம் தான் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு எதிரானது என்று உணருகிறது என்பதையும் புரிந்து கொண்ட பூர்ஷ்வா வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உரிமைகளை இயன்ற அளவு அதிகம் பிடுங்க முயலுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தொழிலாளி வர்க்கமோ இந்த உரிமைகளை இயன்ற அளவு அதிகமாக விரிவுபடுத்தப் பாடுபட வேண்டும், ஏனெனில் இது, தன்னுடைய ஆதிக்கத்தை, எனவே உழைப்பாளிகளின் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை உறவுகளை, என்றென்றுமாக நிலைநாட்ட முயலும் வர்க்கத்திற்கு எதிராக அரசியல் போராட்டத்தை மிகத் தீவிரமாக, செயல் வன்மையாக நடத்த உதவும். எனவேதான் கம்யூனிஸ்டுக் கட்சி, ''முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள தீராப் பகைமை குறித்து'' தொழிலாளர்களுக்கு கணப்பொழுதும் ஓயாமல் சாத்தியமான அளவு உணர்வூட்ட வேண்டும்; ''முதலாளி வர்க்கம் தனது மேலாண்மையுடன் கூடவே தவிர்க்க முடியாதபடி கொண்டு வந்தாக வேண்டியிருக்கும் சமூக, அரசியல் நிலைமைகளை ஜெர்மன் தொழிலாளர்கள் அப்படியே நேராக முதலாளி வர்க்கத்துக்கு எதிரான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தும் பொருட்டு...''* இப்படிச் செய்ய வேண்டும்

* அதே நூல், பக்கம் *100*.

என்று அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

தொழிலாளி வர்க்க நலன்களுக்காக உறுதியாக, இடையறாது போராடும் ''கம்யூனிஸ்டுகள் எங்கும் தற்போதுள்ள சமூக, அரசியல் அமைப்பு முறையை எதிர்த்து நடைபெறும் புரட்சிகர இயக்கம் ஒவ்வொன்றையும் ஆதரிப்பவர்கள் ஆவர்'' *. இந்தப் போராட்டத்தின் இறுதி லட்சியத்தை, தொழிலாளி வர்க்கத்திற்கும் எல்லா உழைப்பாளிகளுக்கும் விடுதலையைப் பெற்றுத் தர வேண்டும் என்ற லட்சியத்தை இவர்கள் ஒரு நிமிடம் கூட மறக்காமல் இருப்பதால்தான் இவர்கள் எங்கும் எப்போதும் ''சொத்துடைமை பிரச்சினையைத் தலைமையான பிரச்சினையாய் முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள்'' * *, அதாவது சொத்துடைமை உறவுகளை மாற்றும் கடமையை, பொதுச் சொத்துடைமையின் மூலம் தனிச் சொத்துடைமையை மாற்றும் கடமையை முன் வைக்கின்றனர். ஏனெனில் பொதுச் சொத்துடைமையை ஏற்படுத்தி ஊர்ஜிதப்படுத்துவதுதான் உண்மையான சமத்துவம் மற்றும் விடுதலைக்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க உதவும்.

புரட்சி வேட்கையும் எதிர்கால நம்பிக்கையும் மிகுந்த பெருமிதமான வார்த்தைகளுடன் அறிக்கை முடிவடைகிறது: ''அஞ்சி நடுங்

---

* அதே நூல், பக்கம் 101.

* * அதே நூல், அதே பக்கம்.

கட்டும் ஆளும் வர்க்கங்கள், கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று. பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வென்று பெறுவதற்கோ அனைத்து உலகும் இருக்கிறது.

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' *

மார்க்ஸ், எங்கெல்சின் லட்சியங்களை மகத்தான வகையில் தொடர்ந்த வி. இ. லெனின் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** முக்கியத் துவத்தைத் தொகுத்துரைத்த போது பின்வருமாறு எழுதினார்: ''இந்த நூல் மாமேதைக்குரிய தெளிவுடனும் பெருந்திறமையுடனும் ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை விவரிக்கிறது; சமுதாய வாழ்வுத் துறையையும் தழுவி நிற்கும் முரணற்ற பொருள்முதல் வாதம், வளர்ச்சியைப் பற்றிய மிகவும் முழுமையான ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும், புதிய, கம்யூனிச சமுதாயத்தின் படைப்பாளி என்கிற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத்தைப் பற்றியும் அமைந்த ஒரு தத்துவம் ஆகியவை இந்த உலகக் கண்ணோட்டத்தில் அடங்கி

---

* அதே நூல், அதே பக்கம்.

யவை''*. எனவே ''இந்தச் சிறு பிரசுரம் மிகப் பெரிய நூல் தொகுதிகளுக்குச் சமமானது''** என்று கூற லெனினுக்கு எல்லா அடிப்படைகளும் இருந்தன.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 45.

** வி. இ. லெனின், மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள், பக்கம் 92.

அத்தியாயம் நான்கு

## கோடானுகோடி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத்திட்டம்

அறிக்கை வெளிவந்து கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டு ஆகி விட்டது. என்றாலும் இதன் ஆசிரியர்கள் 1872ல் ஜெர்மன் பதிப்பிற்கான முன்னுரையில் எழுதிய வாக்கியங்கள் இன்றும் பொருத்தமானவை: ''கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நிலைமைகள் எவ்வளவுதான் மாறியிருப்பினும் இந்த அறிக்கையில் குறிக்கப்படும் பொதுக் கோட்பாடுகள் ஒட்டுமொத்தத்தில் என்றும் போல் இன்றும் சரியானவையே...''* .

இக்கோட்பாடுகளை நடைமுறையில் பயன்படுத்துவது எங்கும் எப்போதும் திட்டவட்டமான வரலாற்று சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும் என்று மார்க்சும் எங்கெல்சும் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். உதாரணமாக, அறிக்கையில் உள்ள தனிப்பட்ட கருத்து நிலைகளை மேற்கொண்டு வளர்த்து துல்லியமாக்கக் கோரிய காரணிகள் என்ற வகையில் பெரும் தொழில்துறையின் வளர்ச்சி, 1848–1849ஆம் ஆண்டுகளின் புரட்சிகள், குறிப்பாக 1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனின் அனுபவம் ஆகியவற்றை அவர்கள் சுட்டிக்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**, பக்கம் 8.

காட்டினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இது தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் பிரச்சினையைப் பற்றியதாயிருந்தது. ''ஏற்கெனவே பூர்த்தியான தயார் நிலையிலுள்ள அரசுப் பொறியமைவைத் தொழிலாளி வர்க்கம் அப்படியே கைப்பற்றித் தனது சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது''* என்பது பாரிஸ் கம்யூனிற்குப் பின் தெளிவாயிற்று. இதை உடைத்தெறிந்து மாறுகால அரசின் அரசியல் அடிப்படையாகிய **''பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரத்தால்''**** இதை மாற்ற வேண்டியிருக்கும். இந்த மார்க்சிய முடிவின் உயிரோட்டம் பின்னால் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் (1917) நடைமுறையால், சோவியத் நாட்டில் சோஷலிசக் கட்டுமான அனுபவத்தால் மெய்ப்பிக்கப்பட்டது.

ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சியில் நிலவிய சமமின்மை அறிக்கையை எழுதியவர்கள் கூறிய இன்னொரு கருத்து நிலையிலும் மாற்றத்தைச் செய்தது. ஒரே ஒரு தனியான நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுவது இயலாதது என்று சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில்

---

* அதே நூல், அதே பக்கம்.

** K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 26.

மார்க்சும் எங்கெல்சும் கருதினார்கள். இத்தகைய புரட்சி வெற்றிகரமானதாக இருக்க ஒரே சமயம் ஒரு சில முக்கிய முதலாளித்துவ நாடுகளில் இது நடைபெற்றாக வேண்டும் என்றனர் இவர்கள். மார்க்சிய இயக்கவியல் முறையைப் படைப்பாற்றலோடு பயன்படுத்தி, புதிய கட்டத்தில் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தையும் முரண்பாடுகளையும் ஆராய்ந்த வி. இ. லெனின், முதலாளித்துவம் அழுகிப் போய் மடியும் கட்டமாகிய ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்துவ அரசுகளின் இச்சங்கிலித் தொடரின் மிகப் பலவீனமான இடத்தில் பிளவு சாத்தியமெனக் காட்டினார். ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையில் கூர்மையடைந்த முரண்பாடுகள் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கு வழிகோல வேண்டும்; ருஷ்யாதான் சோஷலிசப் புரட்சியின் முன்னோடியாகத் திகழ வேண்டியிருந்தது என்று லெனின் காட்டினார். உழைப்பாளிகளின் இளம் அரசை நசுக்குவதற்காக சர்வதேச ஏகாதிபத்தியம் செய்த முயற்சிகளுக்கு எதிரான போராட்டத்தில் முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் ஒருமைப்பாட்டு இயக்கம் புரட்சியின் நம்பகரமான கூட்டாளியாகத் திகழும். மாபெரும் அக்டோபர் புரட்சி லெனினின் இந்த மேதமை மிக்க கருத்தையும் மெய்ப்பித்தது.

வரலாற்று சூழ்நிலைகளின் மாற்றமும் வெவ்வேறு நாடுகளில் பாட்டாளிகளின்

வர்க்கப் போராட்ட நடைமுறையும் கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்த முதல் வேலைத் திட்ட ஆவணத்தின் தனிப்பட்ட கருத்து நிலைகளில் புதிய திருத்தங்களைக் கொண்டு வந்தன, இன்றும் கொண்டு வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே மாதிரி இதன் அடிப்படையான, மிகப் பொதுவான கோட்பாடுகள் மாற்றத் தகாதவை என்பதிலும் சந்தேகமில்லை; பல்வேறு நாடுகளிலும் உள்ள புரட்சிகர தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலைத் திட்டங்கள் இன்றும் இவற்றின் அடிப்படையில் தான் உருவாக்கப்படுகின்றன. பாட்டாளி வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் இன்று வரை பூர்ஷ்வா சமுதாய அரசியல் வாழ்வின் அடிப்படையாக விளங்கி வருகிறது. பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் உழைப்பாளி மக்கள் திரளினரை நம்ப வைக்க எவ்வளவு தான் பாடுபட்டபோதிலும் இச்சமுதாயத்தில் கோட்பாட்டு ரீதியான மாறுதல்கள் எதுவும் நடைபெறவில்லை. இது முன்போன்றே தனியுடைமையின் ஆதிக்கம், ஒரு சில நிதி மற்றும் தொழில்துறை முதலைகளும் வர்த்தக மன்னர்களும் மிகப் பெரும்பாலான உழைப்பாளிகளை சுரண்டி ஒடுக்குவது ஆகியவற்றின் அடிப்படையிலான சமுதாயமாக இருந்து வருகிறது. உழைப்பாளிகளின் கரங்களால் தோற்றுவிக்கப்பட்டு இவர்களிடமிருந்து அன்னியப்படுத்தப்படும், பெரும் சொத்துடை

மையாளர்களால் சுவீகரிக்கப்படும் பெரும் செல்வம் மேற்கூறியவர்களின் கரங்களில் குவிந்துள்ளது.

பூர்ஷ்வா சமுதாயத்தில் பத்தில் ஒரு பங்கு மக்களிடம் மட்டுமே தனிச்சொத்து இருக்கக் காரணம், ''பத்தில் ஒன்பது பங்கானோரிடத்தே அது இல்லாது ஒழிந்ததுதான்'' * என்று அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது குற்றஞ்சாட்டினார்கள். முதலாளித்துவத்தின் மேற்கொண்ட வளர்ச்சி இந்நிலையை உழைப்பாளிகளுக்கு ஆதரவாக மாற்றாது என்பது இவர்களுக்கு நன்றாக புரிந்தது. உண்மையில், ஒரு சிலரின் கரங்களில் தொடர்ந்து சொத்து குவிந்து வருவதானது நவீன பூர்ஷ்வா அரசுகளின் சமுதாய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பெரும் ஏகபோக மூலதனம் முழு ஆதிக்கம் செலுத்த வழிகோலுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் மக்கள்தான் நாட்டின் எஜமானர்கள் என்று பிரகடனப்படுத்துகிறது. ஆனால் மற்ற சில ஏகாதிபத்திய நாடுகளைப் போன்றே இந்நாட்டிலும் பொருளாதாரமும் அரசியலும் பெரும் நிதி, தொழில்துறை கோஷ்டிகளின் கரங்களில் உள்ளன.

மார்க்ஸ், எங்கெல்ஸ் காலத்தில் இருந்தபடியே பூர்ஷ்வா ''ஜனநாயகத்தின்'' உண்மையான தன்மை இன்றும் தனியுடைமையின்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை,** பக்கம் 69.

ஆதிக்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது (இன்று இது இன்னமும் அதிகமாகி உள்ளது), ஏனெனில் ஆட்சி உறுப்புகளுக்கான தேர்தல்கள் நடைமுறையில் ''பண மூட்டைகளின்'' போட்டியாகியுள்ளது. ''நவீன கால அரசின் ஆட்சியதிகாரமானது முதலாளி வர்க்கம் அனைத்துக்குமான பொது விவகாரங்களை நிர்வகிக்கும் குழுவே அன்றி வேறல்ல''* என்று அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் செய்த முடிவு மெய்ப்பிக்கப்படுகிறது.

முதலாளித்துவ உலகை முறையாகப் பிடிக்கும் ஆழ்ந்த, இழுபறியான நெருக்கடிகளும் அறிக்கையின் அடிப்படைக் கருத்து நிலைகள் சரியானவை என மெய்ப்பிக்கின்றன. குறிப்பாக, தானே தோற்றுவித்த மாபெரும் உற்பத்திச் சக்திகளை பூர்ஷ்வா வர்க்கத்தால் சமாளிக்க முடியாது என்று மார்க்சும் எங்கெல்சும் கூறியது இன்று நிரூபிக்கப்பட்டு வருகிறது. ''முதலாளித்துவப் பொருளுற்பத்தி, பரிவர்த்தனை உறவுகளையும் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளையும் கொண்டதாகிய நவீன முதலாளித்துவ சமுதாயம், மாயவித்தை புரிந்து தோற்றுவித்தாற் போல் இவ்வளவு பிரம்மாண்டப் பொருளுற்பத்திச் சாதனங்களையும் பரிவர்த்தனைச் சாதனங்களையும் தோற்றுவித்திருக்கும் இச்சமுதாயம், பாதாள உலகிலிருந்து தனது மந்திரத்தின் வலிமையால் தருவித்த சக்திகளை அடக்

* அதே நூல், பக்கம் 45.

கியாள முடியாமற் போன மந்திரவாதியின் நிலையில் இருக்கக் காண்கிறோம். கடந்த சில பத்தாண்டுகளது தொழில், வாணிப வரலாறே நவீன பொருளுற்பத்தி சக்திகள், நவீன பொருளுற்பத்தி உறவுகளை எதிர்த்து, முதலாளி வர்க்கமும் அதனுடைய ஆதிக்கமும் நிலவுவதற்கு அவசியமான நிலைமைகளாகிய சொத்துடைமை உறவுகளை எதிர்த்துப் புரிந்திடும் கலகத்தின் வரலாறுதான்.'' *

இந்த வார்த்தைகள் இன்றும் சரியானவை, ஏனெனில் முதலாளித்துவ சமுதாயத்தின் முக்கிய முரண்பாடு, அதாவது உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் தனியுடைமை சுவீகரிப்பு வடிவத்திற்கும் இடையிலான, மாபெரும் உற்பத்திச் சக்திகளுக்கும் இவற்றிற்கு விலங்கிடும் பூர்ஷ்வா, தனியுடைமை உறவுகளின் வரம்புகளுக்கும் இடையிலான முரண்பாடு இவ்வார்த்தைகளில் துல்லியமாகப் பிரதிபலிக்கிறது.

வேலையில்லா திண்டாட்டத்தின் அதிகரிப்பு இன்றைய பூர்ஷ்வா சமுதாயத்தின் தீர்க்க இயலா கேடாகியுள்ளது. முக்கிய முதலாளித்துவ நாடுகளில் இது குறிப்பாகப் பெரிதும் பரவியுள்ளது.

சோஷலிச நாடுகளின் நிலவரம் பெரிதும் மாறுபட்டு நிற்கிறது. இங்கே நெருக்கடிகளோ, தொழில்துறை உற்பத்தியில் வீழ்ச்சிகளோ கிடையாது, வேலையில்லா திண்

* அதே நூல், பக்கம் 51.

டாட்டம் இல்லை. உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துடைமையை அகற்றி விட்டு பொதுச் சொத்துடைமையை நிலை நாட்ட வேண்டும் என்பதற்கு, சுரண்டலாளர் களின் ஆட்சியை வீழ்த்தி விட்டு உழைப் பாளிகளின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு இது மட்டுமே பலத்த ஆதாரமாக இருக்கவில்லையா! இந்தக் காரணிகள்தான், உண்மையிலேயே மக்களிடம் ஆட்சியதிகாரம் நிலவும் அரசுகளில் நிலையான உயர்ந்த வளர்ச்சி வேகங்களுக்கு வகை செய்யவும் தேசிய வருமானத்தை நியாயமாகப் பகிர்ந் தளிக்கவும் தம் நாட்டு மக்களின் வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகளை மேம் படுத்தவும் உதவுகின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை உட்பட தம் படைப்புகளில் மார்க்சும் எங்கெல்சும், முதலாளித் துவத்தால் நெருக்கடிகளின்றி நிலவ முடியாது என்றும் ஒவ்வொரு நெருக்கடியும் கோடிக் கணக்கான உழைப்பாளிகளை, குறிப்பாகத் தொழிலாளிகளை விழித்தெழச் செய்து போராட்டத்திற்குக் கொண்டு வருகிறது என் றும் பன்முறை சுட்டிக்காட்டினார்கள். நெருக் கடியின் எல்லா சுமைகளையும் உழைப் பாளிகளின் தோள்களில் சுமத்த பூர்ஷ்வா வர்க்கம் முயலும் போது அது அவர்களின் கடுமையான, மேன்மேலும் அதிகரிக்கும் எதிர்ப்பை ஏற்படுத்துகிறது. விலைகளும் பணவீக்கமும் அதிகரிக்க, சமுதாயத் தேவை களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைவதை

(இந்த விஷயத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, மற்ற வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுவது போல் செயல் படுகின்றன), உண்மை ஊதியம் குறைவதைத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ள விரும்ப வில்லை. முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க இயக்கத் தொண்டர்கள், தலைவர்கள் மீது போலீ சாரும் பூர்ஷ்வா அரசாங்கங்களும் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டபோதிலும் ஆண்டுதோறும் வேலைநிறுத்தப் போராட்டம் வலுத்து வருகிறது. குறிப்பாக இப்படிப்பட்ட காலகட்டங்களில் தொழிலாளி வர்க்கத்தின் உணர்வு விரைவாக வளருகிறது, இந்த வர்க்கம் புரட்சிகரத் தன்மையைப் பெறுகிறது. **அறிக்கையில்** கூறப்பட்டுள்ள கருத்து நிலைகள் எவ்வளவு நியாயமானவை என்பதை நவீன காலத்தின் மிக முற்போக்கான வர்க்கம் மேன்மேலும் அதிகமாக உணருகிறது: தனியுடை மையை, இதன் ஆதிக்கத்தை ஒழிக்காமல், நிலவும் சமுதாய அமைப்பை மாற்ற முடியாது; பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான, சமரச மற்ற வர்க்கப் போராட்டம் இல்லாமல் தனியுடைமையையும் இதன் அடிப்படையிலான சமுதாயத்தையும் ஒழிக்க முடியாது.

இவையெல்லாம் உண்மை என்பதை இந் நூலின் வாசகர்கள் கூறக் கூடும். **அறிக்கையின்** அடிப்படைக் கருத்து நிலைகள் உலக முதலாளித்துவத்தின் இன்றைய நிலையையும்

முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் வர்க்கப் போராட்டத்தையும் நன்கு விளக்குகின்றன. ஆனால் இதற்கும் கிழக்கத்திய நாடுகளுக்கும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களுக்கும் என்ன சம்பந்தம்? இன்றைய உலகில் இவர்களின் நிலைக்கு, தேசிய, பொருளாதார, சமூக விடுதலைக்காக இவர்கள் நடத்தும் போராட்டத்திற்கு விசேஷ அம்சங்கள் கிடையாதா? இந்த நாடுகளின் வளர்ச்சி பற்றி, இந்நாடுகளில் உள்ள மக்களின் இயக்கங்கள் பற்றி அறிக்கையில் ஏதாவது கூறப்பட்டுள்ளதா என்ன?...

இவை சாதாரணமான கேள்விகள் அல்ல. இவற்றிற்குப் பதிலளிக்க, வளர்முக நாடுகளின் நிலவரத்தையும் மார்க்சியக் கருத்து நிலைகளையும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு எவ்வளவுதான் விசேஷ அம்சங்கள் இருந்தபோதிலும் மார்க்சியத்தின் இந்தக் கருத்து நிலைகளைக் கொண்டு இவற்றின் சிக்கலான தன்மைகளையும் முரண்பாடுகளையும் ஆராயலாம். ஏகாதிபத்தியத்தின் நவீன ஆதரவாளர்கள், குறிப்பாக கிழக்கத்திய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் யாருக்கெல்லாம் பிடிக்கவில்லையோ அவர்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மனநிலை வலுத்து வரும் அதே சமயம், ஏதோ மார்க்சின் போதனை இந்நாடுகளுக்கு ஒத்துவராது

என்று கூறும் படைப்புகளும் மேன்மேலும் அதிகமான எண்ணிக்கையில் தோன்றுகின்றன. ஐரோப்பாவின் அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இப்போதனை யால் இந்நாடுகளில் உள்ள சொத் துடைமை வடிவங்களையும் வளர்ச்சியின் பல சிறப்பு அம்சங்களையும் ஏதோ விளக்க முடியாதாம், இந்நாடுகளில் நடைபெறும் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களின் தத்துவார்த்த அடிப்படையாகத் திகழ முடியா தாம்.

நிச்சயமாக ஒரு சிறு நூலில் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளின் இந்தக் கருத்திற்கு விரிவான விமரிசனத்தைத் தர முடியாது. ஆனால், உலக புரட்சிப் போக்கின் ஒரு பகுதிதான் தேசிய விடுதலை இயக்கம் எனும் கருத்தமைப்பு விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தில் முக்கிய இடம் வகிக்கிறது என்பதை முதலில் கூற வேண்டும். மார்க் சியத்தைப் பற்றிப் பேசும் பூர்ஷ்வா ''விமரி சகர்கள்'' இதை அப்பட்டமாக நிராகரிக் கின்றனர். இது தவிர, மார்க்ஸ் கண்டுபிடித்த முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் விதிகள், இந்த அமைப்பின் முரண்பாடுகள் உலக முதலாளித்துவ வட்டத்திற்குள் இழுக் கப்படும் வளர்முக நாடுகளிலும் மேன்மேலும் தெளிவாகத் தென்படுகின்றன. இதில் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உள் முரண்பாடுகள் தேசிய வரம்புகளை விட்டு வெளிவந்து பெரிதும் கூர்மையடைகின்றன.

பன்னாட்டு கார்ப்பரேஷன்கள் என்றழைக்கப் படுபவை இயங்கும் இடங்களில் இது மிக நன்றாகத் தெரிகிறது.

பூர்ஷ்வா வர்க்கம் "அநாகரிக நிலையிலும் குறை நாகரிக நிலையிலும் உள்ள நாடுகளை நாகரிக நாடுகளையும், விவசாயிகளது நாடு களை முதலாளிகளது நாடுகளையும், கிழக்கு நாடுகளை மேற்கு நாடுகளையும் சார்ந் திருக்கச் செய்துள்ளது"* என்று **கம்யூனிஸ்டு அறிக்கையில்** மார்க்சும் எங்கெல்சும் எழுதினார் கள். முன்னர் பின்தங்கியிருந்த நாடுகளின் மக்கள் இச்சார்புநிலையின் காலனி வடிவங் களை 60–70ஆம் ஆண்டுகளில் தூக்கியெறிந் தனர், இன்று இவர்கள் அரசியல் சுதந்திரத் திற்காக மட்டுமின்றி பொருளாதார சுதந் திரத்திற்காகவும் தீவிரமாகப் போராடி வருகின்றனர். ஆனால் இந்நாடுகளை மூலப் பொருட்களும் மலிவான உழைப்புச் சக்தியும் கிடைக்கும் இடமாகக் கருதும் ஏகாதிபத்தியம் பின்வாங்கத் தயாராயில்லை. வளர்முக நாடுகளைப் பொருளாதார ரீதியாக அடிமைப் படுத்த மேன்மேலும் புதிய, நுணுக்கமான முறைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன, இவற்றின் உதவியால் இந்நாடுகளை ஏகாதிபத்தியத்தின் அரசியல் செல்வாக்கு மண்டலத்தினுள் இழுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஆப்பிரிக்கா தனது நூற்றாண்டு கால பின்தங்கிய நிலையிலிருந்து மீண்டு வரத்

---

* அதே நூல், பக்கங்கள் 49–50.

தன்னால் அறவே உதவ முடியாது என்பதை முதலாளித்துவம் காட்டி விட்டது. 70–80ஆம் ஆண்டுகளில் ஆப்பிரிக்காவில் உணவுப் பொருள் நெருக்கடி கணிசமாகக் கூர்மையடைந்துள்ளது. ஆப்பிரிக்க மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் வயிறு நிறைய உண்பதில்லை, அல்லது பட்டினி கிடக்கின்றனர். பொதுவாகப் பார்த்தால் இன்று வளர்முக நாடுகளில் உள்ள மொத்த மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்குக்கும் மேற்பட்டோர் (450 மில்லியன்) உட்கொள்ளும் உணவின் அளவு வாழத் தேவையான குறைந்தபட்சத்தை விட குறைவாக உள்ளது, அதாவது இவர்கள் அரை வயிறுதான் சாப்பிடுகின்றனர்.

எனவே இச்சூழ்நிலைகளில், நவீன காலனியாதிக்கத்திற்கு எதிராக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் போராட்டம் வலுத்து வருவது இயற்கையே. இக்கண்டங்களில் உள்ள நாடுகளின் மக்கள் முதலாளித்துவத்தை, வெறுக்கத்தக்க காலனியாதிக்கத்துடன் தொடர்புடைய அமைப்பு என்ற வகையில் மட்டுமின்றி, கடுமையான சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாத, பல சமயங்களில் இவற்றை ஆழப்படுத்தக் கூடிய சமுதாய அமைப்பு என்ற வகையிலும் நிராகரிக்கத் துவங்குகின்றனர். இதனால் விடுதலையடைந்த நாடுகளின் மக்களை உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கில் ஈடுபடுத்துவது வலுப்படுகிறது, இதில் இவர்களின் பங்கு அதிகரிக்

கிறது. சில ஆப்பிரிக்க, ஆசிய அரசுகளில் சமூக பதட்ட நிலை அதிகரிப்பதானது புரட்சிகர மாற்றங்களுக்கு முன்னரை விட அனுகூலமான முன்தேவைகளை ஏற்படுத்து கிறது.

முடிவில் உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கில் இரண்டு சக்தி மிக்க பெருக்குகள் — தம் பொருளாதார சுதந்திரத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் வளர்முக நாடுகளின் உழைப்பாளிகள் நடத்தும் போராட்டமும் ஏகபோகங்களுக்கு எதிராக, சமுதாயத்தின் உண்மையான ஜனநாயக மாற்றத்திற்காக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கமும் பாட்டாளிகள் அல்லா உழைப்பாளிப் பிரிவினரும் நடத்தும் போராட்டமும் — ஒன்றிணைகின்றன. மார்க்சும் எங்கெல்சும் முன்னூகித்தபடியே உழைப்பாளிகளின் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்கள் ஒன்று கலக்கின்றன; உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நிற்கும் எல்லா அணிகள், சக்திகளின் போராட்டத்திலும் தேசிய மூடுதன்மையும் பிளவும் அகற்றப்படுகின்றன என்று இதற்குப் பொருள்.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் விடுதலை இயக்கப் போக்குகள் சிக்கலானவை, முரண்பாடானவை. இவற்றில் எழுச்சிகள் மட்டுமின்றி, சோகமயமான தோல்விகளும் பின்வாங்கல்களும் ஏற்படுகின்றன. இங்கே இன்னமும் உருவாகிக் கொண்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் பலவீனம், குட்டி

பூர்ஷ்வா வர்க்கத்தினரின் (இந்நாடுகளில் இவர்கள் எண்ணிக்கையில் கணிசமானவர் கள்) ஸ்திரமின்மை ஆகியவை இதற்குப் பெரிதும் காரணங்களாகும். ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பாட்டாளி வர்க்கம் விவசாயி களுடனும் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தினருடனும் ஆயிரக்கணக்கான இழைகளால் பின்னிப் பிணைபட்டுள்ளது என்பதை மறக்கக் கூடாது. இந்தக் குட்டி பூர்ஷ்வா பிரதிநிதிகள்தான் பெரும்பாலும் தேர்ச்சி மிகு தொழிலாளர் களாகின்றனர். எனவே இவர்கள் தமது குட்டி உடைமை மனநிலையையும் பாட்டாளி வர்க்கத்திற்கு சொந்தமற்ற கருத்துகளையும், ஏன் அவ்வப்போது அரசியல் தீவிரவாதத் தையும் தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு வருவது இயற்கையே. இதன் தொடர்பாக, இந்நாடுகளில் உள்ள தொழிலாளர் இயக்கத் தின் சித்தாந்தத் தூய்மையையும் ஒற்றுமையை யும் செயல்முனைப்பையும் பாதுகாக்கும் பிரச்சினை இந்நாடுகளின் வர்க்கப் போராட் டத்திற்குப் பெரிதும் முக்கியமானதாகும். **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையைப்** படிப்பவர்கள் இந்த விஷயமாக மூன்றாவது அத்தியாயத்தில் பாட்டாளி வர்க்கத் தன்மையற்ற சோஷலிசத் தின் பல்வேறு போக்குகள் குறித்து தரப்பட் டுள்ள விமரிசனத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

தன் நடவடிக்கையில் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தை வழிகாட்டியாகக் கொண்டு நடக்கும் ஒரு கட்சியை சித்தாந்த மற்றும்

அரசியல் முன்னணிப் படையாகக் கொண்டால் தான் வரலாறு தன் முன் வைத்துள்ள கடமைகளைத் தொழிலாளி வர்க்கத்தால் நிறைவேற்ற முடியுமென மார்க்சும் எங்கெல்சும், பின்னர் லெனினும் சுட்டிக்காட்டினார்கள். விஞ்ஞான சோஷலிசக் கருத்துகளின் செல்வாக்கு விரிவடைய விரிவடைய, தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நிலைகள் வலுவடைய வலுவடைய வளர்முக நாடுகளில் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் எண்ணிக்கை, இவற்றிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை இடையறாது வளர்ந்து வருகிறது.

வளர்முக நாடுகளில் உள்ள முற்போக்கு மனிதர்களின் கவனத்தை மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் மேன்மேலும் கவர்ந்து வருகிறது. முதலாளித்துவ பொருளாதார முறை இந் நாடுகளை இட்டுச் செல்லும் முட்டுக்கட்டான நிலையிலிருந்து மீள பூர்ஷ்வா சித்தாந்த வாதிகளால் வழிகாட்ட முடியாதது மட்டும் மனிதர்களின் மீதான இச்சித்தாந்தத்தின் தாக்கத்திற்கும் இந்தத் தாக்கம் அதிகரித்து வருவதற்கும் காரணமல்ல. சோவியத் கிழக்கத்திய குடியரசுகளிலும் கியூபாவிலும் சோஷலிசக் கட்டுமானம் வெற்றிகரமாக நடைபெற்றதும் சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சோஷலிசத் திசைவழியைத் தேர்ந்தெடுத்ததும் இளம் வளர்முக அரசுகளுக்கு மார்க்சிய-லெனினியக் கருத்துகளின் உயிரோட்டத்தையும் இவற்றை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மட்டுமின்றி பொருளாதார

ரீதியாகப் பின்தங்கிய நாடுகளிலும் பயன்படுத்த முடியும் என்பதையும் மெய்ப்பித்தன.

விஞ்ஞான கம்யூனிச ஆசான்களின் படைப்புகள் உலகெங்கும் மேன்மேலும் பரவலாகப் பிரசுரிக்கப்படுவதும் இவற்றின் மீதான ஆர்வம் வளர்ந்து வருவதும் தற்செயலானதல்ல. உதாரணமாக, இன்று **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** மட்டும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பெயின், ஜெர்மன், அரேபிய மொழிகளிலும் பல்வேறு இந்திய மொழிகள், ஆப்பிரிக்க மொழிகள், இன்ன பிற மொழிகளிலும் ஏராளமான பதிப்புகளில் வெளிவந்துள்ளது. **அறிக்கையின்** பயனாய், தமது விடுதலைக்காகவும் நியாயத்திற்காகவும் தாம் நடத்தும் போராட்டத்தின் இறுதி வெற்றி மீது மக்களுக்குள்ள நம்பிக்கை உறுதியான, விஞ்ஞான அடிப்படையைப் பெறுகிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை — 600098*

**ஷோ-ரூம்**

*136, அண்ணாசாலை, சென்னை — 600002*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001*
*3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018*
*42 / 7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008*
*செர்ரி ரோடு, சேலம் — 636001*

**விற்பனை நிலையங்கள்**

*3-22-75-D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன் — 627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001*

முன்னேற்றப் பதிப்பகம், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள், கட்டுரைகளோடு கூட மார்க்சிய-லெனினிய ஆசான்களின் படைப்புகளைப் பற்றிய எளிய விளக்க நூல்களையும் வெளியிடுகிறது.

சோவியத் வரலாற்று அறிஞரும் கட்டுரையாளருமான வி. சஸோனவ் எழுதிய இந்நூலில் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** எத்தகைய வரலாற்றுச் சூழ்நிலைகளில் தோற்றுவிக்கப்பட்டது என்று விளக்கப்பட்டுள்ளது, இதன் சாரம் தரப்பட்டுள்ளது, இன்று இந்நூல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.